stered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel

யாழ். நகரின் மத்தியில் புதுப் பொலிவுடன் முற்றிலும் குளிரூட்டப்பட்டது.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விசேட விலைகளில் BBQ

(C/1615)

தொடர்பு: 0771064385 0776943479 70/6, K.K.S. Road, JAFFNA

-02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 17 ஞாயிற்றுக்கிழமை (01.07.2012) பக்கங்கள் 20 ஓசை - 274



தமிழ் மக்களின் நலனுக்கு... 05



ஊடகங்களை அச்சுறுத்த முயற்சி 06



சுவிஸ் தேசிய அணியில் 09



உடல் புதைக்கப்படுமா? 11



வழக்கில் தப்ப யாகம் 17

# பட்டதாரி பயிலுநர்களாக 2047 பேருக்கு நியமனம்

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை வைபவம்

(யாழ்ப்பாணம்)

ாழ். மாவட்டத்தில் இதுவரை வேலை ப்பு இல்லாமல் இருந்த சுமார் 2047 ாரிகளுக்கு பட்டதாரிப் பயிலுநர் னம் வழங்கப்படவுள்ளது.

ாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை ட்கிழமை மு.ப. 9.00 மணிக்கு இடம் பெறவுள்ள பட்டதாரிகள் பயிலுநர்களுக் கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட வுள்ளது. நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொள்ள வரும்போது சம்பந்தப்பட்ட பட்டதாரிகள் தமது தேசிய அடையாள அட்டைகளையும், நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்குமாறு கோரி அரசாங்க அதிபரினால் அனுப்பிவைக்கப்பட்ட கடி தத்தையும் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2011 ஆம் ஆண்டுக்கு முன்னர் பட்ட தாரிகளாகத் தராதரம் பெற்ற அனைவ ருக்கும் இந்த பயிலுநர் நியமனம் வழங் கப்படவுள்ளது.

## சிறைக்கூடத்தில் செய்மதித் தொலைபேசி

(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான யோசனை நிறைவேற்றப்பட்ட பின்னரே, வவுனியா சிறையில் உள்ள புலிகளின் முன்னாள் தலைவர்கள் 5 பேர் உட்பட 321 புலி உறுப்பினர்கள் உத்வேகமடை ந்து சிறைச்சாலையில் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருவதாக வடபகுதியில் உள்ள சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார் என திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை சசி, ருவான், ருக்ஷான், கண்ணன், குருதரன் ஆகிய புலித் தலை வர்களிடம் செய்மதித் தொலைபேசிகள் இருப்பதாகவும் அவற்றின் மூலம் அவர் கள் இராணுவத்தினருக்கு எதிராக

19 ஆம் பக்கம் பார்க்க

# இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்நாட்டிலேயே சாத்தியம்

## ந்திய உதவி எப்போதும் தொடரும் என்கிறார் மேனன்



(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சி னைக்கு ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டுக்குள் தீர்வை அந்த நாட்டிலேயே தீர்வை எட்டு வதற்கும் இனங்களுக்கு இடை யில் நல்லிணக்கத்தை ஏற்படுத் துவதற்கும் தேவையான அனை த்து உதவிகளையும் தொடர்ந்து வழங்குவதற்கு இந்தியா எப்போ தும் தயாராக இருப்பதாக இந்தி யப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் தெரிவித்துள்ளார.

இந்தியா எப்பொழுதும் இலங் கைவாழ் அனைத்து மக்களுக் கும் சமனான, கௌரவத்தையும், உரிமைகளையும் வழங்கும் ஐக் கிய இலங்கையையே எதிர்பார ப்பதாக இந்திய பாதுகாப்பு ஆலோ சகர் சிவ்சங்கர் மேனன் தெரிவித் துள்ளார். இலங்கைக்கான உத்தி யோகபூர்வ விஜயம் ஒன்றை மேற கொண்டு கொழும்பு வந்து திரு ம்பிய பின்னர் செய்தியாளர் சந்திப்பின் போதே இதனைத்

19 ஆம் பக்கம் பார்க்க

# பட்டதாரிகள் அனைவருக்கும் பயிலுநர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ். பட்டதாரி மாணவர்க ளுக்கு எதிர்வரும் 2 ஆம் திகதி நியமனங்களை வழங்க பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிரு த்தி அமைச்சர் டக்ளஸ் தேவான ந்தா நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் பிரகாரம் நேர்முகப் பரீட் சைக்குத் தோற்றியுள்ள பட்டதாரி மாணவர்களுக்கு நியாயமான முறையில் இந்த நியமனங்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

# சவத்தின் போது மரணங்கள் ர்மம் குறித்து விசாரணை

(யாழ்ப்பாணம்)

ாழ். போதனா வைத்தியசா பில் பிரசவத்தின் போது மர கும் தாய்மார்கள் குறித்து வரும் 4 ஆம் திகதி யாழ். ான் நீதிமன்றில் விசாரணை கொள்ளப்படவுள்ளது. யாழ். னா வைத்தியசாலையில் மாதம் பிரசவத்தின் போது 5 தாய்மார் மரணமடைந்தது தொடர்பாக திடீர் மரண விசார ணை அதிகாரி எம்.உதயசிறி யாழ். நீதவான் நீதிமன்றில் அறி க்கை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் மற்றும் வைத்திய அதிகாரிகளிடம் விசாரணை மேற கொள்ளப்படவுள்ளது. (எஸ்)

# அச்சுவேலி மூலிகைத் தோட்டத்தில் சித்த மருத்துவ மாநாடு

வடமாகாண சுதேச மருத்து வத் திணைக்களத்தினரால் 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இரண்டாம் வாரமளவில் அச்சு வேலியில் உள்ள நவக்கிரி அரச மூலிகைத் தோட்ட வளாகத்தில் சித்த மருத்துவ மாநாடும், சித்த மருத்துவ மூலிகைக் கண்காட்சி ஒன்றும் நடத்துவதற்கான ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடமாகாண சுதேச மருத்து வத் திணைக்களத்தினரின் ஏற் பாட்டில் நடைபெறவிருக்கின்ற இந்த நிகழ்வில் அகில இலங் கையிலிருந்து கண்காட்சிக்கான பொருட்கள் பார்வைக்கு வைக் கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் மூலிகைத் தோட டக் கண்காட்சி, சித்தமருத்துவத் தின் சிறப்புக்களை வெளிக்கொ ணரும் வைத்திய முறைகள்

19 ஆம் பக்கம் பார்க்க

# ஆஸிக்கு ஆட்கடத்தும் படகு கடற்படை வலையில் சிக்கியது

அவுஸ்ரேலியா நோக்கி சென்றுகொண்டிருந்த, மீன்பிடி றோலர் படகொன்றை நீர்கொழும்பில் வைத்து கடற்படையினர் வழிமறித் துள்ளனர். இப்படகில் 9 இலங்கையர்கள் இருந்ததாகவும் அவர்கள் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்குச் செல்வதை இலக்காக கொண்டிருந்ததாகவும் கடற்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. இப்பயணத்தின்போது மேலும் பயணிகள் வெவ்வேறு இடங்களி லிருந்து ஏற்றப்படவிருந்ததாக

19 ஆம் பக்கம் பார்க்க

# த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ந்தியா தொடர்ந்தும் உதவவேண்டும்

ந்தியா எமது நட்பு நாடு. அந்நாட்டு அரசாங்கம் யுத்தத்தால் க்கப்பட்ட எம் மக்களின் அரசியல் நலனிலும் வாழ்வியல் பாட்டிலும் மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றது. வகையில் இந்திய அரசாங்கம் எமது மக்களுக்கு வழங்கும் த் திட்டங்களை நாம் நன்றியுடன் வரவேற்கின்றோம் என .பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் வருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

ாழ். வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் இந்திய அர த்தால் வழங்கப்பட்ட 125 துவிச்சக்கர வண்டிகளை நேற்றைய மக்களுக்கு வழங்கியபின் உரையாற்றும் போதே அவர் றது தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், முடிவுக்கு கொண்டுவரப்பட்டு மக்கள் மீள்குடியேற்றப்பட்ட இந்திய அரசாங்கமே

19 ஆம் பக்கம், பார்க்க



# புனர்வாழ்வு கோரி 700 கைதிகள் விண்ணப்பம்

(கொழும்பு)

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் தடு த்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 700 தமிழ்க் கைதிகள் தமக்கு புனர்வாழ்வு அளித்து தம்மை விடுதலை செய்யும்படி விண் ணப்பித்துள்ளனர்.

இதனடிப்படையில் சந்தேகத் தின் பேரில் கைது செய்யப் பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளை தமது விருப்பின் பேரில் புனர்வாழ்வளித்து விடு தலை செய்ய தீர்மானிக்கப்பட் டிருப்பதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு

19 ஆம் பக்கம் பார்க்க

# முதலி கோவிலடி கொலை வழக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி தீர்ப்பு

(திருநெல்வேலி)

வட்டுக்கோட்டை முதலி கோவிலடி கொலை வழக்கின் தீர்ப்பு யாழ். மேல் நீதிமன்றினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரிகள் தரப்பு சட்டத்தரணிகளும் அரச தரப்பு சட்டத்தரணியும் தமது தொகுப்புரைகளை நிகழ்த்தினர்.

இவ்வழக்கில் 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி வட்டுக்கோட்டை முதலி கோவிலடி என்னுமிடத்தில் செல்வராசா உதயகுமார் (வயது - 23) என்பவரை கொலை செய்ததாகவும், அவரது மனைவி உதயகுமார் மேனகா, மைத்துனி பிரபாகரன் மஞ்சுளா ஆகியோருக்கு காயம் விளைவித்ததாகவும், சின்னையா சிவராசா, சின்னையா செல்வராசா, சின்னையா சிவகுமார், அப்புத்துரை அகிலேஸ்வரன், சின்னையா சிவநேசன் ஆகிய 5 நபர்கள் மீது சட்ட மா அதிபரினால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

நான்காம் எதிரியைத் தவிர ஏனைய எதிரிகள் சகோதரர்களாவர். நான்காம் எதிரி அவர்களது மைத்துனராவார்.

வழக்கு விசாரணையின் போது கொலையுண்டவரின் மனைவி உதயகுமார் மேனகா, மைத்துனி பிரபாகரன் மஞ்சுளா, சகோதரி கணேசலிங்கம் சின்னம்மா, தாயார் செல்வராசா சரஸ்வதி ஆகியோர் சாட்சியமளித்தனர். உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையை வைத்திய கலாநிதி கந்தையா இரத்தினசிங்கம் சமர்ப்பித்திருந்தார்.

இறந்தவரது மூளை சிதைவடைந்திருந்ததால் மரணம் ஏற்பட்டது எனவும் தலையில் மொட்டையான ஆயுதத்தால் தாக்கியதினால் ஏற்பட்ட காயம் என்றும் மண்டையோடு உடைந்து அழுத்தப்பட்டதினால் குருதிப் பெருக்கு ஏற்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எதிரி தரப்பில் முன்னாள் மல்லாகம் நீதவன் பாலசிங்கம் பாலசுப்பிரமணியம் சாட்சியாக அழைக்கப்பட்டு சாட்சியமளித்தார். இறந்தவராலும், வேறு சிலராலும் தாங்கள் தாக்கப்பட்டதாக முதல் 3 எதிரிகளும் தன்னிடம் தெரிவித்தார்கள் என அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

இரு தரப்பு சாட்சிகளும் முடிவடைந்ததையடுத்து சட்டத்தரணிகளின் தொகுப்புரை இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து வழக்கை நீதிபதி எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு தீர்ப்புக்காக ஒத்திவைத்தார்.

1,3,4,5 ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும், 2 ஆம் எதிரி சார்பில் சட்டத்தரணி கே.பி. எஸ்.வரதராஜாவும் ஆஜராகினர். அரச தரப்பில் அரச சட்டவாதி வி.திருக்குமரன் ஆஜரானார். (137)

# கடை உடைத்து திருடியவர்களுக்கு ஆறு மாத கடூழியச் சிறை

(திருநெல்வேலி)

கடை உடைத்து திருடிய 2 நபர்களுக்கு யாழ். நீதவான் மா.கணேசராஜா தலா 6 மாத கால கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

கடந்த திங்கட்கிழமை (25.06.2012) இவ்வழக்கு யாழ். நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது இத்தண்டனை வழங்கப்பட்டது.

கடந்த வருடம் 13 ஆம் திகதி ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள கடை ஒன்றை உடைத்து 22 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான ரயர், ரியூப் மற்றும் பித்தளைக் கம்பிகளை திருடியதாக மானிப்பாய் வீதி, முருகமூர்த்தி வீதி, வவுனியா- சிதம்பரபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மூவர் மீது யாழ்ப்பாணப் பொலிஸார் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இம்மூவரில் வவுனியா - சிதம்பரபுரத்தைச் சேர்ந்த நபர் மரணமடைந்து விட்டார். ஏனைய இருவருக்கும் எதிராக யாழ். நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து நடைபெற்று வந்தது.

கடந்த திங்கட்கிழமை (25.06.2012) வழக்கு விசாரணையின் போது குற்றவாளிகளாகக் கண்ட நீதவான் இவர்களுக்கு கடூழிய சிறைத்தண்டனை விதித்தார். களவாடப்பட்ட பொருட்கள் மீளப்பெறப்பட்டு கடை உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (137,எஸ்)

# வருடாந்த நவநாள் உற்சவம் ஆரம்பம்



(பச்சிலைப்பள்ளி)

புல்லாவெளி, புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த நவநாள் கொடியேற்றம் இன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும்.

5 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நவநாள் ஆராதனைகள் மாலை 5.00 மணிக்கு செபமாலையுடன் தொடங்கும்.

7 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நற்கருணை ஆராதனை மற்றும் சுற்றுப் பிரகாரம் என்பன நிகழும்.

8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு பங்குத்தந்தை அருட்திரு எம்.யேசுரட்ணம் அடிகள் தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி நடைபெற்று ஆசீர் வழங்கலுடன் திருநாள் கொண்டாட்டம் நிறைவடையும்.

மேற்படி திருநாளை முன்னிட்டு விசுவாசிகள் ஆலயத்திற்கு வந்து செல்லும் விதமாக காலை 8.00 மணி, நண்பகல் 12.00 மணி மற்றும் மாலை 4.00 மணி ஆகிய நேரங்களில் 5 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் பங்குத்தந்தை தெரிவித்துள்ளார். (68)

# விபத்து மரணங்கள் கிளிநொச்சியில் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரை ஏற்பட்ட விபத்துக்களில் சிக்கியவர்களில் 15 வீதமானவர்கள் மரணமடைந்துள்ளனர் என்று பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு விபத்துக்களில் சிக்குவோரில் 10 வீதம் பேருக்கு பெரும் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸ் திணைக்களத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோர், வயது குறைந்தோர் வாகனம் செலுத்துவோர் குறித்தும் மக்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கையும் கிளிநொச்சி பொலிஸ் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (77)

## கந்தவன கல்யாண வேலவ சுவாமி இன்று சப்பறத் திருவிழா



வங்கக் கடல் அருகினிலே கந்தவனப் பெருமானே – எங்கள்
சங்கடங்கள் நீக்கிவிட வந்தருளாயோ
கற்பூர வாசனையில் கல்யாண வேலவனே – நீயும்
அற்புதங்கள் காட்டி மகிழ வைக்காயோ
சப்பறத் திருவிழாவில் வன்னிமரநாதனே – நீயும்
நாற்புறமும் வரும் பக்தரை நலமுடனே காத்திடையா
முப்பெரும் சிறப்பு மிக்க பொலிகைப் பதியிலே – தாமரை
தட்பத்திலே அழகுற நின்றவனே
அஞ்சி வரும் அடியார்களுக்கு ஆறுதல் தந்திடவா – ஆறுமுகனே
காஞ்சி மாங்கனியுண்டு பிள்ளை பேறு தந்தவனே
பச்சை மயில் வாகனனே பறந்தோடி வா – வேலவனே
தஞ்சம் என வரும் அடியார்க்கு கேட்டவரம் தந்திடையா

- பொலிகையூர் விசிந்தன்

# கிளிநொச்சியில் விசேட பொலிஸ் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று நடமாடும் சேவை இடம்பெற்றது. பிறப்பு, இறப்பு, திருமணம், சாரதி அனுமதிப்பத்திரம் பெறும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. பொலிஸாரின் இரசாயனப் பிரிவினரின் விசேட காட்சியும் இடம்பெற்றது.

இதில் யாழ், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அதிகாரி நீல் தலுவத்த, கிளிநொச்சி பொலிஸ் அதிகாரி சாலிக சில்வா, கரைச்சி பிரதேச பொலிஸ் அதிகாரி சேனாதீர ஆகியோர் கலந்துகொண்டனர்.

500 இற்கும் மேற்பட்ட மக்கள் இந்த நடமாடும் சேவை மூலம் பயன்பெற்றனர். 50 பேருக்கு இலவச திருமணப் பதிவும் இடம்பெற்றது. கல்வித் திணைக்கள அதிகாரிகள், மருத்துவ அதிகாரி உட்பட பலர் கலந்துகொண்டனர். (77)

## யாழ். வைத்தியசாலை முறைகேடு இரண்டாம் கட்ட விசாரணை நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் ஊழல் தொடர்பாக 2 ஆம் கட்ட விசாரணை நாளை வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

டி.டி.ஜி (எம்.எஸ்) அதிகாரி டாக்டர் ஆனந்த குணசேகர தலைமையில் விசாரணை இடம்பெறவுள்ளது. இந்த விசாரணையில் அரச மருத்துவ சங்கத்தினரும் இணைந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எஸ்)


## பளை
## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

01. பதவி :- பொது முகாமையாளர் (நிரந்தரம்)
பதவிக்குறியீட்டு எண் :- 101/8
சம்பள அளவுத் திட்டம் :- 11200 - 14100
140X10 - 150X10
(கூ.ஊ.ஆ.குழு சுற்றுநிருபம் 66/2006 இன் படி)

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

**பதவிக்கான தகைமைகள்:**

அ) கூட்டுறவுப் பணியாளர் 9 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்ட பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமனான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் முகாமை மட்ட பதவி ஒன்றில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திர (உயர்தர) சான்றிதழ் க.பொ.த (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்ட பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**வயதெல்லை:-** 21-45 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

**நிபந்தனைகள்:**

அ) கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.
ஆ) பிணைப்பணம்:- சங்கத்தால் கோரப்படும் உரொக்கப் பிணை, ஆதனப் பிணை செலுத்த வேண்டும். பதவி நிரந்தரமானது. இரண்டு வருடங்கள் தகுதிகாண் காலத்தைக் கொண்டதுமாகும்.
இ) விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்களை ஏற்கவோ நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்களை சுயமாகத் தயாரித்து 'தலைவர் பளை/பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி, பளை' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 16.07.2012 இற்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் குறிப்பிடல் வேண்டும்.

**க.இராசதுரை**
**தலைவர்**
**பளை/பனை தென்னை வள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**பளை.**

(C/1607)

# குழாய் குடிநீர் விநியோகம் பாதிப்பு; மண்டைதீவு மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கிராமத்திற்கான குழாய் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீர் கடந்த ஒரு கிழமையாக தடைப்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக அப்பகுதி மக்கள் குடிநீர் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அல்லைப்பிட்டியில் இருந்து குழாய் மூலமாக மண்டைதீவுக் கிராமத்திற்கு குடிநீர் எடுத்து வரப்படுகிறது. இந்தக் குழாயில் சில விசமிகளினால் சேதம் ஏற்பட்டிருப்பதன் காரணமாகவே குடிநீர் விநியோகம் தடைப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு ஏற்கனவேயும் பல தடவை தண்ணீர் விநியோகக் குழாய்களில் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மண்டைதீவிற்கும் அல்லைப்பிட்டிற்கும் இடைப்பட்ட கடற்பரபினுடாகச் செல்லும் இந்த நீர்க் குழாய்கள் நிலத்திற்கு வெளியே வைத்து இணைக்கப்பட்டிருப்பதன் காரணமாகவே விசமிகளினால் இவ்வாறு சேதமாக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மண்டைதீவிற்கான குழாய் மூல குடி நீர்விநியோகம் தடைப்பட்டதை அடுத்து வேலணை பிரதேச சபையினரினால் தண்ணீர் பவுசர் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இருந்தும், அது மக்களுக்கு போதுமானதாக இல்லை. அத்துடன் மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தில் உள்ள சில நன்னீர்க்கிணறுகளையும் மக்கள் குடிநீருக்காக பயன்படுத்துகின்றனர்.

அந்தக் கிணறுகளிலும் நீர்வற்றிவிடுகின்றது. இவ்வாறான நிலையில் அப்பகுதி மக்கள் குடிநீர் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் குழாய் மூலமான குடிநீர் விநியோகத்தை சீர் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (பா)

## "ஆசிரியர்" நூல் வெளிவருகின்றது

(யாழ்ப்பாணம்)


பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை அபிவிருத்தி செய்யும் வகையில ஆக்கங்களினை உள்ளடக்கியதாக மாதாந்தம் சேமமகு பதிப்பகத்தினால் வெளியிடப் படும் நூல் தொடர்ந்து வெளிவந்து கொண்ரு க்கின்றது.

கல்வி டிப்ளோமா மற்றும் கல்விமாணி, முது கல்விமாணி ஆகியவற்றினை கற்கும் ஆசிரியர்களின் நன்மை கருதியும், ஏனைய ஆசிரியர்களின் வாண்மை விருத்தியினையும், காலத்துக்கு காலம் கல்வியில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் மற்றும் சட்டங்களினை சகல அதிபர்களும், ஆசிரியர்களும் அறிந்து கொள்ளும் நோக்கில் வடமாகாண பாடசாலைகள் தங்கள் பாடசாலையிலுள்ள நூலகங்களில் "ஆசிரியர்" நூலை பெற்று பேணுமாறு வட மாகாண கல்வி அமைச்சு சகல பாடசாலைகளையும கோரியுள்ளது. இந் நூலினை பெறுவதற்கு சேமமகு புத்தகசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (42)



சென்னை காமாட்சி மருத்துவமனை இலங்கை மக்களுக்கு இலவசவைத்திய சேவைகளை வழங்க முன்வந்துள்ளது. இது சம்பந்தமாக காமாட்சி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் எஸ்.கோவிந்தராஜன் அண்மையில் கொழும்புக்கு வந்திருந்தார். அவர் இலங்கைத் துணைத்தூதுவர் ராஜா.கருணாரத்தின, சென்னைகாமாட்சி மருத்துவமனை இலங்கை அலுவலக நிர்வாக இயக்குநர் மணவை அசோகன், மருத்துவமனையின் சர்வதேச முகாமைப்பணிப்பாளர் வைத்தியகலாநிதி எஸ். றொபின்சன்குமார், இலங்கைத்துணைத் தூதுவரின் முதல் அதிபர் எஸ்.டிலானி ஆகியோருடன் காணப்படுகின்றார். (01)

## "உன்கையில் அதிகாரமம்மா"



யாரிடம் சொல்வேன் யாரிதைக் கேட்பர்?  
பாருக்குள்ளே இந்தநாடு படும்பாடு கேளம்மா!  
பேராசை ஒருபுறம், மண்ணாசை ஒருபுறம்  
போதாதென்று போதைக்கும் ஆட்பட்டோம்!  
பாராக இருந்தாலும் யாழ்ப்பாணமா? என்று  
நேராகக் கேட்கு மளவிற்கு மாறிவிட்டோமே!  
ஊரிலே என்னென்ன நடக்கிறதென்று பாரம்மா  
உன்கையில் அதிகாரம் நயினையம்மா கேளாயோ?  
சீராக நாளிதழைப் புரட்டினால் அங்கே  
சிறுமிகள் படும் கஷ்டம் யாருக்குப் புரியும்?  
ஆராக இருந்தாலும், ஆட்சி உனதம்மா!  
தேராக உலாவந்து தேற்று நயினையம்மா!

கே.எஸ்.சிவஞானராஜா (கொக்குவில்)

(நயினை நாகபூசணி மஹோற்சவ கால பாமாலை)

## சுனாமி எச்சரிக்கை கோபுரம்; மீள இயக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை - சுப்பர்மடம் கடற்கரையோரமாக செயலிழந்திருக்கும் சுனாமி எச்சரிக்கை கோபுரத்தை மீளவும் இயங்க வைப்பதற்காக கடந்த புதன் கிழமை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அதிகாரிகள் குழுஒன்று நேரில் விஜயம் செய்து பார்வையிட்டுள்ளது.

ஏற்கனவே மின்சாரத்தின் மூலமாக இயங்குதிறன் கொண்டதாக இந்த சுனாமி எச்சரிக்கை கோபுரம் அமைக்கப் பட்டிருந்தது. இருந்தும் மின்சாரத்தின் மூலம் அதனை இயக்க வைப்பதில் காணப்பட்ட நடை முறைச் சிக்கல் காரணமாக அது இயங்கவில்லை. இருந்தும் அதற்கு சூரிய மின்சாரத்தின் மூலம் மின் சக்தியைப் பெற்று இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாகவே கொழும்பில் இருந்து அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அதிகாரிகள் பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதிக்கு விஜயம் செய்து திரும்பியிருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா)

## பௌதிகவியல் பாட நேரசூசி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தில் வரும் 4ஆம் மற்றும் 5ஆம் திகதிகளில் நடைபெற விருந்த பௌதிகவியல் பாட பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தினால் 12.07.2012 வியாழக்கிழமை நடைபெறும் என்பதை தங்களுக்கு அறியத்தருகிறோம்.

ஏனைய பாட பரீட்சைகள் வழமைபோல் இடம் பெறும். பௌதிகவியல் ii 8.30 - மு.ப 11.30, பௌதிகவியல் i மதியம் 12.30 - பி.ப 2.30 வரை.

# நேருநர் இடாப்பு மீளாய்வு பாடசாலைகள் மூலம் வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

2012 தேர்தல் இடாப்புக்களின் மீளாய்வு தொடர்பாக பரந்தளவிலான பிரசாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்திற்கு அரசாங்க பாடசாலைகளின் அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் ஒத்துழைப் பெற்றுக் கொள்வதற்கு தேர்தல்கள் திணைக்களம் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதன் மூலமாக உயர் வகுப்புக்களின் மாணவ, மாணவிகளை அறிவூட்டி அவர்களூடாக பொதுமக்களை அறிவுறுத்தும் நோக்குடன் தேர்தல்கள் திணைகளத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் வேலைத்திட்டத்திற்கு சகல பாடசாலை அதிபர்களையும் ஒத்துழைக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் சகல கல்விப் பணிப்பாளர்களையும் கடிதம் மூலம் கோரியுள்ளது.

வாக்குரிமை மற்றும் நேருநர் இடாப்புக்களின் மீளாய்வு தொடாபாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக மேற்கொள்ளப்படும் பிரசார நடவடிக்கைகள், கிராம அலுவலர்கள் பிரதேச செயலாளர்கள் ஊடாக போஸ்டல்கள் மூலமாக அறிவுறுத்தல்கள், அரசாங்க அலுவலர்கள் மூலமாக மேற்கொள்ளப்படும் அறிவுறுத்தல்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு இயக்கங்கள் ஊடான அறிவுறுத்தல்கள், மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலமான அறிவுறுத்தல்கள் போன்ற நடவடிக்கைகளுக்கு மேலாக பாடசாலைகள் மூலமாக பிரசார நடவடிக்கைகளினை மேற்கொள்ளவது பயன் உடையதாக அமையும் என தேர்தல் திணைக்களம் எதிர்பார்த்து இச் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளது. இது தொடர்பாக பொதுமக்களுக்கு பிரசாரம் செய்யவும், காலைக் கூட்டங்கள் மற்றும் மன்றக் கூட்டங்களில் பிரசாரம் செய்யவும் பாடசாலை விளம்பரப்பலகையில் இடவும் என சுவொரொட்டி ஒன்றும் பாடசாலைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

"2012ஆம் ஆண்டுக்காக நேருநர் கணக்கெடுப்புக்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்."

என்ற தலைப்பில் அமைந்துள்ள சுவரொட்டியில், 2012 யூலை 10ஆம் திகதியாகும் போதும் உங்கள் வீட்டிற்கு கணக்கெடுப்புப் படிவமொன்று கிடைக்கப்பெற்று, பெறாவிடின உடனடியாக கிராம அலுவலகரை அல்லது மாவட்டத் தோதல் அலுவலகரை விசாரிக்கவும். பூர்த்தி செய்த படிவத்தை ஒகஸ்ட் 10ஆம் திகதிக்கு முன் கிராம அலுவலரிடம் அப்படிவத்தை கையளிக்கவும், நேருநர் கணக்கெடுப்பு படிவத்தை கிராம அலுவலரிடம் கையளிக்காவிட்டால் உங்களது பெயர் நேருநர் இடாப்பில் உட்சேர வாய்ப்பில்லை. நேருநர் இடாப்பில் உங்கள் பெயர் சேர்க்கப்பட்டாலே உங்களுக்கு வாக்குரிமை கிடைக்கும், பாடசாலைகளுக்கு சிறுவர்களை அனுமதித்தல், தொழில் வாய்ப்புக்கள், பல்கலைக்கழக அனுமதி, நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல் போன்ற பல்வேறு தேவைகளுக்கு பதிவை உறுதிப்படுத்தும் அத்தாட்சியாக நேருநர் இடாப்பு பயன்படுத்தப்படுகின்றது.

ஆகவே உங்கள் வீட்டிற்கு கிடைக்கும் கணக்கெடுப்பு படிவத்தைப் பூர்த்தி செய்து தவறாது உங்கள் பிரிவு கணக்கெடுப்பு அலுவலகரிடம் மீள கையளியுங்கள். அதன் மூலம் உங்கள் வாக்குரிமை பாதுகாக்கப்படும் என்று காணப்படுகிறது. (42)

# "மகிழ்ச்சிகரமான இல்லம்" முல்லையில் செயற்திட்டம்

(முல்லைத்தீவு)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் சிறுவர் சமூக மேம்பாட்டை மையப்படுத்திய 'மகிழ்ச்சிகரமான இல்லம்' என்ற செயற்திட்டம் கிராமங்கள் தோறும் முதன் முதலாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இவை தேவிபுரம், வட்டுவாகல், தேராவில், கோயில் குடியிருப்பு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு, உண்ணாப்புலவு, சிலாவத்தை, உடுப்புக்குளம் ஆகிய கிராமங்களில் இவ்வாறான மகிழ்ச்சிகரமான இல்லம் உருவாக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாடு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் அதிகார சபையின் அதிகாரிகளால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமத்திலும் 30 சிறுவர்கள் உள்வாங்கப்பட்டு ஓலைக் குடிசை வீடு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டு அதனூடாக மகிழ்ச்சிகரமாண கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் இந்த இல்லத்தில் சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்கும் வகையில் முறைப்பாட்டுப் பெட்டியும் வைக்கப்பட்டுள்ளது. இதனூடாக சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள், துன்பகரமான செயற்பாடுகள் குறித்து கடிதம் மூலம் எழுதி பெட்டியினுள் போடமுடியும். அந்த முறைப்பாடுகள் உரிய வகையில் பரிசீலனை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

நல்லவனுக்கு நலம் நடக்கும் என மட்டும் நம்பாது வல்லவனாயும் வாழ்ந்துவிடு பாப்பா - பாரதியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## கருத்துச் சுதந்திரத்தின் அளவு எது?

"நீதித்துறை சம்பந்தமாக திரு. சுமந்திரனால் தெரிவிக்கப்பட்டதாக உதயன் பத்திரிகையில் வெளிவந்த கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை. மேலும் நீதித்துறையின் கண்ணியத்திற்கும் கௌரவத்திற்கும் அவதூறு ஏற்படுத்தும் விதத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே குறிப்பிட்ட பத்திரிகையில் முன் பக்கத்தில் முதற் செய்தியாக முக்கியத்துவப்படுத்தி 'மன்னிப்புக் கோருகின்றோம்' என்ற தலையங்கத்தில் இந்தச் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்ற விடயத்தைப் பிரசுரிப்பதுடன், மேலும் ஏன் பிரதம ஆசிரியருக்கு எதிராக நீதிமன்றம் அவமதிப்புக் குற்றச்சாட்டு சுமத்தக் கூடாது என்ற காரணம் ஒன்றைத் தருமாறு நீதிமன்று கட்டளை இடுகின்றது. மேலும் இம்மன்றில் பத்திரிகை ஆசிரியர் இது தொடர்பில் மன்னிப்புக் கோருமாறு மன்று கட்டளை இடுகின்றது" என நேற்று முன்தினம் யாழ் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதற்கு இணங்க உதயன் பத்திரிகை ஆசிரியர் நீதிமன்றுக்கு வந்து, தாங்கள் பிரசுரித்த பொய்ச் செய்திக்காக பகிரங்க மன்னிப்புக் கேட்டிருந்தார்.

ஆனால், நீதிமன்று கட்டளையிட்டபடி, நேற்றைய பத்திரிகையில் மன்னிப்புக் கோரும் செய்தியைப் பிரசுரிக்காததால் நீதிமன்றை இரண்டாம் முறையும் அவமதித்த குற்றச்சாட்டுக்கு அப்பத்திரிகை ஆளாக நேர்ந்திருக்கிறது. மேலும் நேற்றைய பத்திரிகையின் ஆசிரிய தலையங்கப் பகுதியை கறுப்பு மையடித்து விட்டிருப்பதன் மூலம் நீதித்துறைக்கு சவால் விட முயன்றிருப்பது பத்திரிகைத் துறைக்கு அழகல்ல. இதைச் சரியானதென்று ஊடகத்துறை சார்பாக நின்று வக்காலத்து வாங்குவது, நாம் முன்னரும் குறிப்பிட்டபடி ஊடகப் பயங்கரவாதத்திற்கே நீரூற்றி வளர்க்கும் வேலையாக முடியும்.

உண்மைக்குப் புறம்பான அவதூறுச் செய்தியொன்றைப் பிரசுரித்துவிட்டு, நீதிமன்றத்தில் அதற்காக மன்னிப்பும் கேட்டுவிட்டு, மக்களுக்கு அதை மறைப்பதும், மேலும் அவதூறுச் செய்தி பிரசுரிப்பதை நியாயப்படுத்துவது போல நடந்து கொள்வதும் பத்திரிகா தர்மத்தின் பாற்பட்ட செயல்களல்ல. பத்திரிகா ஆணவம் என்பதாகவே அது அடையாளப்படும். தமிழ்த் தேசியத்தின் பேரால் எவரையும் அவதூறு செய்துகொண்டிருக்கலாம் என்கிற போக்கு உண்மையில் தமிழ்மக்களுக்கு எதிரானதும் ஆபத்தானதும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் ஒருகாலத்தில், தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்களை எல்லாம் கொல்லலாம் என்று பழக்கப்படுத்தப்பட்டதைப் போன்ற 'நியாயம்' போலவே இதுவும் சென்று முடியும்.

கருத்துச் சுதந்திரம், தணிக்கை பற்றியெல்லாம் இன்று புதிய பல கேள்விகள் உருவாகிவிட்டன. ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரம் இருக்கிறது; உரிமைகள் இருக்கின்றன – அடுத்தவரைப் பாதிக்காத வரையில். எல்லையற்ற சுதந்திரம் உண்டாக்கும் பாதிப்புகளை அறிந்து கொண்டுதான் தடைகளையும் விதிகளையும் மனிதகுலம் உருவாக்கிக் கொண்டது.

எங்கும் எவருக்கும் எல்லாவற்றுக்கும் சுதந்திரம் என்பது முழு நிர்வாணம் போன்றது. அது சரியல்ல என்ற சிந்தனை உதித்த பிறகுதான் ஆடை அணிய ஆரம்பித்தான் ஆதி மனிதன். மனதில் தோன்றுவதை எல்லாம் பேசிவிட முடியாது என்பதை உணர்ந்தபின் வகுத்ததுதான் நல்ல வார்த்தைகளும் கெட்ட வார்த்தைகளும். எந்த சொற்கள் தன் மனதை புண்படுத்துமோ அந்த சொற்களை பிறரிடம் பேசக்கூடாது என்ற நாகரிகம் அங்கிருந்து வளர்ந்தது. சுயதணிக்கையும் அதை உணராமல் போகக்கூடிய சந்தர்ப்பத்தில் பொதுத் தணிக்கைகளும் தேவைப்பட்டன.

நீதித்துறையும் நீதிமன்றமும் அவ்வாறான ஒரு தேவை கருதி பொதுமக்கள் பாதுகாப்புக்காக உருவானதே. அதற்குச் சவால் விடுவதோ, அதை அவமதிப்பதை நியாயப்படுத்துவதோ எல்லாம் பொதுமக்களுக்கும் சமூகப் பாதுகாப்புக்கும் எதிராக நடந்து கொள்வதாகும் என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

- ஆசிரியர்

# இலங்கைக்கு தொடர்ந்தும் அமெரிக்காவின் ஜி.எஸ்.பி. சலுகை

(கொழும்பு)

இலங்கைக்கு தனது ஜி.எஸ்.பி. சலுகை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனஅமெரிக்கா அறிவித்துள்ளதுடன், இலங்கையில் தொழிலாளர் உரிமைகளை முன்னேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

அமெரிக்காவின் வர்த்தக பிரதிநிதியான ரோன் கேர்க் இவ்வறிவிப்பை விடுத்துள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

தொழிலாளர் உரிமைகளை அங்கீகரிப்பதில் இலங்கையின் குறைபாடுகள் காரணமாக 2008 ஆம் ஆண்டு ஏ.எவ்.எல்.மற்றும் சி.ஐ.ஓ அமைப்பினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை தொடர்ந்து இலங்கைக்கான ஜி.எஸ்.பி. சலுகை குறித்து மீளாய்வு செய்யப்பட்டது.

இலங்கையின் ஜி.எஸ்.பி. சலுகை நடைமுறை மீளாய்வு முடிவானது, கடந்த சில வருடங்களில் தொழிலாளர் உரிமைகள் தொடர்பான விவகாரங்களை தீர்ப்பதில் இலங்கை அரசாங்கத்தின் கவனிக்கத்தக்க முயற்சிகளின் அடிப்படையில் அமைந்தது. பயன்பெறும் நாட்டின் தொழிலாளர் உரிமைகள் தொடர்பில் ஜி.எஸ்.பி. சலுகை ஒரு வினைத்திறனான கருவியாக உள்ளது என்பதை இந்த மீளாய்வின் இந்த வரவேற்கத்தக்க பெறுபேறானது வெளிப்படுத்துகிறது என ரோன் கேர்க் கூறியுள்ளார்.

ஜி.எஸ்.பி. சலுகை மூலம் அபிவிருத்தியடைந்துவரும் 128 நாடுகளைச் சேர்ந்த 5000 வகையான பொருட்களை தீர்வையின்றி அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகிறது. 2011 ஆம் ஆண்டில் ஜி.எஸ்.பி. சலுகையின் கீழ் 18.5 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்கள் தீர்வையின்றி இறக்குமதி செய்யப்பட்டன.

## ஐ.தே.க.வின் விசேட செயற்குழுக் கூட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் ஐந்தாம் திகதி நடைபெறவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடவுள்ள முறைமைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப் படவுள்ளது.

இதேவேளை, நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட விரும்பும் எந்தவொரு வேட்பாளர்களுக்கும் விண்ணப்பங்களை வழங்க முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

## புனர்வாழ்வுபெற்றோர் விடுதலை

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் தமது புனர்வாழ்வு நடவடிக்கைகளை நிறைவு செய்து கொண்ட மேலும் ஒரு தொகுதி முன்னாள் போராளிகள் விடுவிக்கப்படவுள்ளனர்.

இதன்படி, எதிர்வரும் 4 ஆம் திகதி அவர்கள் சமூகத்தில் இணைந்து கொள்வார்கள் என அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சிவலிங்கம் சத்தீஸ்குமார் தெரிவித்தார். இதுதவிர, கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள 45 முன்னாள் போராளிகளை பொலன்னறுவை, கந்தகாடு, சேனபுர புனர் வாழ்வு முகாம்களில் இருந்து வவுனியாவிற்கு உடனடியாக மாற்றப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்களின் கல்வி நடவடிக்கைகளின் பொருட்டே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சிவலிங்கம் சத்தீஸ்குமார் தெரிவித்தார்.

## 13 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம் 14 பேர் பொலிஸாரால் கைது

தங்காலையில் 13 வயதான சிறுமி ஒருவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்காலை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட பின்னர் சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிடுகின்றது.

இதேவேளை ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் ஆகியோரும் இவர்களில் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் இதுவரை 14 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட சிறுமியை கடந்த 6ஆம் திகதி தங்காலை நகரில் இளைஞர்கள் சிலர் கடத்திச் சென்று பிரதேசத்திலுள்ள ஹோட்டல்கள் சிலவற்றில் தடுத்து வைத்து பல்வேறு நபர்களுக்கு விற்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் நால்வரை கைது செய்வதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கூறுகின்றது.

## கிருஷ்ணபுரம் மக்கள் நன்றி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-கிருஷ்ணபுரம் மக்கள் அமைப்புப் பிரதிநிதிகள் கடந்தவாரம் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான மு.சந்திரகுமாரை அவரது அலுவலகத்தில் சந்தித்து நன்றி தெரிவித்துள்ளனர். தங்களது கிராமத்தில புதிய பாடசாலை ஒன்று அமைப்பதற்கு நடவடிக்கை எடுத் தமைக்காகவும்,மற்றும் விளையாட்டுக்கழகத்தின் வளர்ச்சிக்காக நிதி ஒதுக்கீடு மேற்கொண்டமை உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி பணிகளை முன்னெடுத தமைக்காக கிராமத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்து கொண்டனர். இதன்போது கிருஷ்ணபுரம் கிராம அபிவிருத் திச்சங்கத் தலைவர் ஜோசப், செயலாளர், மாதர் அபிவிருத்திச்சங்கம் விளையாட்டுக்கழகத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மின்சார சேவையாளர் சங்கம் 24 மணிநேர சேவைப் புறக்கணிப்பு

இலங்கை மின்சார சேவையாளர் சங்கம் எதிர்வரும் 4ஆம் திகதி 24 மணித்தியால சேவைப்புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாக எச்சரித்துள்ளது.

இந்தத் தகவலை அந்த சங்கத்தின் செயற்பாட்டு குழு உறுப்பினர் ரஞ்சன் ஜயலால் வெளியிட்டுள்ளார்.

15 ஆயிரத்திற்கும் அதிகமான சேவையாளர்கள் முகங்கொடுத்துள்ள வேதனப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதுவித தடைகள் பிரயோகிக்கப்பட்டாலும் அன்றைய தினம் போராட்டம் நடந்தேதீரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே எதற்கும் முகங்கொடுக்க தமது சங்கம் தயாராக இருப்பதாகவும் இலங்கை மின்சார சேவையாளர் சங்கத்தின் செயற்பாட்டுக் குழு உறுப்பினர் ரஞ்சன் ஜயலால் குறிப்பிட்டுள்ளார்.

## மண்டைதீவு வேப்பம்திடல் முத்துமாரிக்கு கும்பாபிஷேகம்

யாழ். மண்டைதீவு வேப்பம் திடல் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 05ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிதொடக்கம் 10.45 மணிவரையான சுப நேரத்தில் நடைபெறவுள்ளது. இவ் ஆலயமானது கடந்த அனர்த்தங்களின் பின்னர் புதிதாக திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆலயத்தில் 20.07.2012 அன்று விநாயகர் வழிபாட்டு ஆரம்ப நிகழ்வுடன் நான்காம் திகதி அம்பாளுக்கு எண்ணெய்க்காப்பு நடைபெறுவதாகவும் தெரியவருகின்றது. (85)

# தமிழ் மக்களின் நலனுக்கு அரசியல் தீர்வே உத்தரவாதம்

- சங்கர சிவன்

**வரலாற்று ரீதியான வாழ்புலம் என்ற தகைமையைக் கேள்விக்கு உள்ளாக்கும் நோக்கத்துடன் சிங்களக் குடியேற்றங்களும் இராணுவக் குடியிருப்புகளும் அமைக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே நில அபகரிப்புக்கு எதிரான அண்மைய போராட்டங்கள் இடம்பெற்றன. அரை நூற்றாண்டுக்கு மேலாகத் தமிழ்த் தலைவர்கள் இக்குற்றச்சாட்டைச் சுமத்தி வருகின்றார்கள். போராட்டங்களையும் நடத்தி வருகின்றார்கள். அதே நோக்கத்துக்காக இன்றும் போராட்டம் நடத்த வேண்டியதாக இருப்பதிலிருந்து போராட்டங்களின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதையும் போராட்டத்துடன் அரசியல் தீர்வுக்கான முயற்சியும் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம் என்பதையும் நாம் விளங்கிக்கொள்ளலாம்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டிவிடும் என்பதற்காகவே அரசாங்கம் வட மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தயங்குகின்றது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியிருக்கின்றார். தேர்தல் நடந்தால் யார் வெற்றியீட்டுவார்கள் என்ற எதிர்வுகூறல் ஒருபுறமிருக்க, இக்கூற்றை அரசியல் ரீதியாக நோக்குவோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபையை நிராகரித்து வந்தது. வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னைய அரசாங்கங்கள் முயற்சி மேற்கொண்ட வேளைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதைத் தீவிரமாக எதிர்த்தது. மாகாண சபை முறை இன்றைய சூழ்நிலையில் பொருத்த மற்றது என்றும் அதை



ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இதே சுரேஷ் பிரேமச்சந்திரன் சில மாதங்களுக்கு முன் கூறினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறும் என்பதனால் அரசாங்கம் தேர்தலை நடத்தத் தயங்குகின்றது என்று இப்போது கூறுவது மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கூட்டமைப்பின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. வடமாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் விடுவது தமிழ் மக்களுக்குப் பாதகமான வளர்ச்சிப்போக்குக்கு வழிகோலும் என்றும் இனப்பிரச்சினைக்கு முழுமையான அரசியல் தீர்வை அடையும் நடைமுறையில் மாகாண சபை ஆரம்ப கட்டம் என்றும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை கூட்டமைப்புத் தலைவர்கள் நிராகரித்து வந்தனர்.

ஒரே தடவையில் முழுமையான அரசியல் தீர்வை அடையும் எதிர்பார்ப்புடன், அரைகுறைத்தீர்வுகளை ஏற்க முடியாது என்றார்கள். இனப்பிரச்சினையின் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு பற்றுவதில்லை என்று கூட்டமைப்பு அறிவித்ததைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியும் அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டது. தெரிவுக் குழு நடக்குமா என்பது இப்போது மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக்கின்றது. இந்த நிலையில் இனப்பிரச்சினையின் தீர்வை நோக்கிய செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு மாகாண சபையைத் தவிர வேறு ஊடகம் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த யதார்த்தத்தை விளங்கிக்கொண்டு மாகாண சபைத் தேர்தலுக்குத் தயாராகின்றதா அல்லது வழமை போல உணர்ச்சியூட்டும் உரைகளினாலும், போராட்டங்களினாலும் மக்களை உசுப்பிவிட்டுத் தங்கள் அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதற்கான முயற்சியா என்பது விளங்கவில்லை. தேர்தல்களில் போட்டியிடுவது ஏன் என்பதற்கு இவர்கள் விசித்திரமான

**தேசம் என்ற அங்கீகாரம் கிடைக்கும் வரை அதற்காகப் போராடுவோமே-யொழியத் தீர்வு முயற்சியில் ஈடுபடமாட்டோம் என்ற வீரவசனம் கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கும். ஆனால், மக்களுக்கு அதன் விளைவு நல்லதாக இருக்காது.**

விளக்கம் அளிப்பது வழக்கம். சிங்கள அரசாங்கங்கள் தமிழ் மக்களின் உரிமையை ஒருபோதும் வழங்கப்போவதில்லை என்றும் தமிழ் மக்கள் தங்களுடனேயே நிற்கின்றார்கள் என்பதைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்டித் தீர்வுக்கு உலக நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காகவே தேர்தல்களில் போட்டியிடுவதாகவும் கூறி வந்தார்கள். அடுத்தடுத்து எல்லாத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் இவர்களைப் பெரும்பான்மையாகத் தெரிவு செய்த போதிலும் அது சர்வதேச சமூகத்தில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இனப்பிரச்சினை நாளுக்கு நாள் புதிய பரிமாணத்துடன் வளர்கின்றதேயொழியத் தீர்வை நோக்கிய நகர்வு இடம்பெறவில்லை. இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் முதல் தமிழ் மக்களால் பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட்டு வருபவர்கள் இந்த நிலைமைக்கான பொறுப்பை ஏற்பதோடு தாங்கள் தோற்றுவிட்டார்கள் என்பதையும் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டு விடுதலை அரசியலில் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்க வேண்டும். அரசியல் தீர்வு நடை முறையின் ஆரம்ப அமைப்பாக மாகாண சபையை அங்கீகரிக்க வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் எனக் கூறுவதன் உண்மையான அர்த்தம் அதுவாகவே இருக்க வேண்டும். அழிவுகர அரசியலுக்கு அத்திவாரம் போடப்படும் இன்றைய நிலையில் இந்த அணுகுமுறை அத்தியாவசியமானது.

காணி அபகரிப்புக்கு எதிரான கவன ஈர்ப்புப் போராட்டங்கள் அண்மையில் நடந்ததை அறிவோம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த போராட்டத்தில் கூட்டமைப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த போராட்டத்தில் முன்னணியினரும் பங்குபற்றிய போதிலும் போட்டி மனோபாவம் வெளிப்படுவதை அவர்களால் தவிர்க்க முடியவில்லை. இப்போராட்டத்தை மையப்படுத்திக் கூட்டமைப்புக்கு எதிராகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டதைக் கடந்த நாட்களில் அவதானிக்க முடிந்தது. இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான அதிகாரப் போட்டி என்று ஒதுக்கிவிட முடியாத அளவுக்குத் தமிழ் மக்களின் எதிர்காலம் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னர் கையில் எடுத்த பிரசாரத்தையே முன்னணியினர் இப்போது கையில் எடுத்திருக்கிறார்கள். முன்னர் இவ்வாறான பிரசாரத்தினால் தவறாக வழி நடத்தப்பட்டு இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் மக்கள் உள்ளாகிய நிலை மீண்டும் ஏற்படுவதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களின் எதிர்காலத்தில் அக்கறை உள்ள அனைவருக்கும் உண்டு.

தமிழ் மக்களை ஒரு தேசம் (நேஷன்) என அங்கீகரிக்க வேண்டும் என்பதைத் தவிர தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடம் தீர்வுத் திட்டம் எதுவும் இல்லை. இந்த அங்கீகாரம் கிடைக்கும் வரை தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதை அவர்கள் நிராகரிக்கின்றார்கள். புலிகளும் இதே நிலைப்பாட்டைப் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். முழுமையான தீர்வைத் தவிர வேறு எதையும் ஏற்பதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டிருந்த நிலைப்பாடும் இதை ஒத்ததே. தேசம் என்ற அங்கீகாரத்தை இவர்கள் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்ப்பதானால் அந்த அங்கீகாரம் கிடைக்காத பட்சத்தில் அடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றி எதுவும் தெரியாது. தேசம் என்ற அங்கீகாரம் கிடைக்கும் வரை அதற்காகப் போராடுவோமே யொழியத் தீர்வு முயற்சியில் ஈடுபடமாட்டோம் என்ற வீரவசனம் கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கும். ஆனால், மக்களுக்கு அதன் விளைவு நல்லதாக இருக்காது.

ஒரு மக்கள் கூட்டம் தேசம் என்ற அங்கீகாரத்தைப் பெறுவதற்குச் சில அடிப்படைகள் அத்தியாவசியமானவை. அவற்றுள் வரலாற்று ரீதியான வாழ்புலம் அல்லது பாரம்பரிய தாயகம் முக்கிய இடம் வகிக்கின்றது. அதுவே இன்று பலவீனமானதாகவும் இருக்கின்றது. வரலாற்று ரீதியான வாழ்புலம் என்ற தகைமையைக் கேள்விக்கு உள்ளாக்கும் நோக்கத்துடன் சிங்களக் குடியேற்றங்களும் இராணுவக் குடியிருப்புகளும் அமைக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே நில அபகரிப்புக்கு எதிரான அண்மைய போராட்டங்கள் இடம்பெற்றன. இக்குற்றச்சாட்டும் இது தொடர்பான போராட்டங்களும் தமிழ் மக்களுக்குப் புதியனவல்ல. அரை நூற்றாண்டுக்கு மேலாகத் தமிழ்த் தலைவர்கள் இக்குற்றச்சாட்டைச் சுமத்தி வருகின்றார்கள். போராட்டங்களையும் நடத்தி வருகின்றார்கள். அதே நோக்கத்துக்காக இன்றும் போராட்டம் நடத்த வேண்டியதாக இருப்பதிலிருந்து போராட்டங்களின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதையும் போராட்டத்துடன் அரசியல் தீர்வுக்கான முயற்சியும் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம் என்பதையும் நாம் விளங்கிக்கொள்ளலாம்.

நில அபகரிப்பைப் பொறுத்த வரையில் போராட்டத்தின் மூலம் சில வெற்றிகள் கிடைப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போதும் அரசியல் தீர்வுக்கான முயற்சி அவசியமாகின்றது. கிடைக்கும் வெற்றிகளை இழக்கப்படாத வகையில் பேண வேண்டியது முக்கியமானது. அதற்கேற்ற வகையில் நிர்வாக அதிகாரங்களைக் கொண்ட பொறிமுறை அரசியல் தீர்வு முயற்சியினூடாகவே சாத்திய மாகும். வரலாற்று ரீதியான வாழ்புலத் தகைமை பங்கமுறா வண்ணம் பேணுவதற்கும் அவ்வாறான பொறிமுறையொன்று அவசியமாகின்றது. எனவே, தமிழ் மக்களின் எதிர்கால நலனில் அக்கறை உள்ளவர்கள் அரசியல் தீர்வு முயற்சிக்கு முன்னுரிமை அளித்தாக வேண்டும். போராட்டம் சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கு வாக்குகளைத் தரும். அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்கு நிம்மதியைத் தரும்.

தமிழ் மக்களை முள்ளிவாய்க்கால் வரை இட்டுச் சென்று அழிவுக்குள் தள்ளிய அரசியலிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓரளவு விடுபட்டு நிற்கின்றது. மீண்டும் அதே அரசியல் மேலெழுவதைத் தடுப்பதுதான் தமிழ் மக்களுக்குச் செய்யும் மிகப் பெரிய நன்மை. நடைமுறைச் சாத்தியமான தீர்வு வழியைப் பின்பற்றுவதன் மூலமே அது சாத்தியமாகும்.

# தகவல் தொழில் நுட்ப அறிவை 70 வீதமாக உயர்த்துவதே இலக்கு

(கொழும்பு)

சர்வதேச நாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடக்கூடிய தகவல் தொழில்நுட்ப அறிவுடன்கூடிய இளைய தலைமுறையைக் கட்டியெழுப்புவதன் ஊடாகவே இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்ள முடியுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்ற வைபவம் ஒன்றின்போதே ஜனாதிபதி இந்தக் கருத்தினை கூறினார்.

ஆயிரம் இடைநிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ், தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கும், போதனை. ஆய்வு டிப்ளோமாதாரிகளுக்கும் ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



சர்வதேசத்துடன் இணைந்து முன்னோக்கிச் செல்லும்போது, தகவல் தொழில்நுட்ப அறிவின் அவசியம் குறித்தும் இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப அறிவு 5 வீதமாக காணப்பட்டதோடு, தற்போது 35 முதல் 40 வீதமாக தொழில்நுட்ப அறிவு காணப்படுகின்றது.

எதிர்காலத்தில் இதனை 70 வீதமாக உயர்த்துவதே அரசாங்கத்தின் இலக்காகவுள்ளது.

ஆசிரியர் தொழிலின் கௌரவத்தைப் பாதுகாப்பதன் மூலம் ஒழுக்கமான சிறந்த சந்ததியினரை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டுமென ஜனாதிபதி இதன்போது கூறியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய விலங்கியல் பூங்கா பணிப்பாளருக்கு அழைப்பாணை

(கொழும்பு)

உரிய அனுமதியின்றி சிறுத்தை தோல்வைத்திருந்ததாக, ஜீனா மெடம் என்றழைக்கப்படும் ரோஸ்மேரி பெரேராவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சாட்சியமளிப்பதற்கு நீதிமன்றத்திற்கு வருமாறு தேசிய விலங்கியல் பூங்காவின் பணிப்பாளருக்கு கொழும்பு கோட்டை நீதவான் அழைப்பாணை விடுத்தார்.

கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி பிளாஸாவில் விபசார விடுதி நடத்தியதாக சந்தேகிக்கப்பட்ட ரோஸ்மேரி பெலிஸியா பெரேராவின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது அவரது வீட்டிலிருந்து சிறுத்தை தோல் ஒன்றை கைப்பற்றியதாக புலன் விசாரணை அதிகாரி நீதிமன்றில் கூறினார்.

செப்டெம்பர் 23-2009 இல் மேற்கொள்ளப்பட்ட இந்த திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட சிறுத்தைத் தோல் குறித்து, அறிக்கை பெறுவதற்காக தேசிய விலங்கியல் பூங்காவுக்கு அனுப்பியதாக உதவி இன்ஸ்பெக்டர் ஜனக் டி சில்வா நீதிமன்றில் தெரிவித்தார்.

நீதிமன்றின் அனுமதியின்றி மேற்படி சிறுத்தை தோலை தேசிய விலங்கியல் பூங்காவுக்கு புலனாய்வு அதிகாரி அனுப்பியதாக எதிர்த்தரப்பு வாதிட்டது. அதைத்தொடர்ந்து, தேசிய விலங்கியல் பூங்காவின் பணிப்பாளரை நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் அழைப்பாணை விடுத்ததுடன் வழக்கை செப்டெம்பர் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# கடனை மீளச் செலுத்துவதில் வாடிக்கையாளர் நெருக்கடி

இலங்கையர்கள் அதிகளவில் கடன் பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் 92 நிதி நிறுவனங்களும், வங்கிகளும், குத்தகை நிறுவனங்களும் கடன் வழங்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

வாடிக்கையாளரின் கடன்படு நிலைமை குறித்து அறிந்து கொள்வதற்காக வங்கிகளும், ஏனைய நிதி நிறுவனங்களும் இலங்கைக் கடன் தகவல் மையத்தின் உதவியை நாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வங்கிகளும், நிதி நிறுவனங்களும், நாளொன்றுக்கு 10,000வாடிக்கையாளர்கள் பற்றிய தகவல்களைக் கோருவதாக இலங்கைக் கடன் தகவல் மையத்தின் பொதுமுகாமையாளர் காமினி கருணாரட்ன தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், அநேகமான வாடிக்கையாளர்கள் கடனை மீளச்செலுத்துவதில் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக கடன் அட்டைகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளரகள் அதிகளவில் கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் திண்டாடுவதாகத் தெரிவித்துள்ளார்.

# ஊடகங்களை அச்சுறுத்த முயற்சி; குற்றம் சாட்டுகிறது ஜே.வி.பி.


(கொழும்பு)

அச்சுறுத்தல்களின் மூலம் ஊடகங்களை அச்சுறுத்த அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஜே.வி.பி கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

சிறிலங்கா மிரர் செய்தி இணையத் தளம் முடக்கப்பட்டமை மற்றும் அதன்ஊடகவியலாளர்கள், பணியாளர்கள் கைது செய்யப்பட்டமை குறித்து ஜே.வி.பி கண்டனம் வெளியிட்டுள்ளது.

இந்த நடவடிக்கையானது ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான மற்றுமொரு அடக்குமுறையாகவே கருதப்பட வேண்டுமென ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் அரசாங்கம் இரண்டு வழிகளில் ஊடகங்களை கட்டுப்படுத்திவருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.



அடக்குமுறைகள் அச்சுறுத்தல்களின் மூலமும், வரப்பிரசாதங்கள்சலுகைகளின் மூலமும் ஊடகங்களின் நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

சில ஊடக நிறுவனங்களின் ஊடக சேவை தொடர்பில் திருப்தி அடைய முடியாதுஎன்ற போதிலும், மாற்றுக் கொள்கைகளை, அரச எதிர்க் கருத்துக்களை வெளியிடும் ஊடகநிறுவனங்கள் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடக அடக்குமுறையக் கட்டுப்படுத்தவும் நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தைகட்டியெழுப்பவும் மக்கள் அணிதிரள வேண்டுமென விஜித ஹேரத் கோரிக்கை விடுத்துள்ளார்.

# புகலிடம் பெற்றுக் கொள்வதற்காக போலிக் குற்றச்சாட்டுக்கள்

புகலிடம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்து அதன் மூலம் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுக் கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைகளுக்கு சில அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாதுகாப்பு படையினரால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து இவ்வாறு புகலிடம் கோரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர், தமது பிள்ளைகள் பாதுகாப்பு படையினரால் துன்புறுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தி கடிதம் ஒன்றை வழங்குமாறு மேயரிடம் கோரியுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வர்த்தகரின் பிள்ளைகள் வெளிநாடு ஒன்றில் வாழ்ந்து வருவதாகவும், வீசாவை நீடித்துக் கொள்ள இவ்வாறு போலி ஆவணமொன்று அவசியப்படுவதாக அந்நாட்டு சட்டத்தரணி வழங்கிய ஆலோசனைக்கு அமைய,வர்த்தகர் போலி ஆவணங்களைத் தயாரிக்கும் முயற்சியில். ஈடுபட்டமை அம்பலமாகியுள்ளது.

இவ்வாறு பலர் போலியான முறையில் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுக்கொள்வதற்காக பாதுகாப்புப் படையினர் அச்சுறுத்துவதாகவும், துன்புறுத்துவதாகவும் குற்றம் சுமத்திவருவதாக பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் வழக்குத் தொடரத் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லையெனக் கூறி வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள், உயர் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளனர்.

புதிய பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதில் அரசாங்கம் ஒரு ஒழுங்கை கடைப்பிடிக்கவில்லையென்பதுடன், தற்காலிக அடிப்படையில் வேலை வழங்கப்பட்டோருக்கு கூட சரியான கடமைகள் வழங்கப்படவில்லையெனவும் கூட்டு வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித்தது.

கடந்த வருட இறுதியில் 35,000 வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் காணப்பட்டதாகவும்,இவர்களில் 15,000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக அரசாங்கம் வாக்குறுதியளித்ததாகவும் கூட்டு வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் தம்மிக்க முனசிங்க குறிப்பிட்டார்.

2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பட்டம் பெற்றவர்களுக்கே வேலைவாய்ப்பு வழங்கப்படுமென்று அதிகாரிகள் வலியுறுத்தியதாகவும்,ஆனால் முன்பு அவர்கள் இவ்வாறு செய்ய வில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

2010, 2011ஆம் ஆண்டுகளில் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாதிருப்பதால் இது அநீதியானதெனவும் தம்மிக்க முனசிங்க குறிப்பிட்டார்.

2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன் பட்டம் பெற்றவர்களுக்கு மாத்திரமே வேலைவாய்ப்பு வழங்கப்படுமெனக் கூறும் சுற்றறிக்கையொன்று உள்ளதென அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் இச்சுற்றறிக்கையை இதுவரையில் காட்டவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# விக்கெட் தாக்குதல்

(கொழும்பு)

13 வயதான சிறுவன் ஒருவனை விக்கெட் பொல்லால் தாக்கி கடுமையாக காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில், 15 வயதான சிறுவன் ஒருவன் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டிருந்த போது, சிறுவர்களிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக, தாக்கியதாக கூறப்படும் சிறுவனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பொரளை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த 13 வயதான சிறுவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பான விடயங்களை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதவான் பிரஹசா ரணசிங்க, எதிர்வரும் 17 ஆம் திகதி வரை தாக்கியதாகக் கூறப்படும் சிறுவனை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# புகலிடக் கோரிக்கையாளர்களில் 130 பேர் இலங்கையர்கள்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் எல்லைப் பாதுகாப்புப் பிரிவினரால் கடந்த 28ஆம் திகதி கைது செய்யப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்களில் இலங்கையைச் சேர்ந்த 130 பேர் இருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக அவுஸ்ரேலிய அரசாங்கத்தினால் அந்த நாட்டிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பொதுசன தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சரத் திசாநாயக்க கூறினார்.

புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிய மூன்று படகுகள் நேற்று முன்தினம் அவுஸ்ரேலியாவின் கிறிஸ்மஸ் தீவினை அண்மித்த கடற்பரப்பில் அந்த நாட்டின் கடற்படை மற்றும் எல்லைப் பாதுகாப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டிருந்தது.

கடந்த புதன்கிழமை இரவிலும் இலங்கைப் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்ட 93 பேர் அடங்கிய படகொன்றை பாதுகாப்புத் தரப்பினர் கைப்பற்றியதாக அவுஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

கடந்த ஒருவார காலத்திற்குள் கிறிஸ்மஸ் தீவினை அண்மித்த கடற்பரப்பில் புகலிடக் கோரிக்கையாளர்களுடன் சென்ற இரண்டு படகுகள் விபத்துக்குள்ளானதுடன், அவற்றிலிருந்த பெரும் எண்ணிக்கையானோர் பாதுகாப்பாக மீட்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புவியியல், விஞ்ஞான சங்கத்தை பாடசாலைகளில் அமைக்க ஏற்பாடு

கல்வி அமைச்சின் தேசிய மொழி மற்றும் மானிடவியல் பிரிவு இடைநிலை மற்றும் உயர்தர வகுப்புக்கள் நடைபெறும் பாடசாலைகளின் புவியியல், விஞ்ஞான அறைகளை அமைக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

கூடுதலாக இயற்கை அனர்த்தங்கள் இடம் பெறுவதனால் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் புவியியல், விஞ்ஞான பாடம் மீது விஷேட கவனத்தினை கல்வி அமைச்சு மேற்கொண்டு வெற்றிகரமான கற்கை அனுபவங்களுக்கு இடமளித்து சவால்களை வெற்றி கொண்டு மாணவர்களை வலுவூட்டவுள்ளது.

இதற்காக கல்வி அமைச்சின மானுடவியல் பிரிவு ஆலோசனைக் கோவை யொன்றினை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இதில் புவியியல் விஞ்ஞான சங்கத்தை தாபிக்கும் நோக்கமாக,

பூகோளவியல் மயமாக்கலுக்கு மத்தியில் புவியியல், விஞ்ஞான பாடத்தின் முக்கியத்துவம் மற்றும் அது சார்ந்த செயற்பாடுகள் குறித்து விளக்கம் பெறல், சூழலில் ஒழுக்க விழுமியங்களைக் காத்தல், மனிதவளம் மற்றும் பௌதிக செயற்பாடுகளில் காணப்படும் போக்குகளைக் கற்றல், விசேட வாழ்வுப்பாதுகாப்பு திறமைகளை விருத்தி செய்து அனர்த்தங்கள் குறித்து விளக்கத்துடன் செயற்படல், புள்ளி விபரங்கள் மற்றும் தகவல் பகுப்பாய்வு விளக்கங்களுக்காக தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தல், வேலை உலகின் தொழில் பிரவேசத்தை இனங்கண்டு அதற்கமைய செயற்படல். போன்றவவை தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

இச் சங்கத்தின் பணிகளுக்கு ஒத்துழைப்புக்களினைப் பெற்றுக்கொள்ள இனங்காணப்பட்டவையாக கரையோரப் பாதுகாப்புத்திணைக்களம், வளிமண்டவியல் ஆய்வுத் திணைக்களம், பல்கலைக்கழக நிறுவகம், பிரதேச செயலக அலுவலகம், திறன் அபிவிருத்தி அமைச்சு, புவியியல் விஞ்ஞான மற்றும் அரங்க அகழ்வுப் பயணியகம் அளவையியல் திணைக்களம் போன்றவை சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. (42)

# தும்பளை வித்தியாலய பவள விழா

(தும்பளை)

யாழ்.தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பவளவிழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் அதிபர் கே.கே.யோகநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டு அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி நா.சிவயோகன், இரசாயனவியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி நா.சிவபாலன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமாரன், ஆய்வாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

பாடசாலையின் ஸ்தாபகர் வே.சிதம்பரப்பிள்ளை அவர்களைக் கௌரவிக்கும் முகமாக 'சிதம்பர தீபம்' என்னும் பவள விழா மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. இம்மலரை வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமாரன் சிறப்புரையாற்றினார். (62)

# 12 குடும்பங்களுக்கு காசோலை வழங்கல்

வன்னியுத்தத்தால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறிய 12 குடும்பங்களுக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் 20,000 ரூபாவிற்கான காசோலை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து இவர்களுக்கான காசோலைகளும் உணவல்லாத பொருட்களும் வழங்கப்பட்டன.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ள, இதுவரை எந்தவிதமான கொடுப்பனவுகளும் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டள்ளதாக நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார். (02)

# துவிச்சக்கர வண்டி வழங்கல்

இந்திய அரசின் நிதியுதவியுடனும், யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின அனுசரணையுடனும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு சுயதொழில் முயற்சிகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

வலிகாமம் கிழக்கில் கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்டவர்களுக்கு நாளை காலை 9.00 மணிக்கும், காரைநகர் பிரதேச செயலகப்பிரிவில் 5 ஆம் திகதி காலை 10 மணிக்கும், வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 6 ஆம் திகதி காலை 10.30 மணிக்கும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 10 ஆம் திகதி காலை 10.00 மணிக்கும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் 12 ஆம் திகதி காலை 9.30 மணிக்கும், வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 13 ஆம் திகதி காலை 10.00 மணிக்கும் வழங்கப்படவுள்ன.

இந் நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குறித்த பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வெஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு துவிச்சக்கர வண்டியினை வழங்கவுள்ளார்.

# மும்மொழித்திட்டம் அமுல்படுத்தல்

'மும்மொழித்திட்ட இலங்கை' என்னும் கருத்திட்டத்தை அமுல்படுத்தும் நோக்கமாக வடக்கு மாகாணத்தில் இன்று முதல் ஒவ்வொரு வலயங்களிலுமுள்ள ஆசிரிய மத்திய நிலையுங்களில் பி.ப 2.30 மணி முதல் 4.30 மணிவரை தெரிவு செய்யப்பட்ட தரம் 10 மாணவர்களுக்காக ஆங்கிலம், தமிழ் அல்லது சிங்கள பாடங்களைக் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தில் வளவாளர்களாக மொழிப புலமையுள்ள இளைப்பாறிய உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளும்படி நீங்கள் ஏற்கனவே கேட்கப்பட்டுள்ளீர்கள். ஆயினும் சில வலயங்களில் இவ்வாறான இளைப்பாறிய உத்தியோகத்தர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள சிரமங்களின் காரணமாக பிரதேச ஆங்கில ஆதார நிலையம் (RESC), மாகாண ஆங்கில ஆதார நிலையம் (PESC) ஆசிரிய மத்திய நிலையம் ஆகியவற்றில் இணைக்கப்பட்டவர்களை வளவாளர்களாகப் பயன்படுத்துவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது. அவர்களின் நாளாந்தக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் இந்நிகழ்ச்சித்திட்டம் கொண்டு செல்லப்பட வேண்டும். அத்துடன் இந்நிகழ்ச்சித்திட்டமானது ஒழுங்காகவும், கிரமமான முறையிலும் கொண்டு செல்லப்படுவது மிக முக்கியமானது.

ஆசிரிய மத்திய நிலையத்திற்கு அருகிலுள்ள ஆங்கில பாடத்தில் பின்தங்கிய தரம் 10 மாணவர்களை இந்நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்குவது சாலச் சிறந்ததாகும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை வடமராட்சி வலயத்தில் யாழ்.புற்றளை மகா வித்தியாலயமும், யாழ்.ஞானசிவாச்சாரியார் கல்லூரியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. நாளை புலோலி மெ.மி.த.க பாடசாலையிலுள்ள ஆசிரிய நிலையத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (109)

# போசாக்கு வார கண்காட்சி



யாழ்.மாநகர சபையின் சுகாதார பணிமனையின் ஏற்பாட்டில் போசாக்கு வாரத்தை முன்னிட்டு தாய், குழந்தை கர்ப்பிணித தாய்மார்களின் சுகவாழ்வை மேம்படுத்தும் நோக்கில் போசாக்குக் கண்காட்சி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது.

கண்காட்சியில் யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் மூலம் நிறைவான போசாக்கை பெறுவதை நோக்கமாகக் கொண்டு இந்தக்கண்காட்சி அமைந்துள்ளது. சிறுவர்களின் நலன்கள், கர்ப்பிணித் தாய்மார் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் மற்றும் சிறுவர்கள் பராமரிப்பு போன்ற விடயங்கள் இங்கு முதன்மைப் படுத்தப்பட்டுள்ளன. இந்தக் கண்காட்சியை பெருமளவான சிறுவர்கள், தாய்மார்கள் பார்வையிட்டனர். (02)

# பாடவேளை அளவை கட்டாயமாக்க திட்டம்

வடமாகாணம் கல்வி அபிவிருத்தியில் பின்தங்கியிருப்பதனை கருத்தில் கொண்டு ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டின் பாடவேளைகளின் அளவை கட்டாயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு அமைவாக "கல்வி அபிவிருத்தி செயற்திட்டம் - 2012" இற்கு அமைவாக வடமாகாண கல்வி அமைச்சு சகல பாடசாலைகளுக்கும் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

இக்கடிதத்தின் பிரகாரம் சகல ஆசிரியர்களும் 35 பாட வேளைகள் கற்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதில் அதிபர், பிரதி அதிபர், பகுதித்தலைவர், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (42)

# முரசின் இன்றைய பலன்

(01.07.2012 – ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 17 ஆம் திகதி. துவாதசி காலை 7.40 வரை. திரயோதசி பின்னிரவு 5.16 வரை. நட்சத்திரம் அனுசம் முன்னிரவு 7.49 வரை. மரணயோகம். பிரதோஷ விரதம். இராகுகாலம் 4.26 - 5.56 வரை. சுபநேரம் 8.56 - 10.26 வரை. எமகண்டம் 11.56 - 1.26 வரை. குளிகைகாலம் 2.56 - 4.26 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புதிய முயற்சி கூடாது, நண்பர்கள் அனுகூலம், குடும்பத்தில் ஒற்றுமை, சகோதரர் உதவி. |
| ரிஷபம் | கூட்டு முயற்சி, இடையூறுகள் விலகும், திடீர் தன வரவு, தெய்வீக யாத்திரை. |
| மிதுனம் | ஆயாசம், ஒத்துழைப்புக் கிடைக்கும், அதிகாரிகள் ஆதரவு, வீண்பழி கேட்டல். |
| கடகம் | தொல்லைகள், உடலில் சோர்வு, குல தெய்வ வழிபாடு, மனச் சஞ்சலம். |
| சிம்மம் | செலவினம், எதிர்ப்புக்கள் மறையும், வாக்குறுதி தவிர்க்கவும், பிரச்சினைகள் உருவாகும். |
| கன்னி | நிம்மதி, உயர் அதிகாரிகள் ஆதரவு, இட மாற்றம், அலைச்சல், சிந்தித்து செயற்படவும். |
| துலாம் | வெற்றி, சுமாரான குடும்ப ஒற்றுமை, இறை வழிபாடு நன்று, நண்பர் விரோதியாவார். |
| விருச்சிகம் | புகழ், ஓரளவு காரியானுகூலம், மருத்துவச் செலவுகள், அயலவருடன் முரண்பாடு. |
| தனுசு | நல்ல வெற்றி, நண்பர்கள் உதவுவார், அரச உதவிகள் கிட்டும், தனகாரிய இலாபம். |
| மகரம் | முற்பகல் நன்று, அதிர்ஷ்டம், துணிவே துணை, வழக்குகளில் வெற்றி. |
| கும்பம் | பொருள் விருத்தி, எதிர்பார்த்த ஆதாயம், கடன் நெருக்கடி, பிழவாதம் தவிர்க்கவும். |
| மீனம் | தொழில் விஸ்தரிப்பு, நினைத்த காரியம் நிறைவேறும், சஞ்சலம் தீரும், உறவினரால் நன்மை. |

# 15 ஓட்டங்களால் இங்கிலாந்து வெற்றி



(லண்டன்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி 15 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இங்கிலாந்து அணி, மோர்கனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மோர்கன் 89, ட்ரொட் 54, இயன் பெல் 41, அணித் தலைவர் குக் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரெட்லீ, வட்சன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 273 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி இங்கிலாந்து அணியின் பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ளத் தடுமாறியது. இறுதியில் 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் வோணர் 56 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் புரொட், அண்டர்சன், பின், பிரெஸ்னன் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக மோர்கன் தெரிவானார்.

# மொகமட் ஹபீஸ் சதம்
## பாகிஸ்தான் வலுவான ஆரம்பம்



(கொழும்பு)

மொகமட் ஹபீஸ், அசார் அலி ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வலுவான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று கொழும்பு எஸ்.எஸ்.சி. விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு மொகமட் ஹபீஸ், தௌபீக் உமர் ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தனர். முதலாவது விக்கெட்டுக்காக இந்த இணை 78 ஓட்டங்களைப் பெற்றது. தௌபீக் உமார் 65 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து மொகமட் ஹபீஸ் அசார் அலி இணை இலங்கை அணியின் பந்து வீச்சாளர்களைப் பதம் பார்க்கும் வகையில் தமது ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட்டை இழந்து 334 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இரண்டாவது விக்கெட்டுக்காக ஹபீஸ், அசார் அலி இணை 257 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் மொகமட் ஹபீஸ் 281 பந்துகளை எதிர்கொண்டு 18 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 172 ஓட்டங்களையும், அசார் அலி 187 பந்துகளை எதிர்கொண்டு 6 பவுண்டரிகள் அடங்கலாக 92 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் மத்தியூஸ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

# இளம் வீரருடன் களமிறங்கத் தயார்

(லண்டன்)

ஒலிம்பிக் போட்டியில் இளம் வீரர் விஷ்ணு வர்தனுடன் இணைந்து களமிறங்கத் தயார் என்று லியாண்டர் பயஸ் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

லண்டன் ஒலிம்பிக் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள்இரட்டையர் பிரிவில்பயசுடன்இணைந்து விளையாட மாட்டோம் என மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா இருவரும் போர்க்கொடி தூக்கினர்.

இது குறித்து பயஸ் குறிப்படுகையில், கடினமான உழைப்பு மற்றும் நல்ல ரென்னிஸ் விளையாட்டுக்கு இடையூறாக கீழ்த்தரமான அரசியல் வருவதை விரும்பவில்லை. ஆறாவது முறையாக ஒலிம்பிக் போட்டியில் விளையாடுவதை ஆவலோடு எதிர்பார்க்கிறேன். மக்களுக்கும், தேசியக் கொடிக்கும் மதிப்பளித்தே கடந்த 22 ஆண்டுகளாக விளையாடி வருகிறேன். நாட்டுக்காக, ரென்னிஸ் சங்கத்தின் முடிவுக்கு கட்டுப்படுகிறேன். ஒலிம்பிக் போட்டியில் விக்ஷ்ணுவர்தன், சானியாவு டன் இணைந்து விளையாடத் தயார் எனவும் தெரிவித்தார்.

# லண்டன் ஒலிம்பிக்கில் ரஹ்மானின் பாடல்

(லண்டன்)

லண்டனில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டி தொடக்க விழாவில் ரஹ்மானின் பாடலும் இடம்பெறுகிறது.

லண்டன் ஒலிம்பிக் தொடக்க விழா நிகழ்ச்சியில் ஒற்றுமையையும், கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இசைக்கலைஞர்களின் பாடல்கள் இடம் பெறுகின்றன.

அந்தவகையில் இந்தியாவிலிருந்து இளையராஜாவின் இசையில் உருவான ராம் லட்சுமண் பாடலான நாந்தான் நொப்பண்டா என்ற பாடலை தேர்வு செய்துள்ளனர்.

தற்போது ரஹ்மானின் இசையும் இந்த தொடக்கவிழா நிகழ்ச்சியில் இடம்பெற இருப்பதாக' அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஹ்மானின் எந்தப் பாடல் இடம் பெறப் போகிறது என்பது இதுவரை வெளியிடப்படவில்லை.

# 4ஆவது சுற்றில் ஜோகோவிச், பெடரர்

(லண்டன்)


விம்பிள்டன் ரென்னிஸ் போட்டித் தொடரின் நான்காவது சுற்றுக்கு ஜோகோவிச் மற்றும் ரோஜர் பெடரர் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர். இதே வேளை, மகளிர் இரட்டையர் பிரிவு 3ஆவது சுற்றில் விளையாட இந்தியாவின் சானியா மிர்சா, பெத்தானி மேட்டக் (அமெரிக்கா) ஜோடி தகுதி பெற்றது.

இரண்டாவது சுற்றில் பிரான்சின் பாரட்ஸ் ககான், லாடெனோவிக் ஜோடியுடன் நேற்று முன் தினம் மோதிய சானியா ஜோடி 6-3, 6-2 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

தேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவின் நான்காவது சுற்றுக்கு சேர்பியாவின் ஜோகோவிச், சுவிஸின் ரோஜர் பெடரர் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

ஜோகோவிச் 3ஆவது சுற்றில் ஸ்டெபானிக்கை எதிர் கொண்டார். இதில் 4-6, 6-2, 6-2, 6-3 என்ற செட் கணக்கில் வென்று 4ஆவது சுற்றுக்கு நுழைந்தார்.

ரோஜர் பெடரர் (4-6, 6-7 (3-7), 6-2, 7-6 (8-6), 6-1 என்ற செட் கணக்கில் பிரான்ஸ் வீரர் ஜிலியனை கடும் போராட்டத்துக்குப் பின்னர் வீழ்த்தி 4ஆவது சுற்றில் நுழைந்தார்.



# நடாலை வென்றது ஆச்சரியம்

(லண்டன்)

நடாலை வெற்றிபெற்றது ஆச்சரியம் மட்டுமல்ல, கற்பனை போன்று உள்ளது என அவரைத் தோற்கடித்த 26 வயதான லுகாஸ் ரோசல் தெரிவித்தார்.

என்னால் இதனை நம்ப முடியவில்லை. எனது மகிழ்ச்சியை வெளிப்படுத்த வார்த்தைகளே இல்லை. நடாலுக்காக நான் வருத்தப்படுகிறேன். அவர் சிறப்பான வீரர். அவரை வென்றது மகிழ்ச்சிதான். அவர் நிலையில் நாம் இருந்தால் எவ்வளவு மன உளைச்சல் ஏற்பட்டிருக்கும் என்பதை நான் நன்கு உணர்வேன். மீண்டும் இது போன்ற ஒரு ஆட்டத்தை என்னால் வெளிப்படுத்த முடியும் என்று நம்புகிறேன். அத்துடன் இந்த வெற்றி அடுத்த போட்டியாளர்களுடன் மோதுவதற்கு உந்து சக்தியாக அமையும் என்பதில் ஐயமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# தோல்வி அவலம் இல்லை



(லண்டன்)

ரென்னிஸ் போட்டியொன்றில் மாத்திரமே நான் தோல்வியடைந்துள்ளேன். அதுவொரு அவல நிகழ்வு கிடையாது என ஸ்பெயினின் நட்சத்திர வீரர் நடால் தெரிவித்தார்.

போட்டிகளில் வெற்றிகள் கிடைக்கும், தோல்விகள கிடைக்கும். கடந்த நான்கு மாதங்களும் எனக்கு மிகச்சிறப்பான மாதங்களாக அமைந்திருந்தன.

போட்டிகளுக்காகக் களமிறங்கும்போது மிகவும் எழுச்சிபெற்ற எதிராளி ஒருவருக்கெதிராகப் போட்டிகளில் பங்குபற்றும் போது தோல்வியடைய வேண்டிய சூழ்நிலையும் வரும் என்பதை நான் எப்பொழுதும் மனதிற் கொண்டிருப்பவன். அது அவ்வளவும் தான். அத்தோடு அதுவொரு அவல நிகழ்வு அல்ல. இதுதான் வாழ்க்கை. இப்போட்டியில் நான் வெற்றிபெற்றிருக்க வேண்டும். ஆனால் தோற்றுவிட்டேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தாயாருக்கு சமர்ப்பணம்

யூரோ கிண்ண கால்பந்து தொடரின் அரையிறுதிப் போட்டியில் ஜேர்மனி அணிக்கு எதிராக அடித்த இரண்டு கோல்களையும் எனது தாயாருக்கு சமர்ப்பிக்கின்றேன் என இத்தாலியின் வெற்றிக்கு வித்திட்ட 21 வயதான மரியோ பலோடெலி தெரிவித்தார்.

ஜேர்மனியை தோற்கடித்த இந்த இரவு எனது வாழ்நாளில் மறக்க முடியாத, சிறந்த இரவாகும். இந்த ஆட்டத்தை எனது தாயார் மைதானத்தில் அமர்ந்தும், எனது தந்தை தொலைக்காட்சியிலும் பார்த்துக் கொண்டிருந்தனர். எனது தாயார் முன்பு, இரண்டு கோல்கள் அடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆட்டம் முடிந்ததும் எனது தாயாரைச் சந்தித்தேன். 'இந்த கோல்களை அடித்தது உங்களுக்காகத் தான். உங்களுக்கே அதனை சமர்ப்பிக்கிறேன்' என்று அவரிடம் கூறினேன். இறுதிப்போட்டியில் எனது தந்தை முன்பு விளையாடி 4 கோல்கள் அடிக்க விரும்புகிறேன். இறுதிப் போட்டி இதை விட சிறப்பான நாளாக இருக்கும் என்று நம்புகிறேன் என்றார்.

# யூரோ கிண்ண கால்பந்து இறுதிப் போட்டி இன்று

(லெவிவ்)

யூரோ கிண்ண கால்பந்து தொடரின்இன்றைய தினம் நள்ளிரவு நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் இத்தாலி, ஸ்பெயின் அணிகள் மோதவுள்ளன. 14ஆவது யூரோ கிண்ண கால்பந்து போட்டி போலந்து, உக்ரைன் நாட்டில் நடைபெற்று வருகிறது. கடந்த 8ஆம் திதி தொடங்கிய இந்தப் போட்டி தற்போது இறுதி கட்டத்தை எட்டி விட்டது. இதில் 16 அணிகள் பங்கேற்றன.

இறுதிப் போட்டி உக்ரைனில் உள்ள கிவ் நகரில் இன்று நடைபெறவுள்ளது. இதில் நடப்பு சம்பியன் ஸ்பெயின் முன்னாள் சம்பியன் இத்தாலி அணிகள் மோதுகின்றன. இரு அணிகளுமே சமபலம் பொருந்தியவை என்பதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும். இரு அணிகளும் 'சி' பிரிவில் இடம் பெற்றவை. தோல்வியை சந்திக்காமல் இறுதிப் போட்டிக்கு நுழைந்து உள்ளன. இரு அணிகளும் மோதிய லீக் ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையானது.

ஸ்பெயின் அணி யூரோ கிண்ணத்தை 2 முறை வென்று உள்ளது. அந்த அணி 3ஆவது முறையாக கிண்ணத்தை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது. அந்த அணியில் இனஸ்டா, க்ஷவி ஹெர்னாண்டஸ், பேப்ரிக்ஸ், க்ஷபி அலோன்சா, டேவிட் சில்வா, பெர்ணாண்டோ டொரஸ் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர்.

அந்த அணியின் கப்டனும், கோல் கீப்பருமான கேசிலாஸ் தூணாக உள்ளார். இந்தப் போட்டித் தொடரின் சிறந்த கோல்கீப்பரில் ஒருவராக அவர் திகழ்கிறார்.

இத்தாலி அணியின் முன்கள வீரர் மேரியோ பலோடெலி அந்த அணியின் துருப்பு சீட்டாக உள்ளார். அவர் ஜேர்மனிக்கு எதிரான அரையிறுதியில் அதிரடியாக ஆடி 2 கோல்களை அடித்தார். இந்தப் போட்டித் தொடரில் அவர் 3 கோல்கள் அடித்து உள்ளார். இது தவிர கேசியானோ, ஆண்டிரியோ பிர்லோ, டிமாண்டி போன்ற சிறந்த வீரர்கள் அந்த அணியில் உள்ளனர். இத்தாலி அணி பின்களத்தில் பலம் வாய்ந்தது. இதனால் ஸ்பெயின் அணி சம்பியன் பட்டத்தை தக்க வைத்துக் கொள்ள கடுமையாகப் போராட வேண்டும்.

உலக மற்றும் யூரோ சம்பியனான ஸ்பெயின் அணிக்கு எல்லா வகையிலும் இத்தாலி சவாலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# வடமராட்சியைச் சேர்ந்த மிதுலன் சுவிஸ் தேசிய கால்பந்து அணியில்





கால்பந்துடன் மிதுலன் மைதானத்தில் இருப்பதையும், தேசிய அணி வீரர்களுடன் மிதுலன் நிற்பதையும் காணலாம்.

(வடமராட்சி)

சுவிஸ் தேசிய கால்பந்தாட்ட அணியில் வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட இராஜகுமார் மிதுலன் இடம்பிடித்துள்ளார்.

வடமராட்சியைச் சேர்ந்த இமையாணன் கிராமத்தைச் சேர்ந்த இராஜகுமார் மிதுலன் கால்பந்தாட்டத்தில் சிறு வயது முதலே ஆர்வம் கொண்டு அதில் தீவிர பயிற்சிகளையும் மேற்கொண்டு வந்தார்.

இதில் சுவிஸ் நாட்டில் பல போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தி ஆடி வந்ததுடன் சுவிஸ் தேசிய கால்பந்தாட்ட தேர்வாளர்களின் கவனவத்தையும் ஈர்க்கும் வகையில் மிதுலனின் ஆட்டம் அமைந்திருந்தது.

அதன் காரணமாக 16 வயதுப் பிரிவு சுவிஸ் தேசிய அணியில் இடம்பிடித்துள்ளார்.

சுவிஸ் நாட்டு தேசிய அணியில் இடம்பிடித்த மிதுலன் இடம்பிடித்து எமக்கும் நமது ஊருக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளார்.

மிதுலன் கால்பந்து உலகில் மேலும் வளர்ந்து தனது திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என வடமராட்சி இமையாணன் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (18)

# பருத்தித்துறையில் வீரதீர விளையாட்டு

விளையாட்டு செய்திகள்

(தும்பளை)

பருத்தித்துறை மலாயன் சாண்டோ நிறுவனத்தினர் வடமாகாண ரீதியாக நடத்திய வீரதீர விளையாட்டு நிகழ்வுகள் கடந்த 2005ஆம் ஆண்டுக்குப் பின் நடைபெற்றுள்ளது.

இதில் பளுதூக்கல், மல்யுத்தம், குத்துச் சண்டை உள்ளிட்ட விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

வீரர்களின் உடல் நிறையை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்ற பளுதூக்கல் போட்டியில் அறிவிக்கப்பட்ட முடிவுகளின் பின்வருமாறு:.

62 கிலோவிற்குட்பட்டவர்கள் பிரிவில் முதலாமிடம் டி. டொமினிக், இரண்டாமிடம் ப. கிருஷ்ணதரன், மூன்றாமிடம் எல். பிரணவன்.

69 கிலோவிற்குட்பட்டவர்கள் பிரிவில் முதலாமிடம் எம். தனுசன், இரண்டாமிடம் எஸ். பார்த்தீபன், மூன்றாமிடம் அலெக்ஸ்சாண்டர்.

77 கிலோவிற்குட்டவர்கள் பிரிவில் முதலாமிடம் ஜே. வத்சலன், இரண்டாமிடம் ஆர். டொமினிக், மூன்றாமிடம் எஸ். சயந்தன்.

இப்போட்டி நிகழ்வில் பெருந்திரளான பார்வையாளர்கள் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (10)

# வடமாகாண கூடைப்பந்து வென்றது உடுவில் மகளிர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித்திணைக்களமும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கமும் இணைந்து முதல் தடவையாக வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 13 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையும் மோதின.

முதல் பாதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி 10 - 04 புள்ளிகள் என முன்னிலையில் இருந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்திலும் உடுவில் மகளிர் கல்லூரி 09 - 02 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலையில் இருந்தது.

ஆட்ட நிறைவில் உடுவில் மகளிர் கல்லூரி 19-06 புள்ளிகள் என்ற அடிப்படையில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையை வெற்றி பெற்று யாழ். வடமாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

# புத்தூர் கலைமதி, ஆவரங்கால் மத்தி இன்றைய இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை

(கைதடி)

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் இன்றைய தினம் இரவு 8.00 மணிக்கு குமரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

குமரன் விளையாட்டுக்கழகத்தினால் கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் இக்கரப்பந்தாட்டத் தொடரில் வடமாகாணத்தைச் சேர்ந்த பல முன்னணி அணிகள் பங்குகொண்டன.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் அணி மோதியது. இதில் முதல் செட்டை ஆவரங்கால் மத்தி கைப்பற்றி முன்னிலை பெற்றது. இருப்பினும் பிரதீப் அணி அடுத்த இரண்டு செட் ஆட்டத்தில் சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்தி அச்செட்களைக் கைப்பற்றியது. இதன் பின் வீறுகொண்ட ஆவரங்கால் மத்தி அணியினர் தமது வேகமான ஆட்டமுறையைக் கைக்கொண்டு அடுத்த இரு செட்களையும் கைப்பற்றி போட்டியை வென்றனர். இறுதியில் 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்ற ஆவரங்கால் மத்தி அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி அணியும், கிளிநொச்சி புதிய பாரதி அணியும் மோதின. இப்போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய புத்தூர் கலைமதி அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இன்றைய இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (118)

# டெஸ்ட் அணியில் மீண்டும் மலிங்க?

(கொழும்பு)

டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க மீண்டும் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகத் தான் எண்ணுவதாக இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளர் சம்பக்க ராமநாயக்க தெரிவித்துள்ளார். லசித் மலிங்கவின் உடல்நிலை அதியுச்ச நிலையை அடையுமாயின் அவர் நிச்சயமாக டெஸ்ட் போட்டிகளுக்குத் திரும்புவார் எனவும் அவர் தெரிவித்தார். தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த முழங்கால் உபாதை காரணமாக 2011ஆம் ஆண்டு தான் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக லசித் மலிங்க அறிவித்திருந்தார். லசித் மலிங்க இறுதியாக 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் டெஸ்ட் போட்டியொன்றில் பங்கேற்றிருந்தார்.



தனது முழங்கால் பிரச்சினை காரணமாகத் தான் 3 வகையான போட்டிகளிலிருந்து விலக வேண்டி ஏற்படும் என அஞ்சியதன் காரணமாக லசித் மலிங்க டெஸ்ட் போட்டிகளிலிருந்து விலக வேண்டி ஏற்பட்டதாக சம்பக்க ராமநாயக்க தெரிவித்தார்.

எனினும் லசித் மலிங்க திரும்பவும் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றுவார் என்ற எண்ணம் தனக்குக் காணப்படுவதாக அவர் தெரிவித்தார். லசித் மலிங்க தனது உடற்தகுதி தொடர்பாக அதிக கவனத்துடன் கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்த அவர், லசித் மலிங்க ஒவ்வொரு டெஸ்ட் தொடரிலும் ஒரு போட்டியில் விளையாடினாலே தான் மகிழ்ச்சியடைவேன் எனத் தெரிவித்தார். ஏனெனில் விளையாடும் அந்தப் போட்டியில் அவர் இலங்கைக்காக வெற்றிகளைப் பெற்றுக் கொடுப்பார் என எண்ணுவதாகவும் தெரிவித்தார்.

டெஸ்ட் போட்டிகளைவிளையாடுவதற்குரிய தாகம் லசித் மலிங்கவிடம் காணப்படுவதாகத் தெரிவித்த சம்பக்க ராமநாயக்க, லசித் மலிங்கவால் இலங்கை அணிக்குச் சிறந்த சேவையை ஆற்ற முடியும் என எண்ணுவதாகவும் தெரிவித்தார்.

# சமநிலை கேள்விக்குறி

(லண்டன்)

இங்கிலாந்து ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் சமநிலை கேள்விக்குரியது என அவுஸ்ரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரரும், உபதலைவருமான ஷேன் வட்சன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணியின் 7ஆம் இலக்கத் துடுப்பாட்ட வீரராக மத்தியூ வேட் களமிறங்குவது அவுஸ்ரேலிய அணிக்குச் சாதகமாக அமையக்கூடியது எனத் தெரிவித்த வட்சன் மத்தியூ வேட் போன்ற மிகுந்த திறமைகளை உடைய ஒருவர் 7ஆம் இலக்கத்தில் ஆடும்போது ஆரம்ப மற்றும் மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர்களுக்குரிய அழுத்தம் குறைவாகக் காணப்படும் எனத் தெரிவித்தார்.



# கிரீடம் படுத்திய பாடு...

- பாமரன் -

"டெசோ" வை (அதுவாகப்பட்டது தமிழீழ ஆதரவாளர் அமைப்பு) மீண்டும் ஆரம்பிக்கலாம் என்கிற பல்லவியை பழைய "டெசோ"க்காரர் வீரமணி லாவகமாக ஆரம்பித்துவைக்க ஈழப்போரில் முன் நின்று போராடிய களைப்போடு "முத்தமிழறிஞர்" சரணமாகத் தொடர சுபவீ சுருதி சேர்க்கக் களைகட்டிவிட்டது தமிழீழக் கச்சேரி.

இதில் எரிச்சல்படவும் ஏகடியம் பேசவும் என்ன இருக்கிறது? நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளானா நம் முத்தமிழ்க் காவலர்?

"இலட்சியத்தில் உறுதி"யும் "கொள்கையில் நேர்மை"யும் கொண்டு எம் தலைவர் எங்கெங்கெல்லாம் அலைகடலென ஆர்ப்பரித்து வா அடலேறே... என அழைக்கிறாரோ அங்கெல்லாம் போய் நின்றேன்: நின்று? தமிழீழத்துக்காக 1986 ஆம் ஆண்டு தமிழ்க் காவலரால் கூட்டப்பட்ட கூட்டங்களில் நின்று,

"இலங்கையில் தமிழீழம் மலர ஆதரவு தருவேன். இலங்கைத் தமிழர்களுக்கு நிலையான உரிமையும் நிரந்தரப் பாதுகாப்பும் கிடைக்கும் வரை போராடுவேன். போராளிகளுக்கு அடைக்கலம் தரும் கடமையில் இருந்து தவறாமல் இருப்பேன். தமிழினத்தின் பாதுகாப்புக்காக எந்தவிதத் தியாகத்துக்கும் தயாராக இருப்பேன். இந்தக் கடமைகளைச் செய்யும் போது மத்திய மாநில அரசுகளின் அடக்குமுறைகளுக்கு ஆளாக நேர்ந்தாலும் அவற்றை




இன்முகத்துடன் ஏற்பேன்.."

என்று தலைவர் சொல்லச் சொல்ல கூடவே ஓங்கி உறுதிமொழி எடுத்த இளைஞனாக நின்றேன். போதுமா? இதுதானா தலைவர் செய்த குற்றம்? இது குற்றமென்றால் ஒரு முறை அல்ல... ஓராயிரம் முறை கூட என்னுயிரை அடச்சே... தன்னுயிரை பலியிடத் தயங்கமாட்டார் எம் தலைவர். இதைக்கூட புரிந்துகொள்ளாமல்... (மீண்டும் "ஒரு "ச்சே" போட்டுக்கொள்ளவும்)

என்ன செய்ய, இல்லத்தைப் போலவே ஈழத்திலும் வந்த "சகோதர"ச் சண்டையை சாக்கிட்டு சுற்றியிருந்தவர்களுக்குக் கூட சொல்லாமல் டெசோவுக்குப் போட வேண்டியதாயிற்று பூட்டை. எம் கொற்றவன் குற்றம் செய்யவில்லை. குற்றம் செய்ததெல்லாம் நம் மக்கள்தான். பின்னே..?

கடலில் போட்டாலும் கட்டையாவேன் கரையில் போட்டாலும் விறகாவேன் என்றிருந்தவரை எம்.ஜி.ஆர் போன பின்பு வலுக்கட்டாயமாக இழுத்து வந்து "முள்கிரீடம்" சூட்டினால் அவர்தான் என்ன செய்வார் பாவம்? அதுவும் அவருக்கு எப்போதும் பிடிக்காத "முள் கிரீடம்".

அக்கிரீடம் படுத்தியபாடுதான் நேருவின் மகளை வரவேற்று நிலையான ஆட்சியைத் தரச் சொன்னது...

அக்கிரீடம் படுத்தியபாடுதான் மண்டலை ஆதரித்தவரை கமண்டலக் கட்சிக்காரர்களோடு கூட்டணி வைக்கச் செய்தது...

அக்கிரீடம் படுத்தியபாடுதான் சொக்கத்தங்கம் சோனியாவோடு கூட்டு சேர வைத்து ஈழத்தமிழர் பிணங்களைப் பார்த்தும் அமைதி காக்க வைத்தது...

அக்கிரீடம் படுத்தியபாடுதான் லஞ்ச் பிரேக் உண்ணாவிரதம் இருக்க வைத்தது...

அக்கிரீடம் படுத்தியபாடுதான் மழை விட்டாலும் தூவானம் இருக்கத்தான் செய்யும் எனப் பேச வைத்தது...

அக்கிரீடம் படுத்தியபாடுதான் முத்துக்குமார் செத்துக்கிடந்தாலும் மகனது பர்த் டே பார்ட்டியைக் கொண்டாட வைத்தது...

அக்கிரீடம் படுத்தியபாடுதான் மருத்துவத்துக்காக சாவின் விளிம்பில் தமிழகம் வந்திறங்கிய மூதாட்டி பார்வதியம்மாளை திருப்பி அனுப்ப வைத்தது...

இப்பொழுது சொல்லுங்கள் யார் குற்றவாளி? "முள்கிரீடம்" அளித்தவரா? அல்லது அதைச் சுமந்தவரா?

# முதல் டெசோ நோக்கமே நிறைவேறவில்லை

- வீ.சூர்யநாராயண் -



தமிழ் ஈழ ஆதரவாளர்கள் அமைப்பான டெசோ மாநாட்டை கருணாநிதி 1986இல் மதுரையில் கூட்டினார். அதில் வாஜ்பாய், என்.டி.ராமராவ், ஹெச்.என்.பகுகுணா, உபேந்திரா, பல்வந்த்சிங் ராமுவாலியா, உன்னிகிருஷ்ணன், சுப்ரமணியன் சுவாமி, அப்துல் ரஷித், தினேஷ் கோஸ்வாமி ஆகியோர் உள்ளிட்ட தலைவர்கள் கலந்துகொண்டனர். இவர்களுடன் பல்வேறு ஈழத்தமிழ் போராளிக் குழுக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். இந்த மாநாடு ஈழப்பிரச்சினையை முன்னிறுத்தி ஒரு தேசிய தலைவராக தன்னைக் கட்டமைக்க கருணாநிதி செய்த முயற்சியாகும். இம்மாநாட்டின் நோக்கம் அகில இந்திய அளவில் தமிழ் ஈழம் என்கிற தனிநாடு உருவாவதற்காக ஆதரவு திரட்டுவதாகும். ஆனால் இந்த நோக்கம் நிறைவேறவில்லை.

அந்த ஆண்டுகளில் கருணாநிதியும் திமுகவும், இந்தியா பங்களாதேஷில் செய்ததுபோல இராணுவ நடவடிக்கையின் மூலம் இலங்கையில் தமிழர்களுக்காக ஒரு தனிநாட்டை பிரித்துத்தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். ஆனால் மதுரை மாநாட்டில் கலந்துகொண்ட தேசியக் கட்சிகள் எதுவும் இந்த நிலைப்பாட்டை ஆதரிக்கவில்லை. அத்துடன் டெசோ அமைப்பு, கருணாநிதிக்கு போராளிக் குழுக்களிடையே முழுமையான செல்வாக்கு இல்லை என்பதையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தது. டெசோ மாநாடு முடிவில் தமிழ்ப்போராளிக் குழுக்கள் ஒற்றுமையாகப் போராட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் இந்த ஒப்பந்தத்தின் மை கூட காயவில்லை. அதற்குள்ளாக யாழ்ப்பாணத்தில் டெலோ அமைப்பு புலிகளால் தாக்கப்பட்டு அதன் போராளிகளும் தலைவர் சபாரத்தினமும் கொல்லப்பட்டனர். டெலோவும் சபாரத்தினமும் கருணாநிதிக்கு நெருக்கமானவர்கள் என்பது இங்கே குறிப்பிடவேண்டிய விஷயம்.

தமிழ்நாட்டின் முக்கியமான அரசியல் கட்சியை தர்மசங்கடப்படுத்தக்கூடாதே என்று மதுரை மாநாட்டில் புலிகள் கலந்து கொண்டிருந்தாலும் பிற போராளிக்குழுக்களை ஒடுக்கி, வட மாகாணத்தில் தங்கள் தலைமையை வலுப்படுத்துவதில் பிரபாகரன் குறியாக இருந்தார் என்பதையே இது காட்டுகிறது. 1985 ஜூன் மாதம் கருணாநிதியின் பிறந்த நாளுக்கு தொண்டர்கள் வசூலித்துத் தந்த நிதியை ஈழப் போராளிக் குழுக்களுக்கு அளிக்க கருணாநிதி விரும்பியபோது, அதை ஏற்க பிரபாகரன் மறுத்துவிட்டார். இதன்மூலம் எம்ஜிஆருக்கு மிகவும் நெருக்கமாக ஆகமுடியும் என்று பிரபாகரன் அறிந்திருந்தார். தன்னுடைய நினைவுக் குறிப்புகளில் பாலசிங்கம், பிரபாகரன் ராமாவரம் தோட்டத்தில் எந்நேரமும் நுழையக்கூடிய செல்வாக்குப் பெற்றிருந்தார் என்று குறிப்பிடுகிறார். எம்.ஜி.ஆர். மிகப்பெரிய அளவில் நிதி உதவியையும் புலிகளுக்கு அளித்தார்.

நான்காம் ஈழப்போரின்போது இலங்கையில் தமிழர்கள் பெருமளவில் படுகொலை செய்யப்பட்ட தருணத்தில் கருணாநிதிதான் இங்கே முதல்வராக இருந்தார். அவர் அச்சமயம் புதுடில்லியின் இலங்கைக் கொள்கையையே ஏற்றுக்கொண்டு நடந்து கொண்டார். தமிழகத்தில் நிலவும் போட்டி அரசியலை புதுடில்லி அறிந்திருந்தது. எனவே கருணாநிதி நடத்திய உண்ணாவிரதம் போன்ற சில அரசியல் நடவடிக்கைகளை கண்டுகொள்ளவில்லை.

இன்றைய சூழ்நிலையில் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி போர்க்குற்றத்துக்காக தண்டிக்கவேண்டும் என்ற முயற்சிகள் நடக்கின்றன. திமுக தலைவரும் அதில் இணைந்துகொள்ள விரும்புகிறார். புலம்பெயர்ந்த தமிழர்களிடமும் தமிழ்நாட்டிலும் இழந்த பெயரை மீட்க விரும்புகிறார். அவர் இப்போது தனித் தமிழ் ஈழக்கோரிக்கையை முன்வைத்திருப்பது அரசியல் ரீதியாக அவர் ஒரு மறுவருகையை நிகழ்த்த விரும்புகிறார் என்பதையே காட்டுகிறது.

# புதுப்புது அர்த்தங்கள்




இளையராஜாவின் பாடல்களுக்காக ஓடிய படம்.

இந்த படத்தின் ரிலீஸ் திகதி குறித்துவிட்ட நிலையில், ரீ-ரெக்கோர்டிங்கிற்காக தயாரிப்பு தரப்பில் இருந்து இளையராஜாவை நெருக்க, இளையராஜா வேறு சில பணிகளில் பிஸியாக இருக்க, இளையராஜா வேறு சில படங்களில் பயன்படுத்திய இசையை எடுத்து இளையராஜாவின் அனுமதியின்றி படம் முழுவதும் பயன்படுத்தி இளையராஜா பின்னணி இசை அமைக்காமலே படத்தை ரிலீஸ் செய்துவிட்டார்கள்.

இதனால் கோபமான இளையராஜா அதன் பின்னர் இயக்குனர் பாலச்சந்தரின் படத்திலோ அல்லது அவரது கவிதாலயாவின் படத்திலோ பணியாற்றவில்லை..

# அன்னக்கிளி



தமிழ்த் திரை இசை வரலாற்றில் ஒரு மைல் கல் படம். இளையராஜா என்னும் இசை ஜாம்பவான் உருவான படம்.

பட்டி தொட்டி எங்கும் பாடல்கள் பிரபலம் அடைந்து படம் வெற்றிக்கு முக்கிய காரணமாகவும் அமைந்தது. இந்தப் படம் வெளி வந்த போது வந்த விகடன் விமர்சனத்தில் இளையராஜா பற்றியோ பாடல்கள் பற்றியோ ஒரு வார்த்தை கூட இல்லை என்பது ஆச்சரியமான உண்மை.

அந்த விமர்சனம் உங்கள் பார்வைக்கு ...

# "காதலின் தீபம் ஒன்று"

பாடலைப் பிடிக்காதவர்களே இல்லை எனலாம். ஆனால், குடல்வால் அறுவை சிகிச்சை காரணமாக மருத்துவமனையில் இருந்த நிலையில், இசைஞானியால் இந்தப் பாட்டு உருவாக்கப்பட்டது என்றால் நம்ப முடிகிறதா. அதுதான் உண்மை.

"தம்பிக்கு எந்த ஊரு" படம் முடிந்துவிட்ட சூழ்நிலை. "காதலின் தீபம் ஒன்று" பாட்டுக்கான காட்சிப் படப்பிடிப்பு மட்டும்தான் மிச்சம் இருந்திருக்கிறது. "ராஜா" - இசை அமைத்துக் கொடுத்துவிட்டால் பாடலை எடுத்து, படத்தையும் முடித்து விடலாம்.




ஆனால், அந்த நேரம் பார்த்து குடல்வால் அறுவை சிகிச்சை காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்திருக்கிறார் ராஜா. என்ன செய்வதென்று தெரியாமல் மருத்துவமனைக்கே சென்றுருக்கிறார் படத்தின் தயாரிப்பாளர் பஞ்சு அருணாசலம்.

பஞ்சுவை பார்த்த ராஜா, ஒரு விசில் கொண்டு வரச் சொன்னாராம். அந்த விசில் மூலமாக "காதலின் தீபம் ஒன்று" பாட்டு ராகத்தை Rough - ஆக விசிலடித்துக் காண்பித்திருக்கிறார். அது "ஓகே" என்று பஞ்சு சொன்னதும் அதற்கான "நோட்ஸ்" எழுதிக் கொடுத்து, போன் மூலமாகவே, அந்தப் பாடலைப் பாடிய எஸ்.பி.பி, ஜானகிக்கு ஆலோசனையும் கொடுத்திருக்கிறார் ராஜா. அப்படி இசையமைக்கப்பட்டதுதான் இந்த சூப்பர் டூப்பர் ஹிட் "காதலின் தீபம் ஒன்று" பாட்டு.

# பியர் டின்களால் யாழில் டெங்கு பெருகும் அபாயம்



யாழ். குடாநாட்டில் டெங்கு பரவுவதில் முக்கிய பொருட்களாக பியர் டின்கள் மற்றும் மதுப் போத்தல்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. யாழ். குடாநாட்டில் தற்போது எந்தவகையான கட்டுப்பாடுகளும் இன்றி பியர் அதிகளவில் மதுபானக் கடைகள் முதல் ஏனைய கடைகளிலும் பல்வேறு வடிவங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதனை ஆட்கள் நடமாட்டமற்ற பகுதிகள், வயல்வெளிகள், தோட்டங்கள், கைவிடப்பட்ட காணிகள் மற்றும் இரவு வேளைகளில் வீதி ஓரங்களில் நின்றவாறு இளைஞர்கள் மிகவும் சாதாரணமாக அருந்திவிட்டு வெற்று டின்களை எறிந்து விட்டுச்செல்லும் நிலையும் காணப்படுகின்றது.

மிகவும் ஆர்வத்துடன் இளைஞர்கள் பருகி வரும் பியர் டின்கள் மழைக் காலங்களில் நீர் நிரம்பி டெங்கு நுளம்புகள் பெருகுவதற்குக் காரணமாக அமைவதாகவும் பியர் அருந்துபவர்கள் வெற்று டின்களை பாதுகாப்பாக நீர் தேங்காத வண்ணம் கைவிட வேண்டும் எனவும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவிக்கின்றார்கள். இச்செய்தி எமக்கு இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றது. ஒன்று யாழ்ப்பாணத்தில் நிலவும் கட்டுக்கு மீறிய இளைஞர் மத்தியில் பழக்கத்தில் உள்ள சோமபான பழக்க வழக்கங்கள். இரண்டாவது சோம பானத்தை பகிரங்கமாக பருகும் அளவிற்கு வளர்ந்துள்ள கலாசார சீரழிவு. இவ்விரண்டும் ஆரோக்கியமான விடயம் அல்ல. 30 வருட கால யுத்தம் விட்டுச் சென்ற சீரழிவுகள் இவை. புலம் பெயர் தேசத்து "கலாசார" உள்வாங்கலே முக்கியமான காரணமாகவும் இருக்கின்றது இவற்றிற்கு.

# சினிமா



- பேசும் படங்கள் வருவதற்கு முன் இந்தியாவில் 1300 ஊமைப் படங்கள் வெளியிடப்பட்டன.
- ஹிந்தியில் வெளியான திரைப்படமான "சங்கம்" இரண்டு இடைவேளைகளை கொண்டது.
- இந்தியாவில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஓடிய திரைப்படம் "ஷோலே".
- சார்ளி சாப்ளின் தயாரித்த முதல் திரைப்பம் "தி கிட்".
- ஜேம்ஸ்பொண்ட் கதாபாத்திரம் தோன்றிய முதல் திரைப்படத்தின் பெயர் "டாக்டர் நோ".
- சிறப்பு ஒஸ்கார் விருது வென்ற சத்யஜித்ரேயின் முதல் திரைப்படம் "பதேர் பாஞ்சாலி".
- இந்தியாவின் முதல் 3டி சினிமா "மை டியர் குட்டிச்சாத்தான்".
- இந்தியாவில் சினிமா கமெராவை முதலில் தயாரித்தவர் ஆன்ந்த்ராவ்.




## P.B.ஸ்ரீனிவாஸ்

இசைஞானி இளையராஜாவுக்காக ஒரு பாட்டு எழுதியிருக்கிறார்.
தமிழ் பாட்டு இல்லை... ஹிந்திப் பாட்டு.
ஆனால் அது ஹிந்திப் படத்திலே இல்லை... தமிழ் படத்தில்தான்.
நல்ல அருமையான பாடல்கள் நிறைந்த, மகேந்திரன் இயக்கத்தில் வெளிவந்த "நண்டு" படத்தில் "Kaise Kahoon Kuch Kahna Sakoon" என்னும் ஒரு ஹிந்திப் பாட்டு உண்டு.
அந்தப் பாட்டை இளையராஜாவுக்காக எழுதிக் கொடுத்தது P.B.ஸ்ரீனிவாஸ்.
கூடுதல் தகவல். இந்த படத்தின் கதை எழுத்தாளர் சிவசங்கரியினுடையது.
"அள்ளித் தந்த பூமி அன்னையல்லவா" பாடல் இந்தப் படத்தில்தான்.

# புரட்சித் தலைவர் லெனின் உடல் புதைக்கப்படுமா?



உலகப் பொதுவுடைமை சிந்தனையாளர்களின் புரட்சித் தலைவர் என்று போற்றப்படும் ரஷ்யத் தலைவர் லெனின், எண்பத்தி ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு காலமானார். இத்தனை ஆண்டுகளாக அவரது உடல் அடக்கம் செய்யப்படாமல் பதப்படுத்தி ரஷ்ய அரசால் மொஸ்கோவில் செஞ்சதுக்கம் எனும் இடத்தில் பாதுகாக்கப் பட்டு வருகிறது.

அவ்வுடலை இப்போது அடக்கம் செய்யவேண்டும் என்கிற குரல் ரஷ்யாவில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. பல்வேறு தடைகளை தாண்டி, இடையறாப் போராட்டங்கள் மூலம் ஒரு யுகப்புரட்சியை முன்னெடுத்ததால் ஏற்பட்ட உச்சக்கட்ட மனக்களைப்பு ஆட்சியாளராக, ஒரு நாளைக்கு பதினாறு மணி நேர கடும் உழைப்பு, புரட்சிக்கு முன்பாக உள்நாட்டுப் போர்களில் பங்கெடுத்ததால் ஏற்பட்ட உடல்நல குறைபாடுகள், பலமுறை இவர் மீது பிரயோகிக் கப்பட்ட கொலை முயற்சிகள், அதுபோன்ற ஒரு முயற்சியின் போது இவரது தொண்டையில் சிக்கிய துப்பாக்கிக் குண்டு, அதை நீக்க ஒரு அறுவை சிகிச்சை, இன்னும் ஏராளமான காரணங்கள். புரட்சி மூலமாக 1917 இல் ஆட்சிக்கு வந்த லெனி னின் உடல் அடுத்தடுத்த ஆண்டுகளில் தொடர்ச்சியாக சீர்குலைவு அடைந்துகொண்டே போனதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

1924, ஜனவரி 21 அன்று தனது ஐம்பத்து மூன்றாவது வயதில் லெனின் காலமானார். நியூரோசிபிலிஸ் எனப்படும் நரம்பு மண்டலம் தொடர்பான பிரச்சினைகளே அவரது மறைவுக்கு காரணமென்று மருத்துவர்களால் சொல்லப் பட்டது. லெனின் மறைந்த போது ரஷ்யப் புரட்சியை கடுமையாக எதிர்த்தவரும், லெனினின் எதிரியாக கருதப் பட்டவருமான பிரிட்டிஷ் தலைவர் வின்ஸ்டன் சேர்ச்சிலின் அஞ்சலி சுவாரஸ்யமானது. "ரஷ்யர்களின் துரதிர்ஷ்டம் லெனினின் பிறப்பு. அதை விட மோசமான, படுமோசமான துரதிர்ஷ்டம் அவருடைய இறப்பு" என்றார் அவர்.

சம்பிரதாயத்துக்காக சொல்லாமல், சர்வநிச்சயமாக சொல்லலாம் ரஷ்யர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு லெனின். அவரது உடலை புதைக்க அப்போதிருந்த ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் களுக்கு மனமில்லை. எதிர்கால விஞ்ஞான வளர்ச்சியில் எது வேண்டுமானால் சாத்தியமாக லாம் என்று கூறி லெனினின் உடலை பதப்படுத்தி பாதுகாக்க முடிவெடுத்தார்கள். ஒருவேளை இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் தொழில் நுட்பம் வருமேயா னால் லெனினை உயிர்ப்பிக்க வைக்கலாம் என்றுகூட அவர்கள் நம்பியிருக்கலாம்.

மூன்று நாட்கள் லெனினின் உடல் பொதுமக்கள் பார்வைக் காக வைக்கப் பட்டது. பத்து இலட்சம் பேர் அஞ்சலி செலுத்திய பிறகு அவரது உடல் பதப்படுத்தப்பட்டு நிரந்தர காட்சியாக மொஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் பேழையினுள் பாதுகாக்கப்பட்டது.

அதற்குப் பிறகு கிட்டத்தட்ட தொண்ணூறு ஆண்டுகளாக பல கோடி உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் லெனினின் உடலை பார்வையிட்டு அஞ்சலி செலுத்தி வருகிறார்கள். அவ்வப்போது ரஷ்ய கிறிஸ்தவ குருமார்கள் லெனின் உடல் முறையாக அடக்கம் செய்யப்படாதது குறித்து முணுமுணுத்தாலும் வெளிப்படையாக குரல் கொடுக்க தைரியமின்றி இருந்தார்கள்.

1989ஆம் ஆண்டு ரஷ்ய பாராளுமன்றத்தில் அமைச்சர் ஒருவர் லெனின் தனது உடலை தனது தாயாரின் சமாதிக்கருகில் புதைக்க வேண்டும் என்று விரும்பினார். எனவே செஞ்சதுக் கத்தில் இருக்கும் அவரது உடலை சென் பீட்டஸ்பேர்க்கில் புதைக்க வேண்டும் என்று சொன்னார். நாடு முழுக்க அவருக்கு கடுமை யான எதிர்ப்பு கிளம்பியது.

1990ஆம் ஆண்டு லெனினி னால் உருவாக்கப்பட்ட சோவியத் ரஷ்யக் கூட்டமைப்பு (யு.எஸ்.எஸ்.ஆர்) சிதறியது. கம்யூனிஸம் தோற்றுவிட்டது ென்று கூறி, ரஷ்யப் புரட்சியின் அடையாளங்களாக இருந்த நினைவுச்சின்னங்கள் பலவும் அப்போது அழிக்கப்பட்டன. ரஷ்யாவில் அசைக்க முடியாத இரும்புமனிதராகத் திகழ்ந்த ஸ்டாலினின் சிலைகள் அடித்து நொறுக்கப்பட்டன. ஆனால் அப்போதும் கூட லெனினின் உடலை அடக்கம் செய்வது குறித்து யாரும் நினைத்துப் பார்க்கக்கூட இல்லை. ஏனெனில் ரஷ்யர்களிடம் அவருக்கு இருந்த மதிப்பு அந்தளவுக்கு அசைக்க முடியாததாக இருந்தது.

காலம் ஓடிக்கொண்டிருக் கிறது, எழுபதுகளிலும் எண்பது களிலும் பிறந்து வளர்ந்த தலை முறைக்கு முந்தைய தலைமுறை மாதிரி பெரியளவில் லெனின் இப்போது இல்லை. இந்த சூழலைப் புரிந்து கொண்ட மிகைல் கோர்ப்பச்சேவ் (சோவியத் ரஷ்யா சிதற காரணமாக இருந்தவர்) சில ஆண்டுகளுக்கு முன்பு, யாரும் பேச விரும்பாத இந்த விஷ யத்தை பேசத் தொடங்கினார். "புதைந்துபோன விஷ யங்களை தோண்டியெடுக்கும் நிலையில் நாம் இப்போது இல்லை. இன்னமும் லெனின் உடலை நாம் பதப்படுத்தி, பாதுகாத்துக் கொண்டிருப்பதில் அர்த்தமேயில்லை. அவரது குடும்பத்தினர் விரும்பியபடி முறையாக மரியாதை செய்து அவரது உடலை அடக்கம் செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது" என்றார்.

கோர்ப்பச்சேவின் இந்தப் பேச்சுக்கு கம்யூனிஸ்ட் ஆதரவா ளர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. அதேசம யம் அவரது கருத்துக்கும் நிறைய பேர் ஆதரவு தெரிவிக்கத் தொடங்கினார்கள். கிட்டத்தட்ட நான்கைந்து தசாப்தகாலமாக எதிரும், புதிருமாக வரிந்து கட்டிக் கொண்டு ரஷ்யர்கள் இந்த விஷயத்தை விவாதித்து வருகிறார்கள். ரஷ்ய ஆளுங்கட்சி இந்த விவகாரத்தை முள் மேல் விழுந்த சேலையாக மிகக்கவனமாக கையாண்டு வருகிறது. அதே நேரம் லெனினின் உடல் புதைக்கப்பட வேண்டும் என்கிற மனவோட்டத்தை மக்களிடம் ஏற்படுத்தும் பணி களையும் மறைமுகமாக செய்து வந்தது. கடந்த ஆண்டு லெனி னின் உடலை புதைக்கலாமா என்று மக்களிடம் கருத்துக் கோரி 'குட் பை லெனின்' என்கிற இணையத்தளத்தை கூட உருவாக்கி இருந்தது.

மூன்றாவது முறையாக விளாடிமீர் புடின் ரஷ்ய ஜனாதி பதியாகிவிட்ட நிலையில் மீண்டும் லெனின் உடல் புதைப்பு விவகாரத்தை தீவிர மாக்கியிருக்கிறார். ஆழம் பார்ப்பது போல சில நாட்களுக்கு முன்பாக புடினுக்கு நெருக்க மானவரும், ரஷ்ய கலாசார அமைச்சருமான விளாடிமீர் மெடின்ஸ்கி இதைக் கூறினார்.

லெனினின் உடல் இத்தனை காலமாக அடக்கம் செய்யப்ப டாமல் இருப்பது அபத்தமானது. மரியாதைக்குரிய தலைவரான அவரது உடல் அரசு மரியாதை யோடு அடக்கம் செய்யப்பட வேண்டும். தனது உடல் எளிமை யான முறையில் அடக்கம் செய்யப்பட வேண்டுமென்பது அவரது கடைசி ஆசை. அதைக் கூட இத்தனை ஆண்டுகளாக நாம் செய்யாமல் இருப்பது வெட்கத்துக்குரியது. தற்போது அவரது உடல் வைக்கப்பட்டி ருக்கும் இடத்தை சோவியத் வரலாற்று நினைவிடமாக மாற்றிவிடலாம் என்று ரஷ்ய வானொலிக்கு அளித்த பேட்டி ஒன்றில் சொல்லியிருக்கிறார் மெடின்ஸ்கி.

முன்பு 89இல் லெனின் உடலை அடக்கம் செய்வது தொடர்பாக அமைச்சர் ஒருவர் பேசியபோது எழுந்த கடும் எதிர்ப்பெல்லாம் இப்போது இல்லை. மாறாக இணையத்த ளத்தில் எடுக்கப்பட்ட கணக் கெடுப்பில் 56 சதவிகிதம் பேர் லெனினின் உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்றே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். முந்தைய கணக்கெடுப்பில் 48 சதவிகிதம் பேர் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். வருடா வருடம் லெனினின் உடலை அடக்கம் செய்ய வேண்டும் என்கிற கருத்துக்கு ரஷ்யர்களிடையே ஆதரவு பெருகி வருவதையே இது காட்டுகிறது. நிலைவரத்தைப் பார்த்தால் விரைவில் லெனினின் உடல் அடக்கம் சென் பீட்டர்ஸ் பேர்க்கில் அவரது தாயாரின் சமாதிக்கருகே நடக்கும் என்று தான் தெரிகிறது.

இந்த விவகாரங்கள் சூடு பிடிப்பதற்கு முன்பாக ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி தன் கவலையை தெரிவித்திருந்தது. சோவியத்தின் வரலாற்றை மாற்றி எழுத நினைக்கிறார்கள். புரட்சித் தலைவர் லெனினின் நினைவுகளை மக்கள் மனதில் இருந்து முற்றிலுமாக அகற்ற நினைக்கிறார்கள் என்று அக்கட்சி கருத்து தெரிவித்திருந்தது. புரட்சியை புதைக்க முடியுமா என்கிற கேள்விக்கு காலம்தான் விடையளிக்க வேண்டும்.

- நன்றி-புதிய தலைமுறை.




A.J.Nimalrajan

# புதிய சோலர் கீபோர்ட்

லொஜிடெக் நிறுவனம் சூரிய ஒளி மின் சக்தியில் இயங்கும் ஒரு புதிய கீபோர்டை அறிமுகம் செய்திருக்கிறது. இந்த கீபோர்டின் முக்கிய விசேடம் என்னவென்றால் இந்த கீபோர்டை ஒரு சிறிய விளக்கின் ஒளியின் மூலம் சார்ஜ் செய்ய முடியும். அதனால் இந்த கீபோர்டுக்கு பற்றரிகள் தேவைப்படாது.

இந்த கீபோர்டுக்கு லொஜிடெக் வயர்லஸ் சோலார் கீபோர்ட் கே760 என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்த கீபோர்டை அப்பிளின் சாதனங்களான மேக், ஐபேட் மற்றும்



ஐபோன் ஆகியவற்றோடு எளிதாக இணைக்க முடியும்.

இந்த கீபோர்டில் சூரிய சக்தி கொண்ட பற்றரி ஒன்று இருக்கிறது. ஏற்கனவே கூறியது போல் இந்த பற்றரியை எந்த ஒரு ஒளியின் மூலமும் ரீசார்ஜ் செய்ய முடியும். அதனால் இந்த கீபோர்ட் அப்பிள் ப்ளூடுத் வயர்லஸ் கீபோர்டை விட சிறந்ததாக இருக்கிறது என்று விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இந்த கே760 கீபோர்ட் பார்ப்பதற்கு மிகவும் ஸ்டைலாக அழகாக இருக்கிறது. ப்ளூடுத் வசதியுடன் வருவதால் ஒரே நேரத்தில் மேக், ஐபேட் மற்றும் ஐபோனுடன் இந்த கீபோர்டை இணைக்க முடியும்.

இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால் இந்த கீபோர்டை முழு சார்ஜ் செய்துவிட்டால் ஒரு நாளுக்கு 8 மணி நேரம் 30 நாள்களுக்கு இயங்கும் திறன் கொண்டது. மேலும் மிகவும் இருட்டான இடத்திலும் இந்த கீபோர்ட் வேலை செய்யும்.

# சூரிய ஒளியில் இயங்கும் கணினி

கணினியை சூரிய ஒளி மூலம் இயக்கும் கணினி வந்துவிட்டது. சிம்ற்றோநிக்ஸ் செமிகண்டுக்டோர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் இந்த முயற்சியை எடுத்து உள்ளது.இந்த பயன்பாட்டின் மூலம் சூரிய ஒளியை சேமித்துக் கொண்டு, கணினி 3 நாள் வரை கணினியை நாம் இயக்கலாம். லினக்ஸ் இயங்குதளத்துடன் இந்த கணினி கிடைகிறது. இன்றைய கால கட்டத்தில் மிக முக்கியமான தொழில்நுட்பமாகும். இதன் விலை 60,999 ரூபா அகும். இதன் முலம் கார்பன் எமிசன் என்று சொல்லக் கூடிய, சுற்றுபுர சுழலுக்கு பாதுகாப்பான ஐ டி துறையின் ஒரு பங்கயை இது எடுத்து உள்ளது. இந்தியாவில் நிறைய இடங்களில் மின் தடை இருபதால், இந்த கணினி பயன்படும். இந்த வசதி அனைத்து துறையிலும் மின் சிக்கனத்தை உருவாக்கி தரும்.





# பேஸ்புக்கில் "Comment Editing"

பேஸ்புக் ஆரம்பித்து வெகு நாட்களுக்கு பிறகு கொமென்ட் எடிட்டிங் வசதியை அறிமுகப்படுதியுள்ளது. இதற்கு முன் பேஸ்புக்கில் ஏதேனும் எழுத்துப் பிழையுடன் ஏதேனும் கொமென்ட் போட்டால் அதை மறுபடியும் மாற்ற முடியாது . அந்த கொமெண்டை அழித்து புதியதாக தான் போட வேண்டும். இந்த பிரச்சினை இனி இல்லை.பேஸ்புக் வெளியிட்டுள்ள இந்த புதிய வசதியின் மூலம் நீங்கள் எழுத்துப் பிழையுடன் கொமென்ட் போட்டாலும் இனி அந்த கொமென்டை மறுபடியும் எடிட் செய்து எழுத்துப் பிழையை சரி செய்து கொள்ளலாம்.




கொமென்ட் போட்டு முப்பது வினாடிகள் கழித்து எப்பொழுது வேண்டுமென்றாலும் உங்கள் கொமெண்டை எடிட் செய்து கொள்ள்லாம். நீங்கள் ஒரு கொமென்டை எடிட் செய்து விட்டால் அதனருகில் Edited என்ற ஒரு லிங்க் வரும் அதில் நீங்கள் தவறாக போட்ட கொமென்ட் முதல் எத்தனை முறை எடிட் செய்திருந்தாலும் அனைத்தையும் அந்த லிங்கில் பார்த்து கொள்ளலாம். இதை நீங்கள் மட்டுமின்றி மற்றவர்களும் பார்க்க முடியும்.




இந்த புதிய வசதி பதிவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் ஏனெனெனில் பெரும்பாலானவர்கள் தற்பொழுது பேஸ்புக் கொமென்ட் பெட்டியை அவர்களின் வலைப்பூக்களில் பயன்படுத்த ஆரம்பித்து விட்டனர். அதில் கருத்து இடுபவர்கள் தவறாக இட்டாலும் மறுபடியும் மாற்றிக் கொள்ள ஏதுவாக இருக்கும்.

# MS Excel இல் உங்கள் வயதைக் கண்டறிய...


எம்.எஸ்.எக்ஸெலில் இரண்டு திகதிகளுக்கிடையே உள்ள நாட்களின் வித்தியாசத்தை ஒன்றிலிருந்து மற்றொன்றைக் கழிப்பதன் மூலம் இலகுவாகக் கணித்து விடலாம். எனினும் இரண்டு திகதிகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தை வருடங்களில் மாதங்களில் நாட்களில் எப்படி கண்டறிவது? அதற்கும் ஒரு இலகுவான வழி முறை எக்ஸெலில் உள்ளது..

இதற்கு எக்ஸெலில் உள்ள Datedif எனும் பங்க்ஸ்ன் (function) பயன் படுத்தப்படுகிறது. இந்த Datedif எனும் பங்ஸனை = Datedif (திகதி1, திகதி2, விடை காண வேண்டிய வடிவம்) {=DATEDIF(Date1, Date2, OutputRequirement)} எனும் ஒழுங்கிலேயே வழங்க வேண்டும். OutputRequirement எனுமிடத்தில் மேற்கோள் குறிகளுக்கிடையே "Y" என வழங்கும் போது வருட வித்தியாசத்தையும் "M" என வழங்கும்போது மாதங்களின் வித்தியாசத்தையும் "D" என்பது நாட்களின் வித்தியாசத்தையும் தரும்.

இங்கு திகதி1 ஐ விட திகதி2 பெரிதாக இருக்க வேண்டும் என்பதையும் கவனத்திற் கொள்ளுங்கள்..

உதாரணமாக 8/8/1990 எனும் திகதிக்கும் 13/05/2008 எனும் திகதிக்கும் இடையில் எத்தனை வருடங்கள் உள்ளன? எத்தனை நாட்கள் உள்ளன? எத்தனை மாதங்கள் உள்ளன எனக் கணக்கிட முதலில் எக்ஸெல் வேர்க் சீட்டில் B3 எனும் செல்லில் 08/08/1990 எனும திகதியையும் B4 எனும் செல்லில் 13/05/2008 எனும் திகதியையும் உள்ளீடு செய்யுங்கள்.. திகதியை உள்ளீடு செய்யும்போது உங்கள் கணினியில் திகதி உள்ளீடு செய்யும் வடிவத்தையும் (Date format) கவனத்திற் கொள்ள மறந்து விடாதீர்கள் அனேகமாக விண்டோஸில் MM/DD/YYYY (மாதம் /திகதி/வருடம்) எனும் திகதி வடிவமே இயல்பு நிலையில் இருக்கும்

அடுத்து இரண்டு திகதிகளுக்கிடையிலுள்ள வருட வித்தியாசத்தைக் கண்டறிய B6 எனும் செல்லில் =DATEDIF(B3,B4,"Y") எனும் சமன்பாட்டை டைப் செய்யுங்கள். விடையாக 17 (வருடங்கள்) வரக் காணலாம். அதேபோல் இரண்டு திகதிகளுக்கிடையேயுள்ள மாதங்களின் எண்ணிக்கையைக் காண B7 எனும் செல்லில் =DATEDIF(B3,B4,"M") எனவும் நாட்களின் வித்தியாசத்தைக் காண B8 எனும் செல்லில் =DATEDIF(B3,B4,"D") எனவும் வழங்குங்கள்.



இன்னும் சற்று மாறுதலாக இன்றைய திகதிக்கு உங்கள் வயது என்ன என்பதைக் கண்டறிய வேண்டுமானால் மேற் சொன்ன சமன்பாட்டில் சிறிய மாற்றத்தைச் செய்ய வேண்டும். .

உதாரணமாக B2 எனும் செல்லில் உங்கள் பிறந்த திகதியையும் B3 எனும் செல்லில் இன்றைய திகதியையும் டைப் செய்யுங்கள். B5 எனும் செல்லில் =DATEDIF(B2,B3,"Y") எனும் சமன்பாட்டை வழங்கும் போது வருட வித்தியாசம் கிடைக்கும். அவ்வாறே B6 எனும் செல்லில் =DATEDIF(B2,B3,"YM") என வழங்குங்கள். வருடங்கள் நீங்களாக மாத வித்தியாசம் கிடைக்கும். B7 எனும் செல்லில் =DATEDIF(B2,B3,"MD") எனும் சமன்பாட்டை வழங்க வருடங்களையும் மாதங்களையும் தவிர்த்து நாட்களின் வித்தியாசம் மாத்திரம் கிடைக்கும்.

இதே சமன்பாட்டை இன்னும் சற்று மாற்றி இன்று உன் வயது 'வருடங்கள் -, மாதங்கள் -., நாட்கள் எனவும் காட்டலாம். அதற்கு எக்ஸ்லில் உள்ள வுநுஓவு எனும் பங்ஸனையும் பிரயோகிக்க TEXT வேண்டும். இந்த பங்ஸன் என் பெறுமானத்தை டெக்ஸ்டாக மாற்றி விடுகிறது.

அதற்கு வேறொரு செல்லில் ="இன்று உன் வயது - & TEXT(B5, "0?) & " வருடங்கள் ,- & TEXT(B6, "0?) & " மாதம் ,- & TEXT(B7, "0?) & - நாட்கள் " என வழங்குங்கள். இன்று உன் வயது 19 வருடங்கள் ,1 மாதம் ,19 நாட்கள் எனும் விடையை எக்ஸெல் காண்பிக்கும். .

# Trial Verion software யை நிரந்தரமாக்க...

இந்த பதிவு ஒரு trial period சொப்ட்வேர் எப்படி hack செய்து முழு பயன்பாட்டிற்கு மாற்றுவது பற்றியது. பொதுவாகவே நாம் பல முறை இந்த பிரச்சினையை எதிர் கொண்டிருப்போம். சில சொப்ட்வேர்களை டவுன்லோட் செய்து பின் குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகு அந்த சொப்ட்வேரை பணம்கொடுத்து வாங்கச் சொல்கிற தொந்தரவு இருக்கும். இல்லாவிடில் அந்த சொப்ட்வேரை நாம் பயன்படுத்த முடியாது . இங்கு சொல்லப்போவது, பணம் கொடுத்து வாங்காமல் trial period சொப்ட்வேரை பல காலம் பயன்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றியது . இது பலருக்கும் உபயோகப்படும்.

முதலில், இது போன்ற software கள் இயங்கும் விதத்தைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

பொதுவாகவே அனைத்து trail version software களும் முதல் முறை install செய்யும் போது சில முக்கிய தகவல்கள் (Installed Date and Time, installed path) விண்டோஸ் ரிஜிஸ்ட்ரியில் பதிவு செய்யப்படுகிறது. இது ஒவ்வொரு முறையும் நாம் run செய்யும் போதும் நமது Computer இன் date , time உடன் விண்டோஸ் ரிஜிஸ்ட்ரியில் பதிவுசெய்யப்பட date , time சரி பார்க்கப்படுகிறது . இப்படித் தான் குறிப்பிட்ட நாட்கள் முடிவடைந்ததும் நாம் பணம் செலுத்தி அந்த சொப்ட்வேர் ஐ வாங்கினால் ஒழிய அதை run செய்ய முடியாது . நம் system date setting மாற்றினால் கூட இந்த பிரச்சினை இருப்பது இதனால் தான்.

**இதற்கான தீர்வு :-**

RunAsDate என்ற மென்பொருள் பயன்பாடு நாம் குறிப்பிடுகிற date,time setting இல் programik run செய்யும். இது நமது. system date, time settingl எவ்விதத்திலும் பாதிக்காது. நாம் குறிப்பிடுகிற softwareஇன் date,time settingl மட்டுமே மாற்றி அமைக்கும். RunAsDate கொண்டு Trial Software ஐ hack செய்யும் போது கீழ் கண்ட குறிப்புகளை கவனத்தில் கொண்டு செயல்படும் போது வெற்றிகரமாக நம்மால் எவ்வளவு காலம் வேண்டுமா னாலும் trail version softwarel பயன்படுத்த முடியும் .

1. எப்போதுமே trial software instal செய்யும் போது Date and Time குறித்துவைத்துக் கொள்ளுங்கள் .

2. trial period முடியும் நேரத்தில் RunAsDatel run செய்து கொள்ளுங்கள்.

3. trial period முடிந்த பிறகு RunAsDatel run செய்வதை தவிர்க்கவும் .

4. ஒரு நாள் முன்னதாக RunAsDatel run செய்து பயன்படுத்தினால் பலகாலம் ட்ரயல் வெர்சன் software ஐ உபயோகிக்க நம்மால் முடியும். உதரணத்திற்கு trial period may 25 2009 முடியுது என்றால், நீங்கள் may 24th அன்றே RunAsDatel run செய்து கொள்ளுங்கள்.

# வண்ணார்பண்ணை வீரமகா காளி அம்மனுக்கு பத்து இலட்ச ரூபாவில் சப்பறம்

(சிகரம்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரம காகாளி அம்மன்ஆலயத்திற்கு 10 இலட்சம் ரூபா செலவில் புதிய சப்பறம் உருவாக்கப்பட் டுள்ளது.

யாழ்ப்பாணம்-வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரம காகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெரு விழா கடந்த (06.06.2012) சனிக் கிழமை முதல் ஆரம்பமாகி நடை பெற்றுவருகிறது

இந்த திருவிழாவின் கையி லாச வாகனத்திரு விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது மாலை 6.00 மணிக்கு யாழ்ப் பாணம் சாந்தன் குழுவினரால் 59 அடி உயரமும் 25 அடி அக லமும் உள்ள 10.000 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக கப்பட்ட சித்திர சப்பறம் வெள் ளோட்டம் விடப்பட்டது



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப பாணம் வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமகாகாளி அம்மன் ஆலயத்திருவிழாவின் சப்பறத்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமையும், தேர்த்திருவிழா நாளை திங் கட்கிழமையும் நடை பெற்று, வைரவர் பூசை யுடன் திருவிழா நிறைவு பெற உள்ளது.

# கோப்பாய் - இராசபாத வீதியின் அகலிப்பு பணிகள் ஆரம்பம்

(பகீ)

கோப்பாய் இராசபாத வீதியின் அகலிப்பு பணி கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கின் வசந்தம் துரித அபிவிருத்தித் திட் டத்தின் கீழ் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்திகளின் ஒரு அங்கமாகவே இந்த அகலிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன.

இந்த வீதி அகலிப்பு பணிகளின் முதல்கட்டமாக வீதியோரங்களில் காணப்படும் வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த வடிகால்அமைக்கும் பணியில்10ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர், இந்த வடிகால்அமைக்கும் பணிகள் நிறை வடைந்தவுடன் குறித்த வீதி காப்பெற் இடப் படவுள்ளது.வீதிஅகலிக்கும் பணியினை KDAW நிறுவனமே மேற்கொண்டு வருகின்றது.

# சட்டம் எல்லோருக்கும் பொதுவானது

(சிகரம்)

ஒரு நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் அந்த நாட்டின் அரச கொள்கைக்கும், அடிப்படைச் சட்டங் களுக்கும் கட்டுப்பட்டே வாழ்ந்தாக வேண்டும். சட்டம் என்பது ஒரு இனத்திற்கோ அல்லது மதத் திற்கோ அல்லது சமூகத்திற்கோ மட்டும் பொருந் தும் வகையில் உருவாக்கப்பட்டதல்ல. அது ஒரு நாட்டின் குடிமக்கள் எல்லோருக்கும் பொது வானது.

இது ஏதோ மேலேயிருந்து அரசாங்கத்தின் அல்லது சட்டத்தை அமுல்படுத்தும் முகவர்களான, காவல்துறை, நீதிமன்றம் போன்றவற்றின் தேவை களுக்காக உருவாக்கப்பட்டதல்ல.

வீதிப் போக்குவரத்துச் சட்டம் என்பது வெள் ளைத் தொப்பி போட்ட காக்கிச் சட்டைக்காரா களைக் கண்டால் மட்டும் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றில்ல. அவர்களுக்கு முன்னால் மட்டும் ஹெல்மட் போட்டுக்கொண்டு மோட்டார் சைக்கிள் ஓடுவதும், கடந்ததும் அதைக் கழற்றிவிடுவதும் என்பதும், எமக்குத்தான் ஆபத்தே தவிர,காவல் துறைக்காரருக்கல்ல.

வீதி ஒழுங்கு முறைகளும், அதனை நடை முறைப்படுத்தும் போக்குவரத்துக் காவல்துறை யினரும், வீதிகளூடாக எமது பயணத்தை ஒழுங்கு படுத்தி, மற்றவர்களால் எமக்கும்,எம்மால் மற்றவர் களுக்கும் தொந்தரவு ஏற்படாமல், விபத்துக்களி லிருந்து அனைவரையும் பாதுகாக்கும் பணி யையே செய்கின்றனர்.

இவ்வாறு எமது வாழ்வை ஒழுங்குபடுத்தும், எமக்குப் பாதுகாப்பளிக்கும் இந்தச் சட்டம் தொடர்பாக, நாம் அறிந்திருப்பது மிக அவசியமா கும். குறிப்பாக, எமது உரிமைகள் எவை, அவை மீறப்படும் போது நாம் என்ன செய்யவேண்டும், எமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கெதிராக எவ்வாறான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள லாம் என்பன பற்றியெல்லாம் அறிந்து கொள் வதற்கு சட்டம் பற்றிய அடிப்படை அறிவு ஒவ் வொரு குடிமகனுக்கும் அவசியமானது.

அரசியலமைப்புச் சட்டம்:

ஒரு நாட்டின் எல்லாச் சட்டங்களுக்கும் அடிப் படை அரசியலமைப்புச் சட்டமே.இதிலிருந்தே ஏனைய சட்டங்களும், துணைநிலைச் சட்டங்களும் தோன்றுகின்றன. கீழ்வரும் முக்கிய் தலைப் புக்களின் கீழ் அரசியலமைப்பில் இந்தச் சட்டங் கள் வரையறுக்கப்பட்டிருக்கும்.

1.மக்கள் இறைமை

2.அரச கொள்கைத் தத்துவம்

3.அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும்

4.பாராளுமன்றம்

5.ஜனாதிபதி ஆட்சிமுறையும் அமைச்சரவையும்

6.விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை

7.மக்கள் தீர்ப்பு

8.ஓம்புட்ஸ்மன்(குறை நிவர்த்தி அதிகாரசபை)

9.மொழியும் மதமும்

10.பொதுச்சேவை ஆணைக்குழு

11.நீதிச்சேவை ஆணைக்குழு

12.மேன்முறையீட்டு நீதிமன்றம்,உயர்நீதிமன்றம்

இந்தத் தலைப்புக்களின் கீழ், நடைமுறைப் படுத்த வேண்டிய சட்ட ஏற்பாடுகள் விளக்க மாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அடிப்ப்டை உரிமைகள் தொடர்பான சில சட்ட விளக்கங்கள்

இது எமது அரசியலமைப்பின் 3 ஆம் அத்தியாயத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அடிப்படை உரிமை ஒன்று மீறப்படும் போது அல்லது மீறப்பட இருக்கிறது எனத்தெரியும் போது மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தின் ஊடாக அரசியலமைப் பின் 126 ஆவது உறுப்புரைக்கு அமைவாக நபரொருவர் முறையீடு செய்ய முடியும் (நிறை வேற்று நிர்வாகத் துறையால் மீறப்படுகின்ற உரிமை மீறல்களுக்கு எதிராக)

அன்றாட வாழ்வில் ஒவ்வொரு கட்டத்தி லும் சட்டத்தின் பாதுகாப்பும், அனுசரணையும் எமக்கு இருந்துகொண்டுதான் இருக்கிறது. நாம்தான் அதனைச் சரிவரப் பயன்படுத்தாமல் இருந்துவருகிறோம். கடந்த மூன்று தசாப்தங் களுக்கும் மேலாக நாட்டில் காணப்பட்ட சூழல், சட்டம் பற்றிய எமது தெளிவின்மைக் குக் காரணமாகிவிட்டது. அந்த நெருக்கடியான காலகட்டத்தில் கூட, சட்டம் தொடர்பாக தெளிவு எமக்கிருந்திருக்குமேயானால், பல சிக்கல் களிலிருந்து நாம் எம்மைப் பாதுகாத்துக் கொண்டிருக்க முடியும்.

# பதிவிறக்கப் பெட்டகம்

அமைப்பு / கட்சி என்பது குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அணிதிர ளும் மனிதர்களின் தொகுப்பு தான். அந்த நோக்கங்களை அடை வதற்கான அன்றாட / தொலைநோக்கு செயற்திட்டங்கள் / நடைமுறைகள் குறித்து எனக்கொரு கருத்து இருக்கிறதென் றால் அதை அமைப்பிற்குள் பரவலாக்குவதற்கும் முடிந்தால் அமைப்பின் கருத்தாகவே மாற்றிவிடுவதற்கும் தொடர்ந்து சோர் வின்றி முயற்சிப்பதை மட்டுமே எனது வேலையாக கருதுகி றேன். அதேவேளையில் என்னைப் போலவே மற்றவர்களும் தத்தமது கருத்துக்களோடு வேலைசெய்து கொண்டிருக்கிறார் கள் என்பதை கவனம் கொள்ளத் தவறிவிடுகிறேன். எனவே அவர்கள் அவர்களது கருத்தை முன்வைக்கிறார்கள் என்று பார்ப்பதற்கு பதிலாக என்னோடு முரண்படுகிறார்கள் என்று மட்டுமே குறுக்கிப் புரிந்து கொண்டிருக்கிறேன். நான் விரும் புகிற விசயங்களை அமைப்பு செய்யும்போதோ அல்லது நான் முன்வைக்கும் கருத்தை அமைப்பும் வெளிப்படுத்தும் போதோ அமைப்பு சரியான வழியில் செல்வதாக கருதிக்கொள்வ தும், எனக்கு உடன்பாடில்லாத கருத்துகளை வெளிப்படுத்தும் போதோ நடவடிக்கைகளில் ஈடுபடும்போதோ இயக்கம் தடம் பிறழ்ந்து விட்டதாக குற்றம் சாட்டுவதுமாக இருந்திருக்கிறேன். அந்தப் பிரச்சினையில் அவர்கள் மோசம், இந்தப் பிரச்சினை யில் இவர்கள் மோசம் – ஆகமொத்தத்தில் என்னைத் தவிர எல்லோரும் மோசம் என்று எப்போதும் பிறரை குற்றம் சாட்டு கிறவனாக பலநேரங்களில் வெளிப்பட்டிருக்கிறேன். என்கூட வருவதற்கு என் நிழலுக்கும் கூட தகுதியில்லை என்கிற அள வுக்கு தனிமைப்படுத்திக் கொண்டிருக்கிறேன். அம்மாதி ரியான தருணங்களில் என்மீதான கழிவிரக்கம் மிகுந்து ஒடுங்கிப் போய்விடுவேனேயன்றி அமைப்பிலிருந்து வெளியேறி விட வேண்டும் என்று ஒருபோதும் நினைத்ததில்லை.

கட்சிகளும் அமைப்புகளும் மோசம் என்று சொல்லிவிட்டு வெளியேறியவர்களெல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறார் கள் என்று பார்க்கிறேன். அவர்கள் தத்தமது தலைமையில் புதிதுபுதிதாக அமைப்புகளை உருவாக்கிக் கொண்டேயிருக் கிறார்கள். அதாவது தலைமைப்பொறுப்பில் தம்மைத் தாமே இருத்திக்கொள்கிற அமைப்புகளை உருவாக்கிக் கொண்டிருக் கிறார்கள். அல்லது ஏதாவது தொண்டு (?) நிறுவனங்களை நடத்திப் பிழைக்கிறார்கள். தமது அரசியலோடு இணங்கிப்போகி றவர் என்று இன்னும் ஒரே ஒருவரை அங்கீகரிப்பதற்குகூட தயாரில்லாத அளவுக்கு தனிமைப்படுத்திக் கொள்கிறவர்கள், நூற்றுக்கு நூறு சதம் தான் மட்டுமே சரியாக நடப்பதாகவும் உலகமே தப்பாக சுழன்றுகொண்டிருப்பதாகவும் கருதிக் கொண் டிருப்பவர்கள் என்று இவர்கள் பலவிதங்களில் தென்படுகிறார் கள். தனது ஒருநாள் சம்பளத்தையோ, ஒருவேளை சாராயத்தை யோகூட இழக்கத் துணியாத இவர்கள், குறிப்பிட்ட நோக்கங் களுக்காக அரசியல் இயக்கங்களில் அர்ப்பணிப்போடு செயல்படு கிறவர்களைப் பற்றி எப்போதும் அவதூறுகளை பரப்பிக் கொண்டே யிருப்பார்கள். அரசியல் உணர்வுள்ளவர்கள் ஏதேனுமொரு அமைப்பிற்குள் அணிதிரண்டுவிடாமல் ஒவ்வொருவரும் உதிரிகளாக கழன்று திரிவதே சுதந்திரமானது சரியானது என்று வாதிடுகிற இவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். அமைப்புகளைவிட தீவிரமாக அரசியல் பேசி அமைப்புகளுக் குள் அணிதிரளக்கூடியவர்களை தனது ரசிகப் பட்டாளமாக மாற்றிக்கொள்வதில் ஆர்வமுள்ளவர்கள். தாங்கள் சொல்வ தைக் கேட்க உலகமே காத்திருக்க வேண்டும் என்று நினைக் கிற இவர்கள், வேறு யார் சொல்வதையும் கேட்பதற்கு காதில்லாத வர்களாக மாறி விடுகிறார்கள். இவர்களில் ஒருவனாக மாறு வதில் எனக்கு உடன்பாடில்லை.

– ஆதவன் தீட்சண்யா

அரசியலுக்கு வருவதென்றால் கட்சி அமைத்துக்கொள் வது என்று பொருள். கட்சிப் பின்னணி இல்லாத அரசியல் வீண் வேலை. சுயேச்சையாக இருப்பேன் என்று சில அரசி யல்வாதிகள் சொல்லலாம். அவர்கள் தனிமையில் தங்கள் தங்கள் நிலத்தை உழுதுகொண்டு இருக்கவேண்டியதுதான். அத்தகைய அரசியல்வாதிகளை நான் எப்போதுமே நம்புவது இல்லை. யாரோடும் சேர முடியாத ஓர் அரசியல்வாதி எந்தப் பயன் நடைமுறை நோக்கத்துக்கும் பயன்பட மாட்டான். அவனால் எதையும் சாதிக்க முடியாது. அவனுடைய நிலத்தில் ஒரு புல் கூட முளைக்காது. பெரும்பாலான அரசியல்வாதிகள் சுயேச் சையாக இருக்க நினைப்பது அவர்களுடைய அறிவு நேர்மையா லல்ல, தங்களுக்கு அதிக விலை நிர்ணயித்துக் கொண்டு தங்களைத் தாங்களே விற்றுக் கொள்வதற்காகத்தான். இதற் காகத்தான் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அடங்காமல் சுதந்திரமாக இருக்க அவர்கள் விரும்புகிறார்கள். அரசியல் சுயேச்சை பற்றிய என் மதிப்பீடு இதுதான். அனுபவமும் இதுதான். கட்சி யில்லாமல் அர்த்தமுள்ள அரசியல் நடத்த முடியாது என்பதே என் கருத்து.

– அம்பேத்கர்

# பங்குச் சந்தை தொடர்பில் ஐ.தே.க. விசாரணை



(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டு நட்டமடைந்துள்ள ஊழியர் சேமலாப நிதி தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா, இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பங்குசந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதிகளில் தற்போது 20 பில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அண்மையில் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தது.

இந்தநிலையில் இந்த நட்டம் எந்தக்காலம் வரையில் தொடரும், ஏற்பட்டுள்ள நட்டம் ஊழியர்களை எவ்வாறு பாதிக்கும் என்று அரசாங்கம் குறிப்பிடவில்லை

இந்தநிலையில், குறித்த நட்டம் தொடர்பில், சுயாதீனமாக விசாரணைகள் நடத்தப்படவுள்ளன

இதனையடுத்து அது தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஹர்ச டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# மணியங்குளம் குறுக்கு வீதிகள் துரித கதியில் புனரமைப்பு



அரியாலை மணியம்குளம் பகுதியில் உள்ள குறுக்கு இணைப்பு வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. 120 நாட்களில் இந்தப் புனரமைப்புப் பணி நிறைவுபெறவுள்ளது.

இந்த வேலைத்திட்டம் நேற்று நல்லூர் பிரதேச சபை ஈ.பி.டி.பியின் அமைப்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான அ.இரவீந்திரதாஸன் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர் வ.சிறிகணேசராசா, தொழில் நுட்ப உத்தியோகத்தர் திருமதி கிருஸ்ணவேணி மற்றும் கிராம அபிவிருத்தி சங்க, மாதர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். வீதி புனரமைப்புக்கு உதவியாக பொது மக்கள் தமது வேலிகளை அகற்றி உதவி புரிந்தனர்.

இதன்போது பொதுமக்களின் தேவைகள் குறித்தும் இரவீந்திரதாஸன் கலந்துரையாடினார்.

## மணவாளக்கோல உற்சவம்

தும்பளை மேற்கு அருள்மிகு ஸ்ரீ வரத விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மணவாளக் கோல உற்சவம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இவ் உற்சவம் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும். தினமும் காலை அபிஷேகமும், மாலை எம்பெருமான் வீதியுலா வலம் வருதலும் நடைபெறும். இப்பத்து தினங்களும் அடியவர்களுக்கு அன்னதான ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் 07 ஆம் திகதி சப்பறத்திருவிழாவுடன் உற்சவம் நிறைவுபெறும். (62)

# வீதி விபத்தில் மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பரியோவான் கல்லூரியின் முன்பாக நேற்று முன்தினம் நண்பகல் நடைபெற்ற விபத்தில் அந்தக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவன் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்புத் துறையைச் சேர்ந்த மோகன் தனேஜன் (வயது - 06) என்ற தரம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவனே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

குறித்த கல்லூரியின் முன்பாக மோட்டார் சைக்கிளில் ஐஸ்பழ விற்பனையில் ஈடுபட்டிருந்த மோட்டார் சைக்கிளே குறித்த மாணவனை மோதியதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறு பாடசாலையின் முன்பாக வீதியில் ஐஸ்பழம் போன்ற பொருட்களை வியாபாரிகள் விற்பனை செய்வதன் காரணமாக மாணவர்கள் வீதி ஒழுங்கைப் பின்பற்றாது செல்வதால் இவ்வாறான விபத்துக்கள் ஏற்படுவதாக பெற்றோர்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது. (பா)

## கட்டுவன துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடையவர் கைது

கட்டுவன துப்பாக்கிச் சூட்டுச சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இரவு கட்டுவன் பிரதேசத்தில் குற்றத் தடுப்புப் பிரிவினரினால் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்ட அதேவேளை ரீ - 56 வகை துப்பாக்கிகள், ரவைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சஜீவ மெதவத்த தெரிவித்தார்.

முன்னதாக கட்டுவன துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை கட்டுவன பகுதியில் இடம்பெற்ற ஜே.வி.பி.இன் கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாகிச் சூட்டில் பெண் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்திருந்தனர்.

## புதையல் தோண்டிய பிரித்தானியர்

இரத்தோட்டை கந்தேநுவர பகுதியில் புதையல் தோண்டியதாகக் கூறப்படும் பிரித்தானிய நாட்டவர் ஒருவர் உட்பட எட்டு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் இரண்டு பெண்களும் அடங்குவதாகப் பொலிஸ் பதில் ஊடகப் பேச்சாளர் சஜீவ மெதவத்த தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களுடன் புதையல் தோண்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதானவர்களை மாத்தளை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பணி நயப்பு விழா

(பருத்தித்துறை)

அல்வாய் கிராம அலுவலர் வே.தியாகராசாவின் பணி நயப்பு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் பாரதி தாசன் நூலக மண்டபத்தில் தெல்லிப்பழை மெ.மி.த.க. பாடசாலை அதிபர் ந.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நிர்வாக கிராம அலுவலர் வீ.க.சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (109)

## அவுஸ்ரேலிய செல்ல முற்பட்ட 9 பேர் நீர்கொழும்பில் கைது

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட மேலும் 9 பேர் நீர்கொழும்புக் கடற்பிராந்தியத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த அகதி அந்தஸ்து கோருவோரை கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரே கைது செய்ததாக அதன் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

அவர்கள் நேற்று அதிகாலையே அவுஸ்திரேலியா நோக்கிச் செல்ல முற்பட்டுள்ளனர். குறித்த ஒன்பது பேரும் பயணித்த படகில பெருந்தொகையான உணவும் இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

அந்தப் படகு கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், கைது செய்யப்பட்டவர்கள் குற்றவிசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய 53 ஆவது ஆண்டு கட்டுரைப் போட்டி

## முதலாம் பரிசு 20 ஆயிரம் ரூபா

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவு விழாவினையும் புதிய கட்டடத்திறப்பு விழாவையும் முன்னிட்டு யாழ்.மாவட்ட மட்டக் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

"கலைகளின் வளர்ச்சி நிலையும், மனித விருத்தியும்" என்ற தலைப்பில் ஆக்கங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

முதலாம் பரிசு 20,000 ரூபாவும், இரண்டாம் பரிசு 15,000 ரூபாவும், மூன்றாம் பரிசு 10,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எவரும் கலந்து கொள்ள முடியும். வயது எல்லை இல்லை. 1000 - 1200 வரையான சொற்களை உடையதாக இருத்தல் வேண்டும். போட்டியாளர்கள் தங்களின் விபரத்தை கட்டுரையுடன் தனியாக இணைத்து அனுப்ப வேண்டும். ஆக்கங்கள் பதிவுத் தபாலில் எதிர் வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். ஆக்கங்கள் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி திரு.செ.மதனரூபன், தலைவர், வளர்மதி கல்விக் கழகம், கைதடி மத்தி.

இதேவேளை கைதடி, மற்றும் நாவற்குழிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான தனியான கட்டுரைப் போட்டியும் இடம்பெறவுள்ளது. தரம் 6 - 8 வரை பிரிவு 01, தரம் 9 - 11 வரை பிரிவு 02 போட்டி என்ற ரீதியில் போட்டிகள் இடம்பெறும்.

போட்டிகள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதியன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில்" நடைபெறும். போட்டியாளர்கள் தங்கள் வீதிவிடத்தையும், பாடசாலையையும் அதிபரின் சிபாரிசுடன் அனுப்ப வேண்டும். முதலாம் பரிசு 10,000 ரூபா, இரண்டாம் பரிசு 7,000 ரூபா, மூன்றாம் பரிசு 5,000 ரூபா. மேலதிக விபரங்களுக்கு சி.மயுரன் 0779672686 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## கருத்தரங்கும், செயலமர்வும்

வலிகாமம் கல்வி வலயத்தில் புதிதாக நியமனம் பெற்ற சங்கீத பாட ஆசிரியர்களிற்கான கருத்தரங்கும், செயலமர்வும் எதிர் வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் 5 மணிவரை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, உடுவில் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களைப் பங்கேற்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (06)

✡ ✡ ✡

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் நாடகமும், அரங்கியலும், நடனம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், செயலமர்வும் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கான மேற்படி செயலமர்வு இந்த மாதம் 30 ஆம் திகதி சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலயத்திலுள்ள 4 கோட்டப்பாடசாலைகளிலும் இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

4 கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்குமான நடன பாடத்திற்கான இச் செயலமர்வு இன்று சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (06)

**கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து சரியான விடை எழுதுக.**

கொழும்பு பாரதி கல்லூரியிலிருந்து பேருந்து வண்டி கண்டியை நோக்கிப் புறப்பட்டது. எம்மில் பலர் இதற்கு முன்பு கண்டிக்குச் சென்றதே இல்லை. மலைகள், மகாவலிகங்கை, பேராதனைப் பூங்கா, பல்கலைக்கழகம், தலதாமாளிகை, தேயிலைத் தோட்டங்கள் பலவற்றைப் பார்வையிடும் எண்ணம் எம்மனதில் அலைமோதின.

40. எங்கிருந்து பேருந்து வண்டி புறப்பட்டது?

..................................................................................................................

41. பேருந்து வண்டி எவ்விடத்தை நோக்கிச் சென்றது?

..................................................................................................................

..................................................................................................................

**பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

42. Milk .......................................... 43. Teeth ..........................................

44. Televison .......................................... 45. November ..........................................

**பின்வரும் சிங்களச் சொல்லை தமிழில் தருக.**

46. සිස්යා .......................................... 47. මව් ..........................................

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

48. கடிகாரமொன்றின் நிமிடமுள் 2 இலும், மணிமுள் 12 இலும் நின்றால் என்ன நேரம்?
 1. 2 மணி 2. 12 மணி 3. 12 மணி 10 நிமிடம்

49. நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்தக்கூடியது?
 1. நிறுத்தற் கடிகாரம் 2. அளவுநாடா 3. விற்றராசு

50. தார் வீதியில் செல்லக்கூடியது?
 1. ஓடம் 2. புகைவண்டி 3. சைக்கிள் வண்டி


51. தாவரங்களில் பூச்சிகளைக் கவரத்தக்க பகுதி?
 1. நிறஇலை 2. பூ 3. பழம்

52. 12 வயதுடைய ஒருவரை அவதானிக்கத்தக்க இடம் எது?
 1. பாடசாலை 2. அலுவலகம் 3. தியேட்டர்


53. பார்வை தெரியாத ஒருவரை அடையாளம் காண்பதற்கு உதவுவது?
 1. வெள்ளைப் பிரம்பு 2. வெள்ளை உடை 3. கறுப்புக் கண்ணாடி

54. வைத்தியருடன் தொடர்புடையவர்?
 1. தாதி 2. ஆசிரியர் 3. நோயாளி

**பின்வரும் உருக்களை அவதானித்து, இந்த உருக்களின் பயன்பாடு பற்றி புள்ளிக் கோட்டில் எழுதுக.**



உரு - 1



உரு - 2



உரு - 3

55. உரு - 1 : ..................................................................................................

56. உரு - 2 : ..................................................................................................

57 உரு - 3 : ..................................................................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I

2 மணி

# கல்வி முரசு

வெளியீடு 86



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

பொறுமையின் சிகரமாம் பூமாதேவியை கௌவி மூடிக்கொண்டிருந்த காரிருளானது மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது. வானின் உச்சியிலே பளபளவென்று வைரங்களை வாரி இறைத்தது போல பிரகாசித்துக் கொண்டிருந்த சின்னஞ்சிறு விண்மீன்களின் வண்ண ஒளி படிப்படியாகக் குறையத் தொடங்குகிறது. கிழக்கு வானம் செக்கச் சிவந்து பிரகாசித்த வண்ணம் இருக்கிறது. ஆதவன் தனது பொன்மயமான அழகிய ஒளிக்கதிர்களைப் பூமாதேவியின் மீது மெல்ல மெல்லப் படரவிடுகின்றான். தொடர்ந்து கீழ் வானில் பஞ்சு போன்ற முகில் கூட்டங்களுக்கு மத்தியிலே தங்கத் தகட்டைப் போன்று கதிரவன் மேலே எழத் தொடங்குகின்றான். தாமரை மலர்கள் தம் தலைவனின் வருகை கண்டு தலைநிமிர்ந்து முகமலர்ந்து, மொட்டவிழ்ந்து உவகையுடன் வரவேற்கின்றன. அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது. பறவைகளின் குதூகலமான இனிய நாதங்கள் வானில் பரவுகின்றன. ஆலயங்களில் மணியோசை மக்களை அகங்குளிரச் செய்கின்றன. வெள்ளைப் புறாக்களைப் போன்று பாடசாலைச் சிறார்கள். ஆகா!............என்ன இனிய காட்சி.

01. "வானம்" என்பதற்கு ஒத்த சொல் தருக.

..................................................................................................

02. இருக்கிறது என்பதை இறந்த காலத்தில் எழுதுக.

..................................................................................................

03. பந்தியில் காணப்படும் அடுக்கு மொழிச் சொல் ஒன்றினை எழுதுக.

..................................................................................................

04. மணியோசை என்பதைப் பிரித்து எழுதுக.

..................................................................................................

05. "அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது" இவ் வாக்கியத்தின் எழுவாயை எழுதுக.

..................................................................................................

06. உவகை என்பதற்கு எதிர்ச்சொல் தருக.

..................................................................................................

07. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துடைய சொல் தருக.
 1) விண்மீன் ..................................................................................
 2) ஆதவன் ..................................................................................

08. 1) பந்தியில் காணப்படும் இணைமொழிச் சொல் ஒன்றினை எழுதுக.

..................................................................................................

 2) அடுக்கிடுக்குத் தொடர்ச் சொல் ஒன்றை எழுதுக.

..................................................................................................

09. பின்வரும் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
 1) மலர் .......................................... 2) பாடசாலை ..........................................

10. மேலே உள்ள பந்தியில் இரட்டை மொழியினை எழுதுக.


..................................................................................................

**கீழ்வரும் படத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினைத் தெரிவு செய்க.**



11. டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்த வீரர் யார்?
    1. சனத்ஜெயசூரிய 2. முத்தையா முரளிதரன் 3. சௌரவ் கங்குலி
12. 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை சுவீகரித்த அணி எது?
    1. இந்தியா 2. இலங்கை 3. பாகிஸ்தான்
13. எந்த நாட்டு வீரர் தக்கவைத்திருந்த சாதனையை முரளிதரன் கைப்பற்றினார்?
    1. பாகிஸ்தான் - அப்ரிடி
    2. அவுஸ்ரேலியா - சேன்வோன்
    3. இந்தியா - கபில்தேவ்
14. கூடுதலாக டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய சாதனையை முரளிதரன் எந்த நாட்டில் படைத்தார்?
    1. இந்தியா 2. இலங்கை 3. அவுஸ்ரேலியா
15. படத்தில் முரளிதரனுக்குப் பின்னால் நிற்பவர் யார்?
    1. சிறந்த பார்வையாளர் 2. சிறந்த நடுவர் 3.சிறந்த பந்துவீச்சாளர்

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

16. நகரங்களில் வீடு கட்டுவதற்கு அதிகளவில் பயன்படுத்தும் கல்.
    1. சிறுகல் 2. சுண்ணாம்புக்கல் 3. சிமெந்துக் கல் 4. கருங்கல்
17. தளபாடங்கள் செய்வதற்கு மிகவும் பொருத்தமான மரம்.
    1. பலாமரம் 2. புளியமரம் 3. தென்னைமரம் 4. தேக்குமரம்
18. கிராமங்களில் வசிக்கும் மக்கள் பயணத்தின்போது அதிகளவில் பயன்படுத்தும் போக்குவரத்துச் சாதனம்.
    1. மாட்டுவண்டி 2. விமானம் 3. படகு 4. துவிச்சக்கர வண்டி
19. சில நகரங்களில் சிறுமழை பெய்ததுமே வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. இதற்குக் காரணம்.
    1. நெருக்கமான வீடுகள் 2. நீர் வடிய மண் இன்மை
    3. அதிகரித்த சனத்தொகை 4. வடிகாலமைப்புச் சீரின்மை
20. தாவரம் ஒன்றின் பழங்கள், வித்துக்கள் மயிர்களை, முட்களை, சதைப்பிடிப்பான பகுதியை, ஒட்டும் தன்மையைக் கொண்டிருப்பதன் பிரதான காரணம்.
    1. விலங்குகளைக் கவர்தல் 2. விலங்குகளில் ஒட்டுதல்
    3. பரம்பலடைதல் 4. விலங்குகளைக் குத்துதல்
21. 

    அருகேயுள்ள பகுதியுடன் தொடர்புடைய திணைக்களம்.
    1. கல்வி 2. சுகாதாரம்
    3. தபால் 4. தொலைத்தொடர்பு

**பின்வரும் வாக்கியங்களை இணைத்து எழுதுக.**

22. மாலா பாடசாலைக்கு ஆயத்தமானாள்.
    மூலா பஸ் வண்டியில் புறப்பட்டாள்.
    ..............................................................................................
23. மயூரன் மைதானத்தில் விளையாடினான்.
    கண்ணன் மைதானத்தில் விளையாடினான்.
    ..............................................................................................

**கீழே தரப்பட்ட தமிழ்ச் சொற்களை ஒத்த சிங்களச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் பிழையின்றி எழுதுக.**

24. அதிபர் ........................................ 26. புத்தகம் ........................................

25. மாம்பழம் ........................................ 27. மேசை ........................................



**சுருக்கமான விடை தருக.**

28. உணவு சமைக்கப் பயன்படும் பூக்கள் இரண்டு தருக.
    1) ........................................ 2) ........................................
29. தாவர உண்ணிகள் இரண்டு தருக.
    1) ........................................ 2) ........................................
30. தச்சுத் தொழிலாளி பயன்படுத்தும் இரண்டு உபகரணங்கள் தருக.
    1) ........................................ 2) ........................................
31. தோற்கருவிகள் இரண்டு தருக.
    1) ........................................ 2) ........................................
32. மாப்பொருள் உணவுகள் இரண்டு தருக.
    1) ........................................ 2) ........................................
33. பூரணமான உணவுகள் இரண்டு தருக.
    1) ........................................ 2) ........................................
34. இலங்கையின் தேசியக் கொடியின் நிறங்கள் இரண்டு தருக.
    1) ........................................ 2) ........................................


**பின்வரும் பந்தியை வாசித்து அதைத் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வு பற்றித் தொடர்ந்து எழுதுக.**

35. அன்று வழமைபோல் ஆதவனும் கீழ் வானில் மலர்ந்துவிட்டான். என்றும் போல சகல விடயங்களும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. எமது வீடு அமைந்திருந்தது கடற்கரைப் பிரதேசம் என்பதால் கடலலையின் ஓசை வழமைபோல் கேட்ட வண்ணம் இருந்தது. நான் மேசையில் அமர்ந்து எனது பாடங்களைப் படித்துக்கொண்டிருந்தேன். வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிய எனது தந்தை வேகமாக வந்தார். வந்ததும் இன்றைக்கு நான் கடலைப் பார்த்தேன். கடலில் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிகிறது என்று சொல்லி முடிப்பதற்குள் அலையின் பேரொலியும், ஏதோ வெடித்த சத்தமும் எம்மை அதிரவைத்தது. உடனே நானும் எனது பெற்றோரும் பதற்றத்துடன் வெளியே ஓடி வந்தோம். என்ன அமைதியாக இருந்த கடல் அன்னை பொங்கியெழுந்து கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் பொங்கி வந்த கடல் அன்னை திடீரென்று தன்னை உள்வாங்கிவிட்டாள். என்ன! ஆச்சரியம........................கடலும் பாறைகளும் படிந்த தரையாகக் காட்சியளித்தது. ஆனால் கண்ணிமைப்பதற்குள்ளே........................................


இதனைத் தொடர்ந்து நடந்தவற்றை விபரிக்கும் வகையில் ஆறு வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற்றிருக்க வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.)

**கீழ்வரும் படங்களின் சரியான தமிழ்ச் சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக.**




36. ........................................



37. ........................................



38. ........................................



39. ........................................

# எடியூரப்பா ஆதரவு அமைச்சர்கள் 9 பேர் திடீர் இராஜினாமா

## நெருக்கடியில் கர்நாடக முதல்வர்

எடியூரப்பா ஆதரவு அமைச்சர்கள் 9 பேர் திடீர் இராஜினாமா செய்துள்ளனர். இதனால் முதல்வர் சதானந்த கவுடாவுக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

சட்ட விரோத சுரங்க முறைகேடு விவகாரத்தில் கர்நாடக முன்னாள் முதல்வர் எடியூரப்பா, கடந்த ஆண்டு அவர் முதல்வர் பதவியிலிருந்து விலகினார். அதன்பிறகு கர்நாடக பா.ஜ.க அரசு சில நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது.

எடியூரப்பாவின் பரிந்துரையின்படியே சதானந்த கவுடா கர்நாடகாவுக்கு முதல்வர் ஆனார். இருப்பினும் தற்போது சதானந்த கவுடாவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள எடியூரப்பா, அமைச்சர் ஜெகதீஷ் ஷெட்டரை முதல்வராக்க கடும் முயற்சியில் களமிறங்கியுள்ளார்.

முதல்வர் சதானந்தகவுடாவுக்கு எதிராக எடியூரப்பாவுக்கு ஆதரவு தரும் அமைச்சர்கள் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள் மீண்டும் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

சதானந்த கவுடாவை நீக்க வேண்டும், அவருக்கு பதிலாக ஜெகதீஷ் ஷெட்டரை முதல்வராக்க வேண்டும் என்று பா.ஜனதா மேலிடத்தை அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

ஆனால், பா.ஜனதா மேலிடம், இந்தப் பிரச்சினையில் எந்த முடிவையும் எடுக்காமல் ஜனாதிபதி தேர்தல் முடியும்வரை பிரச்சினையை தள்ளிப்போட முடிவு எடுத்துள்ளது.

இந்நிலையில் கட்சி மேலிடத்திற்கு நெருக்கடி கொடுப்பதற்காக எடியூரப்பா ஆதரவு மந்திரிகள் 9 பேர் நேற்று முன்தினம் அதிரடியாக இராஜினாமா செய்ய முடிவு செய்தனர்.


அதன்படி, பெங்களூரில் உள்ள அமைச்சர் ஜெகதீஷ் ஷெட்டரின் வீட்டில் நேற்று முன்தினம் காலை எடியூரப்பா ஆதரவு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் கூடி, ஆலோசித்தனர்.

மூத்த அமைச்சர் சி.எம்.உதாசி தலைமையில் ஒரு மணி நேரம் நீடித்த இந்தக் கூட்டத்தில், ஷோபா, ஜெகதீஷ் ஷெட்டர், முருகேஷ் நிராணி, பசவராஜ பொம்மை, ரேணுகாச்சார்யா, உமேஷ்கத்தி, ரேவுநாயக் பெல்மகி, சோமண்ணா ஆகிய 8 மந்திரிகள் உதாசியிடம் இராஜினாமா கடிதங்களை கொடுத்தனர்.

பின்னர் இரவு 7 மணியளவில், ஜெகதீஷ் ஷெட்டர் வீட்டில் இருந்து உதாசி உட்பட 7 மந்திரிகள் இராஜினாமாக் கடிதத்தை எடுத்துக் கொண்டு முதல்வர் சதானந்த கவுடாவின் வீட்டிற்குச் சென்றனர். அங்கு சதானந்த கவுடாவை சந்தித்து தங்களது இராஜினாமா கடிதத்தை கொடுத்தனர்.

இராஜினாமாக் கடிதங்களைப் பெற்று கொண்ட சதானந்த கவுடா, அமைச்சர்களை சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

மேலும், இந்தப் பிரச்சினை தொடர்பாக கட்சி மேலிடத் தலைவர்களுடன் அவர் தொடர்பு கொண்டு ஆலோசனை நடத்தினார். அப்போது அவரிடம், மந்திரிகளின் இராஜினாமாவை ஏற்கவும் வேண்டாம். நிராகரிக்கவும் வேண்டாம். ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை எந்த முடிவும் எடுக்க வேண்டாம் என்று கட்சி மேலிடம் அறிவுறுத்தியதாகத் தெரிகிறது.




# வழக்குகளில் இருந்து தப்பிக்க நித்தியானந்தா நடத்தும் யாகம்



தன் மீது போடப்பட்டுள்ள வழக்குகளிலிருந்து விடுபடவும், பொலிஸாரின் நெருக்கடியில் இருந்து தப்பிக்கவும், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில், நித்யானந்தா தனது சீடர்கள் மூலம் இரகசிய யாகம், வழிபாடுகள் செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 24ஆம் திகதி, நெல்லையப்பர் கோவிலில் ஆனிப் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ஆனித் திருவிழா காலத்தில், உச்சிகால பூஜைக்கு முன், கட்டளைதாரர்கள் சார்பாக சிறப்பு அபிஷேகம் மற்றும் யாகம் நடத்தப்படுவது வழக்கம். இந்த ஆண்டு ஆனித் திருவிழாவில், உச்சிகால பூஜைக்கு முன், சிவாச்சாரியார்கள் மூலமாக சிறப்பு அபிஷேகம் மற்றும் யாகத்தை, நித்யானந்தாவின் சீடர்கள் செய்து வருவதாக பக்தர்கள் தரப்பில் கூறப்படுகிறது. இந்த பூஜைக்கான சங்கல்பத்தில், நித்யானந்தாவின் பெயரைக் குறிப்பிட்டு, அவர் மீதான வழக்குகள் தவிடு பொடியாக வேண்டும் என்றும், மதுரை ஆதீனத்தில் நிரந்தரமாக இளைய சன்னிதானமாக இருக்க வேண்டும் என்றும் கூறப்படுவதாகத் தெரிகிறது.



அருணாச்சல பிரதேசத்தில் பெய்து வரும் கன மழை காரணமாக, வெள்ளம் சூழ்ந்த சாங்லாங் பகுதியிலிருந்து, பொதுமக்கள், விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டனர்.

# எல்லைப்பிரச்சினை குறித்து இந்தியா – பாக்கிஸ்தான் பேச்சு

இந்தியா-பாகிஸ்தான் எல்லைப் பிரச்சினை குறித்த கலந்துரையாடலுக்காக பாகிஸ்தான் துணை இராணுவப்படை தலைவர் தலைமையிலான குழு இந்தியா செல்லவுள்ளது. ஜூன் 1-ம் திகதி முதல் 5-ம் திகதி வரை புதுடெல்லியில் நடக்கும் இக்கூட்டத்தில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினருடன் பாகிஸ்தான் துணை இராணுவப்படையினர் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

பாகிஸ்தான் துணை ராணுவப்படைத் தலைவர் தலைமையிலான அக்குழுவில் அந்நாட்டின் துணை இராணுவப்படை, ஆய்வு மற்றும் கணக்கெடுப்பு துறை, உள்துறை அமைச்சகம் மற்றும் போதை எதிர்ப்பு படை ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

இரு நாடுகளும் இணைந்து பொதுப் பிரச்சினைகளை எதிர்கொள்வது மற்றும் எல்லையில் அமைதி ஏற்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அவர்கள் ஆலோசனை நடத்தவுள்ளனர். இரு நாடுகளுக்கிடையே நடக்கும் கடத்தல்கள், துப்பாக்கிச்சூடுகள், இந்தியாவில் சிறைவைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் கைதிகள் விவகாரம் போன்றவையும் விவாதத்தில் முக்கிய இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் போதை மருந்து கடத்தலை த்டுப்பது தொடர்பாக இருநாட்டு போதை எதிர்ப்புப் படையினரும் இணைந்து ஆலோசனை நடத்த உள்ளனர்.

## பத்மநாபசுவாமி கோவில் பொக்கிஷ அறையை திறக்க முடிவு!

பத்மநாபசுவாமி கோயிலில் பல இலட்சம் கோடி மதிப்புள்ள பொக்கிஷங்கள் இருப்பதாக கூறப்படும் 'ஏ' அறையில் உள்ள பொக்கிஷங்களை கணக்கிடுவதற்காக இன்னும் ஒரு சில தினங்களில் திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திருவனந்தபுரத்தில் உள்ள பத்மநாபசுவாமி கோயிலில் 6 இரகசிய அறைகள் உள்ளன. இந்த இரகசிய அறைகளில் பல இலட்சம் கோடி பொக்கிஷங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. "ஏ" முதல் "எப்" வரை உள்ள இந்த இரகசிய அறைகளில் "பி" அறை தவிர மற்ற 5 அறைகளும் திறக்கப்பட்டன. இவற்றில் "ஏ" அறையை திறந்தபோது அந்த அறையில் மட்டும் பல இலட்சம் கோடி மதிப்புள்ள தங்கம், வைரம், வைடூரியம் உள்பட பொக்கிஷங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது தவிர "சி" முதல் "எப்" வரை உள்ள அறைகளிலும் பல ஆயிரம் கோடி மதிப்புள்ள பொக்கிஷங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## வாழ்க வளமுடன்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : சிவனேஸ்வரன் சுஜானி

முகவரி : ஆஸ்ப்பத்திரி வீதி, சங்கானை.

அகவை 7 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# பக்டீரியா தாக்காத புதிய ரக நெல்

ஆந்திராவில் உள்ள நெல் ஆராய்ச்சி இயக்குனரகம் மற்றும் உயிரணு மூலக்கூறு உயிரியல் மையம் ஆகியவை இணைந்து, புதிய ரக நெல் ஒன்றை உருவாக்கியுள்ளன. பக்டீரியா நோய் தாக்குதலை சமாளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள, இந்த நெல் ரகத்தை, விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

"மேம்ப்டுத்தப்பட்ட சம்பா மசூரி" என அழைக்கப்படும் இந்த நெல் ரகம், உயிரி தொழில்நுட்பக் கருவிகளில் ஒன்றான, மார்க்கெர் அசிஸ்டட் செலக்ஷன் மெத்தடாலஜியை பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு விதமான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, பின் அதன் தரம் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து, உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தின் ( சி.சி.எம்.பி.) இயக்குனர் மோகன்ராவ் கூறியதாவது; ஆந்திரா, கர்நூல் மாவட்டத்தில், இரண்டு அமைப்புகள் மூலம் நடத்தப்பட்ட சோதனையில், பக்டீரியா நோய்த் தாக்குதலுக்கு இந்த வகை நெல் ரகம் பாதிக்கப்படுவதில்லை என்பது கண்டறியப்பட்டது. நெல்லை தாக்கும் நோய்களில், பக்டீரியா நோய் தாக்குதல் பயங்கரமானது. இது, அரிசி உற்பத்தியை கடுமையாகப் பாதிக்கும். இரசாயனங்களைப் பயன்படுத்தினாலும், இந்தப் பாதிப்பிலிருந்து மீள முடியாது. ஐதராபாத்தில் உள்ள மாநில வேளாண் பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ள, சம்பா மசூரி (பீபிடி5204) என்ற நெல் ரகம் கூட, பக்டீரியா நோய் தாக்குதல்களுக்கு ஆளாகக் கூடியது. ஆனால், மேம்படுத்தப்பட்ட சம்பா மசூரியில், அப்பிரச்சினை இல்லை. இது மரபணு மாற்றம் முறையில் உருவாக்கப்பட்டதல்ல. இந்த நெல் ரகத்தை பிரபலப்படுத்தும் வகையில், விவசாயப் பண்ணைகளுக்கு இலவசமாக, இந்த வகை நெல் விதைகள் வழங்கப்படும். ஆந்திரா மட்டுமின்றி கர்நாடகா, தமிழகம் மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களுக்கும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் இப்புதிய ரக நெல் விதைகள், விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படும். இவ்வாறு மோகன்ராவ் கூறினார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# போராட்டக் காரர்களுக்கு உதவுகின்றது அமெரிக்கா

## – சிரியா குற்றச்சாட்டு



போராட்டக்காரர்களுக்கு மறைமுகமாக அமெரிக்கா உதவி வருவதாக சிரியா குற்றச்சாட்டியுள்ளது.


சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத்திற்கு எதிரான போராட்டத்தில், இதுவரை 15 ஆயிரத்திற்கும் அதிகமான பேர் பலியாகி உள்ளனர்.

சிரியா அரசுக்கு எதிராக போராட்டம் நடத்துவோருக்கு தீவிரவாதிகள் உதவி வருவதாகவும், ஆயுத உதவி செய்வதாகவும் சிரியா கூறி வந்தது. தற்போது ஐ.நா. சபையிலும் இந்தப் பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறது.

ஐ.நா. சபையில் பொதுக்குழுவில் நடைபெற்ற தீவிரவாதத்துக்கு எதிரான விவாதத்தில் பங்கேற்று சிரியா தூதர் பஷார் ஜபாரி பேசுகையில், சிரியாவில் போராட்டத்தில் ஈடுபடும் தீவிரவாதிகளுக்கு தகவல் பரிமாற்ற தொழில்நுட்ப வசதிகள் கிடைக்க அமெரிக்கா போன்ற சில நாடுகள் மறைமுகமாக உதவி அளித்து வருகின்றன. இந்த போர்வையில் நவீன ஆயுதங்களும் வழங்கப்படுகிறது என்று குற்றம்சாட்டினார்.

மேலும் தலைநகர் டமாஸ்கஸ்சில் உள்ள நீதிமன்ற வளாகத்திற்குள் நுழைந்த போராட்டக்காரர்கள் நீதிபதிகள், வக்கீல்களின் கார்களை தீ வைத்து சேதப்படுத்தினர் என்றும் அவர் புகார் தெரிவித்தார்.

# சூரிய மண்டலத்தை ஊடுருவிச் செல்லும் விண்கலங்கள்




அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் வியாழன் மற்றும் சனிக் கிரகங்களை ஆய்வு செய்வதற்காக வாயேஜர்-1 என்ற விண் கலத்தை; கடந்த 1977ஆம் ஆண்டு அனுப்பினர்.

இத்துடன் வாயேஜர்-2 என்ற விண்கலமும் சேர்த்து அனுப்பப்பட்டது. வாயேஜர்-1 என்ற விண்கலம் நவீன தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டது. இதில் ஒரே நேரத்தில் 8 ஆயிரம் வார்த்தைகளை சேகரித்து வைக்கவும், வினாடிக்கு 160 தகவல்களை அனுப்பும் வசதியும் உள்ளது.

மேலும் இந்த விண்கலங்கள் 5 ஆண்டுகளில் வியாழன், சனி ஆகிய 2 கிரகங்களையும் சென்றடையும் வகையில் திட்டமிட்டு செலுத்தப்பட்டிருந்தது. ஆனால், அவை குறிப்பிட்ட காலத்தில் சென்றடையவில்லை. எனவே அவை தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வந்தன. இந்நிலையில் வாயேஜர்-1 என்ற விண்கலம் தற்போது 35 ஆண்டுகளுக்கு பிறகு சூரிய மண்டலத்தின் எல்லையைக் கடந்துள்ளது.

இந்த விண்கலம் சூரிய மண்டலத்தை ஊடுருவி கடந்து செல்வது ஒரு மிகப்பெரிய சாதனையாகக் கருதப்படுகிறது. சூரிய மண்டலம் பூமியில் இருந்து 1100 கோடி மைல் தொலைவில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# முதல் பெண் விண்வெளி வீராங்கனை பூமிக்குத் திரும்பினார்



வெற்றிகரமாக விண்வெளிப் பயணத்தை முடித்துக் கொண்டு, சீனாவின் முதல் பெண் விண்வெளி வீராங்கனை உட்பட மூன்று விண்வெளி வீரர்கள் நேற்று முன்தினம் பூமிக்குத் திரும்பினர்.

அமெரிக்கா, ரஷ்யாவை போன்று சீனாவும் விண்வெளியில் ஆய்வுக் கூடம் அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதன் காரணமாக கடந்த 16ஆம் திகதி சீனாவின் வடக்குப் பகுதியில் கோபி பாலைவனத்தில் உள்ள ஜியுகுவான் ஏவுதளத்தில் இருந்து ஷென்ஷோ- 9 என்ற விண்கலம் புறப்பட்டது.

இந்த விண்கலத்தில் முதன் முறையாக பெண் விமானி லியு யாங்(வயது-33) உட்பட, ஜிங் ஹைபெங்(வயது-45) மற்றும் லியூ வாங்(வயது 43) ஆகியோர் பயணம் செய்தனர்.

கடந்த 19ஆம் திகதி இந்த விண்கலம் பூமியில் இருந்து 343 கி.மீ. தொலைவில் பறந்து கொண்டிருக்கும் டியான்காங் 1 என்ற ஆய்வு மையத்தை சென்றடைந்தது.

அங்கு அவர்கள் பல்வேறு ஆய்வுப்பணிகளை மேற்கொண்டனர். ஆய்வுப்பணி முடிந்ததையடுத்து வெற்றிகரமாக இவ் விண்வெளி வீரர்கள் பூமிக்குத் திரும்பினர். இந்த விண்வெளி வீரர்கள் திரும்பி வந்த கலம், வட சீனாவில் மங்கோலிய உட்பகுதியில் புல்வெளியில் தரையிறங்கியது.இது குறித்து சீனப் பிரதமர் வென் ஷியாபோ கூறுகையில் இந்தச் சாதனை சீனாவின் சக்தியை மேலும் அதிகரிக்கும், தேசிய உணர்வுக்கு உத்வேகம் தரும் என்று கூறினார்.

உலகச் செய்திகள்

# அமெரிக்க பொருளாதாரத் தடை; சீனா, சிங்கப்பூருக்கு விலக்கு



ஈரான் எண்ணெயை இறக்குமதி செய்வது தொடர்பாக அமெரிக்காவின் பொருளாதாரத் தடையிலிருந்து சீனா, சிங்கப்பூருக்கு விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் அமெரிக்கப் பொருளாதாரத் தடையிலிருந்து ஏற்கெனவே இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் விலக்குப் பெற்றுவிட்டன.

இந்த நிலையில் சீனாவுக்கும் சிங்கப்பூருக்கும் விலக்கு அளித்திருப்பதாக அமெரிக்க வெளி விவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது, சீனாவும் சிங்கப்பூரும் ஈரானிலிருந்து எண்ணெய் வாங்குவதைக் கணிசமான அளவு குறைத்துவிட்டன என்று நான் உறுதி செய்து கொண்டுள்ளேன்.

இதனால் பொருளாதாரத் தடை விதிப்புச் சட்டத்திலிருந்து இந்த இரு நாடுகளுக்கும் விலக்கு அளிக்க அமெரிக்கா முடிவு செய்திருக்கிறது.

ஈரான் பொருளாதாரத் தடைச சட்டத்தின் கீழ் அந்த நாடுகளைச சேர்ந்த நிதி நிறுவனங்களுக்கு 180 நாள்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. இது மேலும் நீடிக்கப்படக் கூடியது. இத்துடன் மொத்தம் 20 நாடுகளுக்கு இது போன்ற விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

உலக அணு சக்திக் கொள்கைக்கு விரோதமாக ஈரான் தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது. அதற்கு ஈரான் தர வேண்டிய பொருளாதார விலை மகத்தானது என்பதை இந்த 20 நாடுகளின் ஒட்டுமொத்தப் பொருளாதார நடவடிக்கையானது எடுத்துக் காட்டும்.

சர்வதேச எரிபொருள் ஏஜென்சியின் புள்ளிவிவரப்படி, 2011-ம் ஆண்டில் ஈரான் ஏற்றுமதி செய்த கச்சா எண்ணெயின் அளவு நாளொன்றுக்கு 25 இலட்சம் பீப்பாய்கள் என்று இருந்தது. ஆனால் இந்த ஆண்டு நாளொன்றுக்கு 15 இலட்சம் பீப்பாய்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதனால் காலாண்டு விகிதத்தில் ஈரானுக்கு ஏறத்தாழ ரூபா 44 ஆயிரம் கோடி வருவாய் இழப்பு நேரிடுகிறது என்றார்.

# விக்கிலீக்ஸ் நிறுவுநர் சரணடைய மறுப்பு

ஈக்வடார் நாட்டின் தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ள விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே சரணடையும் படி பொலிஸார் அளித்த கடிதத்தை ஏற்க மறுத்து விட்டார்.

விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே மீது இரண்டு பெண் களை வல்லுறவுக்குட்படுத்தியது தொடர்பாக சுவீடன் அரச வழக்கு தொடர்ந்தது.

இதையடுத்து அசாஞ்சே பிரிட்டனில் தஞ்சம் புகுந்தார். சுவீடன் கோரிக்கைப்படி இவர் கைது செய்யப்பட்டார்.

அதன் பின் லண்டன் நீதிமன்றம் இவருக்கு பிணை வழங்கியது. இதேவேளை தங்கள் நாட்டிடம் ஒப்படைக்கும்படி சுவீடன் கோரியது.

இதை எதிர்த்து அசாஞ்சே மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் அசாஞ்சை, சுவீடனிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து அசாஞ்சே மேல் முறையீடு செய்தார். ஆனால் இவரது மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.

இதையடுத்து அசாஞ்சை கைது செய்து சுவீடனிடம் ஒப்பணீடக்கும் நிலை ஏற்பட்டது. இதைத் தவிர்ப்பதற்காக அசாயஞ்சே லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டுத் தூதரகத்தில், கடந்த 20ஆம் திகதி தஞ்சம் புகுந்தார். தூதரகத்தை விட்டு வெளியேறும் பட்சத்தில் அவர் கைது செயயப்படுவார். நேற்று முன்தினம் வரை அவரை நாடு கடத்தக்கூடாது என நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

இந்த காலக்கெடு முடிந்ததால் அவரை நாடு கடத்த வேண்டிய பணியில் ஈடுபட்டுள்ள பொலிஸார், ஈக்வடார் தூதரக அதிகாரிகளுக்கும், அசாஞ்சேக்கும் சரணடையக் கோரும் கடிதத்தை விநியோகித்தனர்.

# பேய் கிராமம் ஏலம்!

அரிய வகை புராதன பொருட்கள், அரசு கையகப்படுத்திய சொத்துகள் ஏலத்துக்கு விடப்படுவது வழக்கம்.

இத்தாலி நாட்டில் இருக்கும் ஒரு கிராமம் ரூ.16 கோடிக்கு ஏலம் விட விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 25 பழமையான வீடுகளை கொண்ட அந்த சிறிய கிராமத்தின் பெயர் பராதரிசிகா என்பதாகும்.

கடல் மட்டத்திற்கு மேல் 2,400 அடி உயரத்தில் மலைத் தொடரில் அமைந்துள்ள இயற்கை எழில் கொஞ்சும் இந்த கிராமத்தில் வசித்த மக்கள் கடந்த 1960ஆம் ஆண்டில் அங்கிருந்து வெளியேறி விட்டார்கள்.அதன்பிறகு அங்கு யாரும் குடியேறாததால் அதை பேய் கிராமம் என்றும் சிலர் கூறி வருகிறார்கள். வீடுகளை சுற்றி விவசாயம் செய்ய ஏற்ற வயல்வெளியும் இருக்கிறது. இதை வாங்க போகும் தைரியசாலி நபர் யார் என்று தான் தெரியவில்லை.

## குழந்தை இறந்தது கூடத் தெரியாமல்

# இணையத்தில் தாயார் அரட்டை



குழந்தை இறந்தது கூடத் தெரியாமல் இணையத்தில் சுவாரஸ்யமாக அரட்டை அடித்துக் கொண்டிருந்த தாயை பொலிஸார் கைது செய்தனர்.

ஜப்பானின் மேற்குப் பகுதியில் உள்ள ஓட்சு நகரத்தை சேர்ந்தவர் யுமிகோ தகாஷி(வயது-29).

இவருடைய 19 மாத குழந்தைக்கு கடந்தாண்டு ஜுன் மாதம் 24ஆம திகதி காய்ச்சல் ஏற்பட்டது.

ஆனால் குழந்தையைக் கவனிக்காமல், இணையத்தில் பல மணி நேரம் மூழ்கியிருந்தார் தகாஷி. மறுநாள் காலை குழந்தை கட்டிலில் இறந்து கிடந்ததை பார்த்துள்ளார்.

இந்தப் பெண்ணுக்கு முதல் குழந்தை பிறந்த சில நாட்களில் இறந்து விட்டது. இவர் கணினியில் இணையத்தளத்தை பார்த்துக் கொண்டிருந்த போது, விளையாடிக் கொண்டிருந்த இரண்டாவது குழந்தை மாடிப்படியில் தவறி விழுந்து சில ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டது.தற்போது மூன்றாவது குழந்தையும் இறந்துள்ளதால், இவர் குழந்தைகளை அலட்சியம் செய்ததாகக் கூறி நேற்று முன்தினம் ஜப்பானிய பொலிஸார் இவரைக் கைது செய்தனர்.

# காலம் கடந்து உணர்ந்தும் பயனில்லை

## விழிப்பாக இருந்தால் உடனடியாக விழிக்க வேண்டும்



தீயைத் தொட்டால் சுடும் என்பதை குழந்தை உணர ஒருநொடி போதும். ஆனால் கண்டிப்பு இல்லாமல் படித்த கல்வியின் தரத்தை உணர குறைந்தது 20 ஆண்டுகள் ஆகிவிடும். ஆனால் காலம் கடந்து விடும். உணர்ந்தும் பயனில்லை. அதனால் விழிப்பதாக இருந்தால் உடனடியாக விழிக்க வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை பாரதி முன்பள்ளியின் விளையாட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் பெற்றார் ஆசிரியர் சங்கத் தலைவர் நாகமுத்து நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு பேசும்போது மேற கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எக்காலத்திலும் மனிதனுக்கு வலிமை அளிக்கக்கூடிய கருவி கல்வி. கல்வி கற்பிக்கப்படும் முறையில் மாற்றங்களை பல்வேறு காலகட்டங்களில் ஏற்பட்டு வருகின்றன. கரும்பலகையில் இருந்து கணினிக்கு மாறியிருக்கலாம். எழுத்துகள் கொண்ட புத்தகத்தில் இருந்து வண்ணப் படங்கள் கொண்ட பக்கத்துக்கு மாறியிருக்கலாம். ஆனால் அவ்வாறு படித்து வெளிவரும் மாணவனின் தரம் செயல்திறன் மிகவும் குறைவானதாகவே உள்ளது. வடக்கு மாகாணம் கல்வியில் மிகவும் பின்தங்கிய மாகாணமாக உள்ளது என அறியப்பட்டுள்ளது. கல்வியின் ஆரம்பம் முன்பள்ளிகளிலேயே தொடங்குகின்றது. அங்கேயே அது வலுப்படத்தப்பட வேண்டும்.

முன்பள்ளி வகுப்புகளில் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதனால் ஒரு குறிப்பிட்ட பாடத்திற்கு பாடப்பிரிவு வேளைகளில் ஆசிரியரால் ஒரு தனிப்பட்ட ஒரு குழந்தையின் தனித்திறன்களை வளர்க்கப் போதுமான நேர அவகாசம் இருப்பதில்லை. ஆகவே குழந்தையின் தனித்திறன் அருகிப்போகின்றது. எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் கூடிய கவனம் செலுத்த வேண்டி பொறுப்பை தாங்கிக் கொள்ளவேண்டும். தனது பிள்ளையின் படித்த கல்வியின் தரத்தை உணர குறைந்தது 20 ஆண்டுகள் ஆகிவிடும் ஆனால காலம் கடந்து விடும். உணர்ந்தும் பயனில்லை. அதனால் விழிப்பதாக இருந்தால் உடனடியாக விழிக்க வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைபபாளரும் பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் சிறப்பு விருந்தினர்களாக உடுத்துறை மகா வித்தியாலய அதிபர் வே.புவனேந்திரராசா பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் ரி.எஸ்.பி.ஆர்.பெர்ணாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம்

## மறுபரிசீலனைக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தேசிய பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற கல்வியற் கல்லூரி ஆசிரியர்கள் எவரும் தமது கடமையைப் பொறுப்பேற்க வேண்டாம் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

கல்வியற் கல்லூரியில் இருந்து வெளியேறி வடமாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற ஆசிரியர்களின் பாடசாலைத் தெரிவு தொடர்பான மறுபரிசீலனை செய்யவேண்டி உள்ளதால், இவ் ஆசிரியர்கள் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குத் தமது நியமனக் கடிதங்களுடன் வடமாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த விடயத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கும் வரை தேசிய பாடசாலைகளில் பதவி ஏற்க அனுமதிக்க வேண்டாம் என வடமாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள், தேசிய பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (எஸ்)

# ஊடகங்கள் மீதான நெருக்குதல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்

## இது அமெரிக்க எதிர்பார்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்கள் மீது நடத்தப்படும் தொந்தரவுகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா வேண்டுகோள விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா மிரர் மற்றும் லங்கா எக்ஸ் நியூஸ் இணையத்தள ஊழியர்கள் 9 பேர் கைது செய்யப்பட்டமை உட்பட மேற்படி இணையத்தளங்கள் தொடர்பான விவகாரத்தை அமெரிக்கத் தூதரகம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது என அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்தி இணையத்தளங்களை முடக்குதல், அச்சுறுத்தல், ஊடகவியலாளர்கள் காணாமல் போதல் உட்பட சுயாதீன செய்தி ஊடகங்களை ஒடுக்குவ தற்கான முயற்சிகள் தொடர்பாக பல தடவை நாம் எமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளோம்.

தணிக்கை செய்யப்படாத சுயாதீன ஊடகம் அனைத்து பிரஜைகளுக்கும் கிடைக்கக் கூடியதாக இருப்பது துடிப்பான ஜனநாயகத்தின் தவிர்க்க முடியாத அம்சம் என அமெரிக்கா நம்புகிறது. அனைத்து ஊடகவியலாளர்கள் மீதான அனைத்து வகையான தொந்தரவுகளும் நிறுத்தப்பட வேண்டும் என நாம் கோருகிறோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிறைக்கூடத்தில்...

வழங்கியுள்ள தகவல்கள் வெளிநாடுகளில் ஒலிபரப்பப்படுவதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார். சிறையில் உள்ள இந்த புலி உறுப்பினர்களுக்கு, புலிகளின ஆதரவாளர்களின் உதவிகள் கிடைத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆஸிக்கு...

கடற்படையினரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. கடற்படையினரின் அதிவேகத் தாக்குதல் படகொன்றின் மூலம் இப்படகு வழிமறிக்கப்பட்டது. இப்படகில் பெருந்தொகையான உணவுப் பொருட்கள், தண்ணீர் போத்தல்கள், பயணிகளின் உடைமைகள் என்பன காணப்பட்டன. கைது செய்யப்பட்ட நபர்கள் மேலதிக விசாரணைக்காகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

### இனப்பிரச்சினைக்கான...

தெரிவித்தார். தற்போது இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் விரிவான அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து இந்தியா திருப்தி கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். இலங்கையில் அரசியல் நல்லிணக்கம் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை எட்டுவதற்காக இந்தியா தன்னாலான ஒத்துழைப்புகளை வழங்கும் என இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்ததாக டைம்ஸ் ஒப் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நிலவுகின்ற பிரச்சினைக்கு அந்த நாட்டிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இதற்காக இலங்கையினால் கோரப்படுகின்ற அனைத்து உதவிகளையும் செய்வதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இலங்கைக்குள் அனைத்துப் பிரஜைகளும் சமத்துவம், நீதி, சுயகௌரவத்துடன் வாழக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகவேண்டும் என்பதில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டினை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்,

அத்துடன் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பிலும் இலங்கை அரசாங்கத்துடன் இந்தியா நெருக்கமாக செயற்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### புனர்வாழ்வு...

அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சதீஷ்குமார் தெரிவித்தார். மேற்படி தமிழ்க் கைதிகளின் விசாரணைகளை துரிதப்படுத்தும் நோக்கில் நியமிக்கப்பட்ட விசேட ஆணையார்களுள் ஒருவரான காமினி குலதுங்க கடந்த வியாழக்கிழமை சிறைச்சாலைக்கு விஜயம் செய்து இந்தத் தீர்மானத்தை அறிவித்திருந்தார்.

தமிழ்க் கைதிகளின் விசாரணைகளை துரிதப் படுத்தவென விசேட நீதிமன்றங்கள் நியமிக்க உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், கைதிகளின் விருப்பின் பேரில் இவர்களை புனர்வாழ்வளித்து விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் ஆணையாளர் குறிப்பிட்டார்.

எடுக்கப்பட்டிருக்கும் தீர்மானத்தின் அடிப்படையில் ஆயுதப் பயிற்சி எடுக்காத, புலி உறுப்பினர்களல்லாதவர்களுக்கும் புனர் வாழ்வளிக்கப்படுமென்பதனையும் அவ் ஆணையாளர் சுட்டிக்காட்டி னார்.

மேலும் எவ்வித அரசியல் நோக்கம் இன்றி அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்பதற்காகவே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக குறிப்பிட்ட அவர், கடந்த கால வரலாறை மறந்து அனைவரும் ஒற்றுமையாக ஒத்துழைக்க வேண்டுமெனவும் சிறைக் கைதிகளைக் கேட்டுக்கொண்டார்.

ஆணையாளர் தெரிவித்த தீர்மானத்திற்கு சம்மதம் தெரிவித்த மகசின் சிறைக் கைதிகள் தம்மை புனர்வாழ்வளித்து விடுதலை செய்வதற்கு இணக்கம் தெரிவித்து கடிதம் எழுதி ஆணையாளரிடம் ஒப்படைத்துள்ளனர். அநுராதபுரம், நீர்கொழும்பு, மகசின் சிறைச் சாலைகளிலுள்ள 700 தமிழ்க் கைதிகள் இத்தீர்மானத்தை உடனடியாக அமுல் படுத்தக் கோரி கடிதம் சமர்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### யுத்தத்தால்...

எம் மக்களுக்கு முதன்முதலாக உதவிகளை வழங்க முன் வந்தது. அதைத் தொடர்ந்து அவ் அரசாங்கம் தொடர்ச்சியாக யுத்த பாதிப்பை எதிர்கொண்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கும் தேசக்கட்டுமானத்திற்கும் என தொடர்ச்சியாக உதவி வருகின்றது.

ஆரம்பத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு தற்காலிக இருப்பிடங்களை அமைப்பதற்கான உதவிகளை வழங்கிய இந்தியா, அடுத்தகட்டமாக பாடசாலைகளை புனரமைக்கவும் வர்த்தக நிலையங்களை மீளமைக்கவும் உதவியது தற்போது கிளிநொச்சியில் அமையப்பெறவுள்ள யாழ் பல்கலைக்கழகத்தின் இரண்டு பீடங்களை அமைப்பதற்கு 500 மில்லியன் ரூபா வழங்கியுள்ளது. தொடர்ந்தும் அத்திட்டத்திற்கு உதவத் தயாராகவுள்ளது.

அத்தோடு யாழ். துரையப்பா விளையாட்டரங்கை மீளமைக்கவும் குறித்த சில பகுதிகளில் புகையிரத வீதிகளை அமைப்பதற்கும் இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

எனவே இந்திய அரசின் இவ் உதவித் திட்டங்களை எம் மக்கள் நன்றியுடன் ஏற்கின்றனர். இந நிலையில் முற்றாக அழிந்த எம் தேசத்தில் மக்கள் மீண்டும் தம்மை நிலைப்படுத்திக் கொள்ள இவ் இந்திய அரசின் உதவிகளை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை, அவ் அரசாங்கத்தால் வாக்குறுதியளிக்கப்பட்ட ஐம்பதாயிரம் இந்திய வீட்டுத் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் காலத்தையும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். ஏனெனில் யுத்தம் வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் அனைவரினது வீடுகளையும் அழித்துவிட்டது. இன்று அவர்கள் தற்காலிக வாழ்விடங்களை அமைத்தே வாழ்கின்றனர். இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் சுமார் 25000 இற்கும் அதிகமான வீடுகள் அழிவுக்குள்ளாகியுள்ளன.

எனவே தற்போது நடைமுறையிலுள்ள வீட்டுத் திட்டத்தை முழுமைப் படுத்துவதனூடாக எமது மக்களின் வாழ்வில் ஒருகட்ட மேம்பாட்டை எட்டுவர்.

இன்று இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் துவிச்சக்கர வண்டிகள் எம் மக்களின் வாழ்வாதார செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக அமையும். எனவே, இதற்காக உதவிய அனைவருக்கும் எமது மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச செயலர் சோதிநாதன் இந்திய துணைத்தூதரக அதிகாரி இராமலிங்கம் ஈ.பி.டி.பியின் வலிகாம அமைப்பாளரும் வலி. மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான பாலகிருஸ்னன் (ஜீவன்), சமூகசேவை அலுவலர் செல்வம் ஆகியோரும் கிராம அலுவலர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

### அச்சுவேலி...

வைத்திய தயாரிப்புக்கள் பாரம்பரிய எட்டுவகை உபகரணங்கள் என்பன கண்காட்சிக் கூடத்தில் மக்களினது பார்வைக்காக வைக்கப் படவுள்ளன. இந்தக் கண்காட்சியினைத் தொடர்ந்து அதே மூலிகைத் தோட்ட வளாகத்தில் சித்த மருத்துவ மாநாடும் இடம்பெறவிருக்கின்றது. மாநாட்டில் பஞ்சகர்ம, அக்குபஞ்சர் முறிவு நெறிவு, பாலரோகம் போன்ற பாரம்பரிய சிறப்பு வைத்திய நிபுணர்கள் கல[illegible] கொண்டு சிறப்புரைகளை நிகழ்த்தவுள்ளார்கள். ([illegible])

### பட்டதாரிகள்...

வழங்கப்படவுள்ளன. ஏற்கனவே 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியேறிய மாணவர்களை நியமனங்களுக்காக இணைத்துக் கொள்வது என்ற நிலையில் பட்டதாரி மாணவர்கள் அமைச்சர் டகளஸ் தேவானந்தாவை தொடர்ந்து சந்தித்துக் கலந்துரையாடியதற்கு அமைவாகவும் அதேநேரம் பட்டதாரி மாணவர்களின் வேலையின்மைப் பிரச்சினை தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ள அமைச்சர் இப்பிரச்சினையை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்ததன் பயனாக 2011 ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் வெளியேறி நேர்முகப் பரீட்சையில் தோற்றியுள்ள மாணவர்களுக்கு இந்த நியமனங்கள் நியாயமான அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

இந்நிலையில் தங்களது நியமனங்கள் தொடர்பில் பட்டதாரி மாணவர்கள அநாவசியமாகக் குழப்பங்களுக்கு ஆளாகத் தேவையில்லை என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் அறிவித்துள்ளார்.

# சிறுமியைக் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம்

## ஊர் திரண்டு குடும்பஸ்தரை மடக்கியது

(சுன்னாகம்)

சுன்னாகத்தில் சிறுமி ஒருவரை பீடா தருவதாக ஏமாற்றி அழைத்து ஆட்டோ ஒன்றில் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த இளம் குடும்பஸ்தர் ஒருவரை ஊர்மக்கள் பலர் இணைந்து சுற்றி வளைத்து பிடித்து நையப்புடைத்துள்ளனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

நேற்றுக்காலை தனியார் வகுப்பிற்குச் சென்ற தரம் - 5 இல் கல்வி கற்கும் குறித்த சிறுமியை சுன்னாகம் பகுதியில் ஆட்டோவில் சென்று பீடா வியாபாரம் செய்யும் 30 வயது இளம் குடும்பஸ்தர் பீடா தருவதாக கூறி ஆட்டோவில் ஏற்றிச் சென்றுள்ளார்.

சில மணி நேரங்களின் பின்னர் மதியமளவில் சிறுமி அழுது கொண்டு கந்தரோடைப் பகுதியில் இருந்து சுன்னாகம் நோக்கி நடந்து வந்துள்ளார்.

இதனை அவதானித்த பொதுமக்கள் விசாரித்து விடயம் அறிந்து கொண்டனர்.

இதேவேளை அங்கு குழுமிய ஊர் இளைஞர்கள் சிறுமி கூறிய அடையாளங்களை வைத்து தேடிய போது குறித்த நபர் மாலையில் தன்னுடைய வியாபார விடயமாக மீண்டும் அப்பகுதிக்கு வந்த வேளை பொதுமக்களால் பிடிக்கப்பட்டார். அவருடைய அடையாள அட்டையில் ஊர்காவற்றுறையை சொந்த இடமாகக் கொண்டவர் எனத் தெரியவருகிறது.

தற்போது திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியில் வசித்து வருவதாகத் தெரிவித்துள்ளார். இவர் கிராம அலுவலர் ஊடாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சுன்னாகம் பொலிஸார் தற்போது மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தருஸ்மன் அறிக்கை பொலிஸாருக்கு விளக்கம்

(கொழும்பு)

தருஸ்மன் அறிக்கை தொடர்பாக பாதுகாப்பு தரப்பினரை தெளிவூட்டுவதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான விசேட செயலமர்வு கொழும்பு றோயல் கல்லூரியில் நேற்று நடைபெற்றதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சஜீவ மெதவத்த தெரிவித்துள்ளார். இதில் முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

### வவுனியாவிலிருந்து இடம் மாற்றப்பட்ட

# கைதிகள் மீது தாக்குதல்

வவுனியா சிறைச்சாலையில் இருந்து அநுராதபுரத்தில் உள்ள சிறைக்கு மாற்றப்பட்ட ஆறு தமிழ் சிறைக்கைதிகள் தாக்கப்பட்டுள்ளதாக தம்மிடம் முறையிடப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் அரசாங்கம் உரிய விசாரணைகளை விரைவாக நடத்தவேண்டும் எனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், தாக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சைகள் அளிக்க நடவடிக்கையெடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இதில் நால்வர் படுகாயமடைந்துள்ளதுடன் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்ததாகவும், தாக்கப்பட்ட கைதிகளுக்கு உரிய சிகிச்சையளிக்க சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லையென தெரிவித்துள்ளார்.

## வவுனியா சிறையில் தேடுதல்; 28 கைத்தொலைபேசிகள் மீட்பு

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது கைதிகளுடையது எனக் கூறப்படும் கையடக்கத் தொலைபேசிகளும் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன. புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் பணிப்புரைக்கு அமைய சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இதன்போது 28 கையடக்கத் தொலைபேசிகளும் 20 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

வவுனியா சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து அங்கிருந்த கைதிகள் மூன்று சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர்.

வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 28 விடுதலைப் புலிகள் அமைப்பு சந்தேக நபர்கள் போகம்பரை மற்றும் மஹர சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர். ஏனைய கைதிகள் அநுராதபுரம் சிறைக்கு மாற்றப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நுளம்புக்கு அடைக்கலம் கொடுத்த 8 ஆயிரம் பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

டெங்கு நுளம்பு பெருகும் வகையில் தமது சுற்றுப்புறச் சூழலை வைத்திருந்த 8 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்தவாரம் சுகாதாரப் பிரிவினர் நாடு முழுவதும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன் போது 1,33,406 வீடுகள் மற்றும் நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்நடவடிக்கையின் பின்னதாக 7,666 பொதுமக்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சட்ட நடவடிக்கையின் மூலமாக 2,898,000 ரூபாவை வருமானமாக பெற முடிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பழைய எலும்புக்கூட்டை ஆராய இங்கிலாந்து நிபுணர் குழு வருகை

(கொழும்பு)

அண்மையில் கழுத்துறை - பாஹியங்கலயில் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய மனிதனின் எலும்புக்கூடு தொடர்பாக ஆராய்வதற்கு இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயிரியல் மானுடவியலாளர்கள் குழுவொன்று நேற்று இலங்கைக்கு வந்தது.

மேற்படி சடலத்தின் எச்சங்கள் தொடர்பாக இக்குழுவினர் உயர் தொழில்நுட்ப ஆய்வுகளை மேற்கொள்வர் என தொல்பொருள் திணைக்களத்தின் அகழ்வுப் பணிப்பாளரான கலாநிதி நிமல் பெரேரா கூறினார்.

அத்துடன் மேற்படி, சடலம் காணப்பட்ட பகுதிகளைச் சுற்றியுள்ள மண்ணின் மாதிரிகள், அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள ஆய்வுகூடமொன்றுக்கு ஆய்வு களுக்காக விரைவில் அனுப்பப் படவுள்ளதாகவும் கலாநிதி நிமல் பெரேரா கூறினார்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய மனிதனின் எலும்புக்கூடு எனக் கருதப்படும் மேற்படி எலும்புக்கூடானது களுத்துறையில் பாஹியங்கலப் பிரதேசத்தில் கடந்த 15 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது.

இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மனிதனின் முழுமையான எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டமை இதுவே முதல் தடவை என தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் தஸநாயக்க கூறினார்.

## மூன்று விபத்து; நால்வர் பலி.

(கொழும்பு)

மூதூர் பாலத்தோப்பூர் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். மோட்டார் சைக்கிள் ஒன்று லொறியுடன் மோதியதில் இவர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பெண் ஒருவரும் அடங்கியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இதேவேளை ஹட்டன் போடைஸ் தோட்டத்தில் மோட்டார் சைக்கிளொன்று விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதிக வேகத்துடன் செலுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் கட்டுப்பபாட்டை இழந்து மரத்தில் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் செலுத்திய போது குறித்த இளைஞன் தலைக் கவசம் அணிந்திருக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு முனைத்தீவில் நேற்று மாலை ஆட்டோ ஒன்று மோதி இடம்பெற்ற வாகன விபத் தில் தனுஷ் என்ற 6 வயது சிறுவன் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளான்.

## திருகோணமலையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை கடற்பரப்பில் சில நாட்களுக்கு முன்னர் மீனவர்கள் இருதரப்பினரிடையே ஏற்பட்ட மோதல் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்துமாறு கோரி திருகோண மலை நகரில் மீனவர்கள் நேற்று முற்பகல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மீனவர்களுக்கு இடையில் சில நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட மோதலில் ஒருவர் காணாமல் போயுள்ளதாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் குறிப்பிட்டனர். இதன்போது காயமடைந்த மேலும் 3 மீனவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும் இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை 2 சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டுள்ளதாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மோதலுடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை துறைமுகப் பொலிஸார் கூறினர்.

## வடக்கில் சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள்

(கொழும்பு)

வடக்கில் சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தனித்து வாழும் தாய்மார் தங்களது பிள்ளைகளை இந்த சிறுவர் பாதுகாப்பு நிலையங்களில் விட்டு வேலைக்கு செல்ல முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் இவ்வாறு சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# மின் தடை பற்றிய தகவல்

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும்

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய பகுதிகளில் இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும்,

கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் 03.07.2012 செவ்வாய்க்கிழமை, 05.07.2012 வியாழக்கிழமை, 07.07.2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரையும்

உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், யாழ். நகரம் முழுவதும், யாழ். பிரதான வீதியில் நீதிமன்ற பிரதேசம் முதல் கச்சேரி பிரதேசம் வரையான பிரதேசம் ஆகிய இடங்களில் 02.07.2012 திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.



திருகோணமலை உவர்மலைப் பகுதியில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. சிவில் பாதுகாப்புக் குழுவின் ஒத்துழைப்புடன் கடற்படை, பொலிஸ் பாதுகாப்புப்படையினர், சிவில் பாதுகாப்பு அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.